கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

KARKATHAR OPPURAVU

மலர்–15, இதழ் – 9 Volume - 15, Issue - 9	ஆவணித் திங்கள் August 2024	விலை ரூ. 25/– Price Rs. 25/-	ஆண்டு சந்தா ரூ. 300/– Annual Subscription Rs. 300/-	தமிழ் மாத இதழ் Tamil Monthly

குரோம்பேட்டை: 24, ஜிஎஸ்டி சாலை, குரோம்பேட்டை, சென்னை - 600 044
ஓரகடம்: 405/5A ஜமுனாபட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர், ஓரகடம் - 602 105

Website: www.parvathyhospital.com

மேலும் தகவல்களுக்கு: 044 2238 2248

SOLAR ROOF TOP POWER GENERATING SYSTEM
SOLAR POWER PLANT - DESIGN, ERECTION & INSTALLATION

WHY MARUTHI ?

- INTERNATIONAL STANDARD PANEL WITH 25 YEARS WARRANTY.
- 24 YEARS OF EXPERTISE IN POWER MANAGEMENT.
- END TO END SOLUTION.
- 24 X 7 SUPPORT.

CUT DOWN YOUR ELECTRICITY COST

MARUTHI POWER CONTROL SYSTEM

CALL US @ 9841828077

Email - senthil@maruthipower.com

www.maruthipower.com

S.SELVAKUMAR - C.E.O

hotel saradharam
chidambaram

ஓட்டல் சாரதாராமின்

35 வது
ஆண்டு விழா
15.11.2023

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு – குறள் (86)

பொருள் : வந்த விருந்தினர்களை மகிழ்ச்சியுடன் உபசரித்து வழியனுப்பி, வரும் விருந்தினரை ஆவலோடு எதிர்நோக்கி இருப்பவன், தேவர்களுக்கும் நல் விருந்தினன் ஆவான்.

THANK YOU
for being with us
நன்றி!

hotel saradharam chidambaram | Saradharam's LAKSHMI VILAS | SENTOSA | saradharam residency kattumannarkoil | Incredible India

Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

108 Rooms & Suites | 03 Banquet Halls

[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com

Thiruvasantham
PURE VEG

A Traditional South Indian Pure Vegetarian Restaurant

Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)

பட்டமளிப்பு விழா

மயிலாடுதுறை தாழஞ்சேரி நிலக்கிழார்/ ஆன்மீகவாதி
திரு. **R. மருதவாணன்** –திருமதி. **M. பாக்கியம்**
இணையரின் மகளாகி
மயிலாடுதுறையில் ஆரம்ப/உயர் கல்வி கற்று
சென்னை நகரத்திலே பணி அனுபவம் பெற்று
திரு. **V. குஞ்சிதபாதம்**–திருமதி. **K. சுமதி**
இணையரின் மருமகளாகி
இன்ப எளிய வாழ்க்கையை தொடர்ந்து ஏற்று
இனிய மழலைகளை அருமையாக வளர்த்து
இணையே – இணையவரின் தீவிர முயற்சியால்
இதமான அமெரிக்க Portland University யில்
இதயமகிழ முதுகலை அறிவியல் பட்டம் பெற்ற
இனிய எங்கள் இல்ல **சித்ராதேவி ஷ்யாம்சந்தர்,** BE.MS.,
நிறைநலம், மிகைவளம், உயர்பலம் கிட்டி
நிரந்தர, நல்லற இல்லறத்துடன், விரும்பிய
நிகரற்ற சரித்திரம்படைக்க சகல குடும்பத்துடன்
நீடூழி பலதலைமுறையுடன் வாழ்கபல்லாண்டு

என

நிறைமனதுடன் இணைந்து வாழ்த்தும்

R. சோமசுந்தரம் :: S. மங்கையற்கரசி

S. சரவணன் **M. வாகீசன்** **M. அசோக்ராஜன்**

S. கஜலட்சுமி **V. பிரீத்தா** **A. பிரியதர்ஷினி**

மற்றும்

T.S. ரங்கநாதன் பிள்ளை குடும்பத்தினர்

தாழஞ்சேரி, மயிலாடுதுறை மாவட்டம்

1ST TIME IN TAMBARAM
DAC
DREAM ASCEND CONQUER
DAC MARSHAL
A CUT ABOVE
Tambarathuke
Ithu Puthusu
Selaiyur, IAF Main Road
DAC
PREMIUM
HOLIDAY
HOME FESTIVAL
AVAIL PRE-EMI BENEFITS*
2&3 BHK
LIFESTYLE APARTMENTS
89* LAKHS onwards
TN/35/Building/0380/2024 dated 06.06.2024 | *T&C Apply
Member CREDAI
Scan QR for Location
100+ PROJECTS
2M+ SQFT CONSTRUCTION
2500+ HAPPY FAMILIES
For More Details Call:
93003 93003
www.dacdevelopers.com

CHIDAMBARAM SPIRITUAL STAY

146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள் வீட்டார், உறவினர்களை ஒரே இடத்தில் 50 நபர்கள் தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.

9790292444, 9790215833

முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்

- பிறந்தநாள் விழா, மஞ்சள் நீராட்டு விழா மாணவ / மாணவிகளின் Get together போன்ற சிறிய அளவில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் நடத்துவதற்கு ஏதுவாக எங்கள் விடுதி அமைந்துள்ளது.
- மருத்துவ காரணங்கள் மற்றும் தற்காலிகமாக சில நாட்கள் தங்க சமையலறை வசதியுடன் கூடிய தங்குமிடம் எங்களிடம் உள்ளது. இவ்வசதி வேண்டுவோர் மேற்கண்ட செல் நம்பர்களை நேரடியாக தொடர்பு கொள்ளவும்.
- Free Driver Accommodation Available

இதழின் உள்ளே....

புத்தகம் வாசித்தலின் முக்கியத்துவம் 11
சில்லரை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு..... 14
சங்க பலகை 17
"நகரமா ? நரகமா ?" 23
சிறுவர் பகுதி..... 28–31
ஆதி கைலாஷ்.....45
மணமகன் / மணமகள் தேவை 48–51
சிவஞான போதம் தமிழ்நூல் – ஆய்வு..... 55
சங்க நிகழ்வுகள் 58

கார்காத்தார் ஒப்புரவு
கார்காத்தார் சங்கம் (சென்னை)
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

ஆயுள் சந்தா ரூ. 2000/-
ஆண்டு சந்தா ரூ. 300/-

வெளியீட்டாளர் : **கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
மீ. நடராஜன்
மயூர் பிரிண்டர்ஸ்
எண். 1/7, கோபால் தெரு,
சைதாப்பேட்டை ரோடு, வடபழனி,
சென்னை – 600 026. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.

ஏடு இட்டோர் இயல்

கார்குலச் சொந்தங்களுக்கு கார்காத்தார் ஒப்புரவின் இனிய வணக்கங்கள். முழு முதற் கடவுளான விநாயகர், காக்கும் கடவுளாம் திருமாலின் வாமன, கண்ணன் அவதாரங்கள் அவதரித்த மாதம் ஆவணி. சிங்க மாதம் என்றும், மாதங்களின் அரசன் என்றும் இம் மாதம் போற்றப்படுகிறது. இம் மாதம் வரும் விநாயகர் சதுர்த்தி, கிருஷ்ணஜெயந்தி, மகா சங்கடஹர சதுர்த்தி போன்ற பண்டிகைகளை சீரும், சிறப்புமாக நமது குல மக்கள் கொண்டாடிட வாழ்த்துகிறோம்.

நமது பாரதத்தில் திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் 10 முறையும், திரு. சிதம்பரம் அவர்கள் 9 முறையும், திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் 8 முறையும் இதுவரை பட்ஜெட் தாக்கல் செய்துள்ளனர். அதற்கடுத்ததாக நமது தற்போதைய நிதி அமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்கள் 7 ஆவது முறையாக பாராளுமன்றத்தில் பட்ஜெட் தாக்கல் செய்துள்ளார். திரு. மோடி அவர்கள் தலைமை ஏற்றிருக்கும் மூன்றாவது தே.ஜ. கூட்டணி ஆட்சியின் முதலாவது பட்ஜெட் இது. இந்த பட்ஜெட் கலவையான விமர்சனங்களைப் பெற்றுள்ளது. தங்கம், வெள்ளி, செல்போன், புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு வரிச் சலுகை அளிக்கப்பட்டுள்ளதால், சிறிது விலை குறைய வாய்ப்பு உள்ளது. அதே நேரத்தில் சில வகையான உரங்கள், தொலை தொடர்பு சாதனங்கள் விலை உயர வாய்ப்புஉள்ளது. ஒரு சில மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகம் போன்ற மாநிலங்களுக்கு எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை. மத்திய அரசு இம் மாநிலங்களை வஞ்சித்து விட்டது என்ற தோற்றம் உருவாகியுள்ளது. வருங்காலத்தில் இந்த நிலைமை சீர் செய்யப்படுமென நம்புவோம்.

நான்கு வருடங்களுக்கொரு முறை நடைபெறும் ஒலிம்பிக் திருவிழா, ஜூலை 26 முதல் ஆகஸ்ட் 11 வரையில் பிரான்ஸ் நாட்டின் தலைநகரம் பாரிஸில் நடைபெறுகிறது. துப்பாக்கி சுடுதலின் 21 வீரர்களும், தடகளத்தில் 28 வீரர்களென சுமார் 120 இந்திய விளையாட்டு விரர்கள் பங்கேற்றுள்ளனர். 2021 டோக்கியோ ஒலிம்பிக்கில் 7 பதக்கங்களை வென்ற நாம், இம்முறை இரட்டை இலக்கத்தில் பதக்கங்கள் வென்றிட வாழ்த்துகிறோம்.

நமது தேசத்தை ஆண்ட இங்கிலாந்தின் தேர்தலில் இந்திய வம்சாவளியினர் 107 பேர் போட்டியிட்டதில் 26 பேர் வெற்றி பெற்றுள்ளனர். வெற்றி பெற்ற முக்கிய இந்திய வம்சாவளியினர் ரிஷிசுனக், ப்ரீத் கவுர்கில், பிரீத்தி படேல், கனிஷ்கா நாராயண் ஆவர். உமா குமரன் எனும் இலங்கை வம்சாவளி தமிழரும் வெற்றி பெற்றுள்ளார். கோட்டயத்தைச் சேர்ந்த சோஜன் ஜோசப் என்பவர் தொழிலாளர் கட்சியின் வேட்பாளராக கென்ட் எனும் மாகாணத்திலுள்ள ஆஷ்போர்டு பார்லிமெண்ட் உறுப்பினராகி உள்ளார் என்பது இந்தியர்களான நமக்கும் பெருமையே!

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு, சூளை மேடு, சென்னை–9
தொலைபேசி : 044 24724882

அன்புடையீர் வணக்கம்.

சென்னை சூளைமேடு சௌராஷ்டிரா நகர், 10வது தெருவில் அமைந்துள்ள கார்காத்தார் சங்க கட்டிடத்தில் உள்ள 'B' பிளாக்கில் மகளிர் தங்கும் விடுதி வருகின்ற செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் செயல்பட உள்ளது என்பதை மகிழ்வுடன் தெரிவித்து கொள்கிறோம். வேலைக்கு செல்லும் மகளிர் மற்றும் கல்லூரியில் பயிலும் மகளிர் மாத வாடகையில் தங்குவதற்குரிய அனைத்து வசதிகளுடன் விடுதி செயல்பட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. தேவையுள்ளவர்கள் மேற்படி முகவரியில் / தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

– கைலை. சண்முகம்,
செயலாளர்.

சென்னை கார்காத்தார் சங்க திருவிளக்கு பூஜை

அனைத்து வேண்டுதல்களும் நிறைவேறும். ஆடி ஞாயிறு (28–7–2024) அன்று சங்க வளாகத்தில் மாலை சுமார் 4.15 மணி அளவில், பிள்ளையார் துதி, லலிதாசகஸ்ரநாமம், 'காதலாகிகசிந்து' எனும்தேவாரம் மற்றும் அபிராமி அந்தாதியுடன் மாலைப்பொழுது இனிதே தொடங்கியது. 65–க்கும் அதிகமான மகளிர் விளக்கு பூஜையில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு ஒரு ட்ரேயில் பூஜைக்குரிய அனைத்துப் பொருட்களும் வைத்து வழங்கப்பட்டது. மாலை 6 மணிக்கு திருமதி. வனஜா இளங்கோவன் கணேச காயத்ரியும், ஷோடர் மந்திரமும் கூறபூஜை தொடர்ந்தது. அடுத்து திருமதிகள் குந்தவி, வனஜா, சிவனருள் சுப்ரமணியன் போற்றிப் பாடல்களைப் பாட, மகளிர் விளக்கு பூஜை விமரிசையாக நடைபெற்றது. ஆரத்தி பாடலை திருமதிகள் ஸ்ரீமதி, சுப்பு, லலிதா அவர்கள் இனிமையாகப் பாட, தேவிக்கு தீபம் காட்டப்பட்டது. பின் ஆலம் சுற்றி பூஜை இனிதே நிறைவுற்றது. சுவையான இரவு சிற்றுண்டிக்குப் பின் அனைவரும் மகிழ்ச்சியுடன் தத்தம் இல்லம் திரும்பினார். விழாவிற்கு வருகை புரிந்த மாநில கார்காத்தார் கூட்டமைப்பு தலைவர் திரு. K.K.R. சுரேஷ், அனைத்து வேளாளர் கூட்டமைப்பு தலைவர் டாக்டர் ரவீந்திரன், முன்னாள் சங்கத் தலைவர்கள் திருவாளர்கள் இளங்கோவன், சிவகுமார், கனகசுப்ரமணியன், தலைவர் திரு. சோமசுந்தரம், செயலர் கலை சண்முகம் மற்றும் நம் சங்க உறுப்பினர்கள் பிற சங்கங்களில் இருந்தும் வந்திருந்த கார்குலச் சொந்தங்கள், கலந்து கொண்டு சிறப்பித்த கார்குல மகளிர் அனைவருக்கும் எங்களின் மனமார்ந்த வணக்கங்களும், நன்றிகளும் இப்பூஜை சிறப்பாக நடக்க உதவிய, உழைத்த திருமதிகள். குந்தவி, வனஜா, அல்லி, உமா, திருவாளர்கள். உதயகுமார், ருக்மாங்கதன், முத்துகுமார், கனகசுப்ரமணியன், கோவிந்தராஜன், முத்தையன் மற்றும் எங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கும், ஏனையோருக்கும் எங்களின்

மனமார்ந்த நன்றி ! நன்றி ! நன்றி !

– திருமதி. சிவனருள் சுப்ரமணியன்.

புத்தகம் வாசித்தலின் முக்கியத்துவம்

அறிவையும், எண்ணத்தையும் அதிகப்படுத்த உதவும் வாசிப்பின் முக்கியத்துவம் கட்டுரை பதிவை இதில் காணலாம்.

வாழ்வில் வெற்றியடைந்த பல மனிதர்களும் கூறும் ஒரே விஷயம் வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுங்கள் என்பது தான். ஏனென்றால் அவர்கள் வாசிப்பின் முக்கியத்துவத்தை நன்கு உணர்ந்துள்ளார்கள்.

வாசிப்பு மனிதனை பூரணப்படுத்தும். மனிதன் முழுமை பெற வேண்டுமெனில் வாசிப்பு அவசியம். மனித அறிவில் வாசிப்பு முக்கிய இடம் வகிக்கின்றது.

உலகில் உயர்ந்த இடத்திலுள்ள பலர் வாசிப்பினால் உயர்ந்துள்ளனர். அன்றாடம் நாம் வாசிப்பதன் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம்.

ஆனால் இன்றைய நவீன உலகில் தொழில் நுட்ப பயன்பட்டால் வாசிப்பு பழக்கம் அருகி வருகின்றது. எனவே நாம் ஒவ்வொருவரும் சிறுவயதிலிருந்தே வீணான பொழுது போக்குகளில் நேரத்தை கழிப்பதற்கு பதிலாக நல்ல புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

கடைசியாக நீங்கள் எப்போது ஒரு புத்தகத்தை, சஞ்சிகையை அல்லது பத்திரிகையை வாசித்து முடித்தீர்கள் என்று ஞாபகம் இருக்கின்றதா ? அறவே வாசிப்புப் பழக்கமற்ற எண்ணற்ற நபர்களில் நீங்களும் ஒருவர் எனில் உங்களுக்கான கட்டுரை தான் இது. வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள் ஏராளம். அவற்றுள் 10 நன்மைகளைப் பற்றி பார்ப்போம்.

1. மன தூண்டுதல் (Mental Stimulation) :

வாசிப்புப் பழக்கமானது உங்கள் மூளையை சுறுசுறுப்பாகவும், ஈடுபாட்டுடனும் வைத்திருப்பதோடு ஆல்சைமர் மற்றும் டிமென்ஷியா போன்ற நரம்பியல் நோய்கள் (அதாவது இது அறிவாற்றல் இழப்பின் அல்லது மறதி நோயின் மிகப் பொதுவான வடிவம் ஆக பார்க்கப்படுகின்றது) ஏற்படுவதை வாசிப்புப் பழக்கமானது பெரும்பாலும் தடுக்கின்றது. மேலும் இத்தகைய நோய்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு முயற்சிக்கின்றது என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

உடலில் உள்ள மற்ற தசைகளைப் போலவே, மூளைக்கும் அதை வலுவாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உடற்பயிற்சி தேவைப்படுகிறது. எனவே புதிர்களைச் செய்வது மற்றும் சதுரங்கம் போன்ற விளையாட்டுகளை விளையாட பழக்கப்படுத்திக் கொள்வதும் உங்கள் அறிவாற்றலை தூண்டுதலுக்கு உதவியாக இருக்கும் என்று கண்டறியப்பட்டுள்ளது.

2. அழுத்த குறைப்பு (Stress Reduction) :

வேலையில் உங்கள் தனிப்பட்ட உறவுகளில், அல்லது அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் எண்ணற்ற பிற பிரச்சினைகளில் உங்களுக்கு எவ்வளவு மன அழுத்தம் இருந்தாலும் ஒரு சிறந்த கதையினை நீங்கள் வாசிக்கும் அனுபவமானது இவை அனைத்தையும் உங்களை மறக்கச் செய்துவிடும்.

நன்கு எழுதப்பட்ட நாவல் உங்களை ஒரு நல்ல மனநிலைக்கு கொண்டு சென்று விடும். அதே நேரத்தில் ஒரு ஈர்க்கக்கூடிய கட்டுரை உங்களை திசை திருப்பி உங்களின் பதட்டங்களை மறக்கடிக்க செய்து உங்களை ஒரு ஆறுதலான, ஓய்வான மனநிலையை வழங்கும்.

3. அறிவு (Knowledge) :

நீங்கள் வாசிக்கும் ஒவ்வொரு விஷயமும் உங்கள் அறிவை அதிகரிக்கச் செய்வதோடு புதிய விஷயங்களை தெரிந்து கொண்டே நபராக உங்களை மாற்றும். உங்களிடம் தோன்றும் அதிகமான அறிவானது நீங்கள் எதிர்கொள்ளும் எந்தவொரு சவாலையும் சமாளிக்க சிறந்த ஆயுதம் ஆகும்.

சுருக்கமாக சொல்ல வேண்டுமெனில் நாம் எதிர்காலத்தில் எத்தகைய மோசமான சூழ்நிலைக்கும் முகம் கொடுக்க வேண்டி வரலாம். இப்போது நமக்குப் பாதுகாப்பாக இருக்கும் வேலை, உடைமைகள், பணம், ஏன் உடல்நலம் கூட நமக்கு இழக்க வேண்டிய சூழ்நிலை வரலாம். ஆனால் நாம் பெற்றுக் கொள்ளும் அறிவானதை போன்றவற்றை ஒரு போதும் ஒருவராலும் நம்மிடமிருந்து எடுக்க முடியாது.

4. சொல் விரிவாக்கம் (Vocabulary Expansion) :

அதாவது நீங்கள் எவ்வளவு அதிகமாகப் படிக்கிறீர்களோ அவ்வளவு அதிகமான சொற்களை, வார்த்தைகளை உங்களால் அறிந்து கொள்ள முடியும். அது உங்கள் சொந்த மொழியிலோ அல்லது பிற மொழி நூல்களாகவோ கூட அமைந்திருக்கலாம். இது உங்களை அறியாமலே உங்கள் சொல் வளத்தை அதிகப்படுத்தி விடுகின்றது.

எந்தவொரு தொழிலிலும் சிறந்த பேச்சுவண்மையானது உங்களை தனித்து சிறப்பித்துக்காட்டும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. உங்களால் எந்த ஒரு விஷயத்தைப் பற்றியும் தெளிவாகவும் தன்னம்பிக்கையுடனும் அதிகம் பேச முடியும். பரந்த சொல்லாற்றலற்ற மற்றும் இலக்கியத்தைப் பற்றிய விழிப்புணர்வு

இல்லாதவர்களைக் காட்டிலும் நன்கு கற்கக் கூடிய பல்வேறு தலைப்புகளில் அறிவுள்ளவர்கள் பதவி உயர்வுகளை விரைவாகவும் அடிக்கடியும் பெறக்கூடிய வாய்ப்புக்களை அடைகிறார்கள்.

புதிய மொழிகளைக் கற்பதற்கு புத்தகங்களைப் படிப்பதும் மிக முக்கியம் ஆகும். ஏனெனில் பிற மெழிகளைக் கற்பதானது எழுத்தாற்றலை மற்றும் பேச்சாற்றலை வளப்படுத்த மிகச் சிறந்த உத்தியாகும்.

5. நினைவு மேம்பாடு (Memory Improvement):

நீங்கள் ஒரு புத்தகத்தைப் படிக்கும் போது கதாபாத்திரங்கள், அவற்றின் பின்னணிகள், லட்சியங்கள், வரலாறு மற்றும் நுணுக்கங்கள், அத்துடன் ஒவ்வொரு கதையிலும் உங்களை கடத்திச் செல்லும், கொண்டு செல்லும் பல்வேறு விஷயங்களையும், மாற்றங்களையும் நீங்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். நினைவில் கொள்வது மிகவும் பொதுவான ஒரு விஷயம். ஆனால் மூறை என்பது அற்புதமாக நம்மால் ஆர்வத்துடன் கிரகிக்கக் கூடிய விஷயங்களை எளிதாகவே நினைவில் வைத்துக்கொள்ளும்.

ஆச்சரியப்படும் விதமாக நீங்கள் உருவாக்கும் ஒவ்வொரு புதிய நினைவகமும் புதிய பாதைகளை உங்கள் மூளையில் உருவாக்குவதோடு மற்றும் ஏற்கனவே உள்ள உங்கள் நினைவாற்றலையும் பலப்படுத்துகிறது என்றால் உங்களால் நம்ப முடியுமா ?

6. வலுவான பகுப்பாய்வு சிந்தனை திறன் (Stronger Analytical thinking Skills) :

நீங்கள் எப்போதாவது ஒரு அற்புதமான மர்ம நாவலைப் படித்திருக்கிறீர்களா ? புத்தகத்தை முடிப்பதற்கு முன்பு அந்த மர்ம நாவல் இப்படித்தான் முடியும் என நீங்களாகவே அனுமானித்திருக்கிறீர்களா ? இது ஏனென்று நீங்கள் சிந்தித்ததுண்டா ? நமது மூளையானது தனக்கு வழங்கப்பட்ட அனைத்து விவரங்களையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு துப்பறியும் திறன் (whidunit) மூலம் அவற்றை வரிசைப்படுத்தி விமர்சன மற்றும் பகுப்பாய்வு செய்து ஒரு தீர்மானத்திற்கு வருகின்றது.

விவரங்களை பகுப்பாய்வு செய்வதற்கான அதே திறன்தான் ஏதேனும் சதித்திட்டத்தை விமர்சிக்கும் போதும் மனிதர்களுக்கு வருகின்றது.

மற்றவர்களுடன் நீங்கள் வாசித்த புத்தகத்தைப் பற்றி விவாதிக்க உங்களுக்கு எப்போதாவது வாய்ப்பு கிடைத்தால் சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களையும் நீங்கள் உள்வாங்கியிருந்தால் உங்கள் கருத்துக்களை தெளிவாக உங்களால் கூறவும், கலந்துரையாடவும், விவாதிக்கவும் உங்களால் முடியும்.

7. மேம்படுத்தப்பட்ட கவனம் மற்றும் செறிவு (Improved Focus and Concentration) :

இணைய உலகில் ஒவ்வொரு நாளும் நாம் பல மில்லியன் விஷயங்களில் நாம் கவனம் செலுத்துகின்றோம். ஒரு 5 நிமிட இடைவெளியில் சராசரி நபர் ஒருவர் ஒரு குறித்த பணியில் பணிபுரிந்து கொண்டே மின்னஞ்சலைச் சரிபார்ப்பது, ஓரிரு நபர்களுடன் அரட்டை அடிப்பது (Whatsapp / FB போன்றவை வழியாக), ட்விட்டரில் ஒரு கண் வைத்திருப்பது, ஸ்மார்ட்போனை கண்காணிப்பது, மற்றும் சக ஊழியர்களுடன் தொடர்பு கொள்வது போன்ற பல வேலைகளை செய்கின்றனர். இவ்வாறு ஒரே நேரத்தில் பல விஷயங்களில் ஈடுபடுவதானது மன அழுத்தத்தை அதிகரிப்பதோடு குறித்த பணியில் நமது உற்பத்தித் திறனையும் குறைவடையச் செய்கின்றது.

ஆனால் நீங்கள் ஒரு புத்தகத்தைப் படிக்கும் போது உங்கள் கவனமெல்லாம் கதையில் குவிக்கப்படுவதோடு உலகமே மறந்த நிலையில் நீங்கள் அந்த கதையோடு பயணப்பட்டுவிடுகின்றீர்கள். இது உங்களின் கவனத்தை சிதறச் செய்யாமல் ஒரே விஷயத்தை நோக்கி உங்களை நல்ல வாசிப்பானது கொண்டு செல்கின்றது.

நீங்கள் வேலைக்கு பஸ்ஸிலோ, புகையிரதத்திலோ செல்பவர் எனில் உங்கள் பயணத்தில் 15 – 20 நிமிடங்கள் படிப்பதற்கு முயற்சித்துப் பாருங்கள். நீங்கள் அலுவலகத்திற்கு வந்ததும் எவ்வளவு கவனம் செலுத்துகிறீர்கள் என்பதில் ஆச்சரியப்படுவீர்கள்.

8. சிறந்த எழுதும் திறன் (Better writing Skills):

நீங்கள் ஒரு எழுத்தாளர் எனில் வாசிப்பானது சொல்வளத்தை அதிகரிப்பதோடு மேலும் படைப்புக்களை புதிய முறையில் படைப்பதற்கும் வழிவகுக்கும். நீங்கள் உங்களுக்குப் பிடித்த நன்கு பிரபல்யமான ஒரு எழுத்தாளரின் சிறந்த வாசகர் எனில் நீங்கள் உங்கள் சொந்த எழுத்தில் படைப்புக்களை படைக்க முற்படும் போது அந்த குறித்த எழுத்தாளரின் சாயலை உங்கள் படைப்புக்கள் பிரதிபலிக்கும். ஏனென்றால் மற்ற எழுத்தாளர்களில் எழுதும் தன்மை, மற்றும் எழுதும் பணிகளைக் கவனிப்பது உங்கள் சொந்த படைப்பில் குறித்தளவு மாற்றத்தை கொண்டு வரும்.

உதாரணமாக இசைக்கலைஞர்கள் ஒருவருக்கொருவர் ஒரே மாதிரியான சாயல் கொண்ட இசை வெளியிடுவதும், ஓவியர்கள்

ஆரம்பகால ஓவியர்களின் தனித்த நுட்பங்களைப் பயன்படுத்துவதும் எவ்வாறு உள்ளதோ அவ்வாறே எழுத்தாளர்கள் மற்றவர்களின் படைப்புகளைப் படிப்பதன் மூலம் உரைநடையை எவ்வாறு வடிவமைப்பது மற்றும் தன் எழுத்தை எவ்வாறு சுவாரஸ்யமாக கொண்டு செல்வது என்றும் கற்றுக் கொள்கிறார்கள்.

9. அமைதி (Tranquility) :

ஒரு நல்ல புத்தகத்தைப் படிப்பதானது உங்கள் மன இறுக்கங்களைப் போக்குவதோடு மகத்தான உள் அமைதியையும் உங்களுக்கு தரக்கூடும்.

ஆன்மீக நூல்களைப் படிப்பது இரத்த அழுத்தத்தைக் குறைத்து மிகுந்த அமைதியைக் கொண்டுவரும். அதே நேரத்தில் உளவியல் நூல்களைப் படிப்பதானது சில மனநிலைக் கோளாறுகள் மற்றும் லேசான மனநோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

10. இலவச பொழுது போக்கு (Free Entertainment)

நம்மில் பலர் புத்தகங்களை வாங்க விரும்புகிறோம். ஆனால் எல்லோரும் அவ்வாறு வாங்குவதில்லை. ஆனால், உண்மையிலேயே புத்தகங்கள் மிகவும் விலைமதிப்பற்றவை.

நூல்கள் வாசிப்பதானது குறைந்த பட்ஜெட் பொழுது போக்காகும். நம்மில் பலர் இப்போதெல்லாம் அந்த விஷயத்தினை தவற விடுகின்றோம். நாம் வசிக்கும் ஊரில் உள்ள நூலகத்தில் ஒரு அங்கத்தவராகுவதன் மூலம் நல்ல நூல்களை வாசிக்கும் சிறந்த அனுபவத்தைப் பெறமுடியும்.

உள்ளூர் நூலகம் இல்லாத ஒரு பகுதியில் நீங்கள் வாழ நேர்ந்தால் அல்லது உங்களால் நூலகத்திற்கு செல்ல முடியாது எனத் தோன்றினால் பிரச்சினையில்லை. ஏனெனில் பெரும்பாலான நூலகங்கள் தங்கள் புத்தகங்களை PDF மற்றும் epub வடிவத்தில் தருகின்றன. இப்போது அதற்காக தனிப்பட்ட சில வலைத்தளங்களும் இயங்கி வருகின்றன. எனவே அவற்றை உங்கள் ஈ–ரீடர், ஐபாட், உங்கள் கணினித் திரை, ஸ்மார்ட் போனிலேயே இருக்கும் இடத்திலிருந்தவாறே படிக்க முடியும். இலவச மின் புத்தகங்களை பதிவிறக்கம் செய்து உங்கள் வாசிப்பை சுவைப்படுத்தலாம்.

இன்றைய இளம் தலைமுறையானது இணைத்திற்கு அடிமையான ஒரு சமுதாயமாகவே காணப்படுகின்றது. இதனால் இளையவர்களிடத்தே வாசிப்பு பழக்கம் அற்று போகின்றது, பசி தூக்கத்தையே மறந்து அதில் ஒன்றி விடுகின்றனர். இவற்றிலிருந்து அவர்களை விடுவிக்க சிறந்த வழி அவர்களுக்கு நல்ல நூல்களை அறிமுகப்படுத்துவதே ஆகும்.

சிறுவர்களாக இருக்கும் போதே பிற பொழுதுபோக்கு சாதனங்களை வழங்குவதனை நிறுத்தி அவர்களுக்குரிய புத்தகங்களை அன்பளிப்பாக வழங்கி அவர்களை வாசிப்பில் ஈடுபடுத்த வேண்டும். வளர்த்தவர்கள் அதிகளவில் இணையத்தில் மூழ்காமல் நேரத்தை ஒதுக்கி வாசிப்பில் ஈடுபட வேண்டும்.

தனிமையின் பிடியில் சிக்கித் தவிப்பவர்களுக்கு புத்தகம் ஒரு நல்ல தோழன். பொழுதை ஆரோக்கியமான வழியில் செலவழிக்காமல். வாசிப்பு நம் முன்னோர்களின் வாழ்வோடு இரண்டறக் கலந்திருக்கின்றது. அதனால் தான் அவர்களால் அதிக நூல்களை அடுத்த தலைமுறைக்காக விட்டுச் செல்ல முடிந்தது. எனவே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு எதிர்காலத் தலைமுறையினருக்கு நாமும் நன்மை செய்வோம்.

நம் குல மக்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும், அறிவினை அள்ளித்தரும் ஆசானாகவும் விளங்கும் "கார்காத்தார் ஒப்புரவு" புத்தகத்தை வாங்குங்கள், வாசியுங்கள். புத்தகம் வாசிக்கும் வண்ணத்துப் பூச்சியாக நீங்கள் மாறினால், புதுப்புது உலகங்களில், கனவுகளில், கற்பனைகளில் சிறகுகளை விரித்து ரசித்து பயணம் செய்யலாம். அந்தப் பயணம் நல்லதையே வழங்கும்!

– அர்ச்சனா சுவேதாரண்யம், பெசன்ட் நகர்,
சென்னை–90. செல் : 9943702054

பாராட்டுகிறோம்

காமதேனு அறக்கட்டளைக்கு இந்த ஆண்டு நமது சங்க உறுப்பினர் திருமிகு. S. திருஞானசம்மந்தம் அவர்கள் (தலைமை ஆசிரியர் ஓய்வு) ரூ. 10,000/– மும் அவர்கள் துணைவியார் திருமதி. ச. துர்காசெல்வி அவர்கள் (PA to Collector Rtd), தனது பங்களிப்பாக ரூ. 10,000/–ம் நன்கொடை வழங்கியுள்ளார்கள். என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவர்களுக்கு காமதேனு அறக்கட்டளை சார்பாகவும் தஞ்சை நகர கார்காத்தார் சங்கம் சார்பாகவும் மனமார்ந்த நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும் தொடர்ந்து அறக்கட்டளைக்கு வருடா வருடம் நிதி உதவி அளித்து வருகிறார்கள்.

S. மோகன்குமார், செயலாளர்.
காமதேனு அறக்கட்டளை, தஞ்சாவூர்.

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு [FDI]

[Foreign Direct Investments]

மேலையூர் ச. அன்பழகன் 9841373184

"அந்நிய முதலீடு" அடிக்கடி செய்தித்தாள்களில் அடிபட்டுக்கொண்டிருக்கும் ஒரு சொல். சொல்லப்போனால் இதனால அரசியலில் ஒரு சூறாவளியே நடந்து கொண்டிருந்தது. இப்படிப்பட்ட அந்நிய முதலீடு மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகள் பற்றிப் படித்த பலருக்கும் தெரிந்திருக்கும். அது பற்றி ஏதும் அறியாத சிலருக்காக அதனைப் பற்றி ஓரளவிற்குப் பார்ப்போம்.

மாற்றங்களுக்கு எதிர்ப்பு :

சில்லறை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு என்பது தற்போதைய நிலையிலிருந்து ஒரு மாற்றம் என்பதை எல்லோரும் அறிவார்கள். பொதுவாகவே எல்லா நாடுகளிலும் ஒரு மாற்றம் நிகழும் போது அதனால் பாதிக்கப்படுவோரால் அதற்கு எதிர்ப்பு வருவதும், பாதிக்கப்படுவோர் ஓரளவிற்கு இருந்தாலும் அதனால் பலனடையும் பொதுமக்கள் பெருமளவில் இருந்தால், காலப்போக்கில் அந்த எதிர்ப்புகள் அடங்கி மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதும் இயற்கை. கடந்த கால நிகழ்வுகளைப் பார்த்தோமானால் நம்முடைய நாடும் அதற்கு விதிவிலக்கல்ல என்பது தெரியும். அவற்றுக்கான சில உதாரணங்கள் :–

1. சுமார் 60 அல்லது 70 ஆண்டுகளுக்கு முன்னால் சிதம்பரம், மாயூரம், கும்பகோணம் போன்ற ஊர்களில் Town Bus எனப்படும் நகரப் பேருந்துகள் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட போது அதனால் பாதிக்கப்பட்ட குதிரை மற்றும் மாட்டு வண்டிக்காரர்கள் எதிர்ப்பு எழுப்பியதும், ஆனால் அந்த காலத்தில் இரண்டு ரூபாய் கொடுத்து வண்டியில் செல்லும் தூரத்தை [ரயில்வே ஸ்டேஷனிலிருந்து நகர பேருந்து நிலையம் வரை] 25 பைசா டிக்கட்டில் விரைவாகப் பயணம் செய்ய முடிந்ததற்கு பெருவாரியான பொது மக்கள் ஆதரவிருந்ததால் எதிர்ப்பு அடங்கியது.

2. இதே போல்தான் ஆட்டோ ரிக்ஷாக்கள் அறிமுகப்படுத்தப்பட்ட போது எழுந்த எதிர்ப்புகள் .

3. கணினிகள் வங்கிகளில் அறிமுகப்படுத்தப்பட்ட போது, அதனால் பலர் வேலை இழக்கும் அபாயம் இருப்பதாக சில வங்கிகளில் எழுந்த எதிர்ப்புக் குரல்கள்.

4. லாட்டிரிச் சீட்டுகளால் பல குடும்பங்கள் கஷ்டத்துக்குள்ளான போது அது தடை செய்யப்பட்ட போது அந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த முகவர்கள் வேலை இழக்கும் அபாயத்தால் எதிர்ப்புக் குரல். [பிற்காலத்தில் அவர்கள் மாற்று வேலைகள் தேடிக்கெண்டது வேறு விஷயம்]

இவை போல் மேலும் பல உதாரணங்கள் இருக்கலாம். இவற்றுக்கும் தற்போது வர இருக்கும் மாற்றத்துக்கும் இடையே ஒரு முக்கியமான வேறுபாடு உள்ளது.

மேலே சொன்ன இனங்களில் மாற்றங்களினால் வந்த வேறு ஏற்பாடுகள் உள்நாட்டில் தயாரானவைதான். [பேருந்துகள், ஆட்டோக்கள், கணினிகள் போன்றவை] ஆனால் சில காலம் முன்பாக அறிமுகப்படுத்தப்பட்ட Globalisation எனப்படும் உலகமயமாக்கப்படுதல் காரணமாக நம் நாட்டிற்கு வர்த்தகங்களில் அறிமுகமான வெளிநாட்டுப் பொருள்கள் காரணமாக உள்நாட்டில் தயாரான அவை போன்ற பொருட்களின் தயாரிப்பாளர்கள் நசித்துப் போயினர்.

உதாரணமாக கொகோ கோலா போன்ற வெளிநாட்டு குளிர்பான நிறுவனங்கள் அவர்களது நிறுவனங்களை இந்தியாவில் தொடங்கி வியாபாரம் செய்ய ஆரம்பித்ததால் கோலி சோடா போன்ற பல ஊர்களில் இருந்த சிறிய சோடா கலர் உற்பத்தி செய்து வந்த நிறுவனங்கள் நசித்துப் போயின. இருப்பினும் அத்தகைய உலகமயமாக்கல் காரணமாக கிராமப்புறக் கடைகளில் கூட குளிர்பானங்கள் போன்றவை தரமுள்ளதாகக் கிடைத்தாலும் கொக்கோ கோலா போன்ற நிறுவனங்கள் தொழிற்சாலைகள் துவங்கியதாலும் எதிர்ப்புகள் ஓரளவிற்கு அடங்கின. [இப்போதும் அந்த நிறுவன தொழிற்சாலைகளால் அப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்த வருகிறது போன்ற குற்றச்சாட்டுகள் உள்ளன. ஆனால் அவை நம் நாட்டு தொழிற்சாலைகள் துவங்கும் போதும் வரக்கூடியவைதான்]

FDI என்னும் அந்நிய முதலீடு

Foreign Direct Investments என்னும் அந்நிய முதலீடு என்னும் மாற்றத்தில் வெளி நாடுகள் சம்பந்தப்பட்டுள்ளன. அதாவது F.D.I. அனுமதிக்கப்பட்டால் அமெரிக்கா போன்ற நாடுகளில் உள்ள வால் மார்ட் [Wal Mart] போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் நம் நாட்டில் சில்லரை வர்த்தகத்தில் முதலீடு செய்யும். அப்படிச்செய்வதன் மூலம் இந்தியப் பொருளாதாரத்தில் அவை ஒரு முக்கிய இடத்தைப் பெறும். வியாபாரத்தில் உள்ள இதர போட்டியாளர்களைச் சமாளிக்க அவர்கள் ஒரு கொள்கை வைத்திருப்பார்கள். அதாவது தொடங்கப்பட்ட காலத்தில் அவர்கள் பொருட்களை மற்ற போட்டி வணிகர்களை விடக் குறைவாக

விற்பார்கள். அதன் விளைவாக இதர வணிக நிறுவனங்கள் சில மாதங்களில் தங்கள் நிறுவனத்தை மூடும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள். அதன் பிறகு அத்தகைய வெளிநாட்டு நிறுவனங்கள் போட்டியாளர் யாரும் இல்லாத நிலையில் பொருட்களின் விலையை உயர்த்தி விடுவார்கள்.

There are four main working pillars of FDI. They are financial collaborations, technical collaborations and joint ventures, capital markets via Euro issues, and private placements or preferential allotments. There are two types of FDI, one is inward FDI and second is outward FDI. Ongoing news suggests that largest retailer Wal-Mart has demanded for 51% of international dealings in FDI in Indian markets which had called nationwide strike. From positive and negatived asaspects FDI has its own advantages and disadvantages.

அந்நிய முதலீட்டால் வரும் தீமைகள் என சொல்லப்படுபவை

ஏற்கனவே கூறியபடி வரக்கூடிய மாற்றத்தால் பாதிக்கப்படுபவர்கள் அதனை எதிர்ப்பதற்குக் கூறப்படும் காரணங்கள் :–

* சில்லரை வர்த்தகத்தில் அந்நிய முதலீடு வந்தால் இந்தியாவில் உள்ள ஏறத்தாழ 50 மில்லியன் வர்த்தகர்கள் பாதிக்கப்படுவார்கள்.

* அந்நிய நிறுவனங்களில் முதலீடு செய்யும் அளவு மற்றும் இலாபப் பங்கீடு இவற்றுக்கான விகிதாச்சாரம் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

* பொருளாதாரத்தில் பின் தங்கிய மக்கள் பொருட்களின் விலை உயர்வால் சங்கடத்துக்கு உள்ளாவார்கள்.

* சில்லரை வர்த்தகங்கள் நஷ்டத்துக்கு ஆளாவார்கள்.

* அத்தகைய வெளிநாட்டு நிறுவனங்கள் அமைக்கவும் பல்பொருள் அங்காடிகள் பெரியவைகளாக இருக்குமாதலால் வெகு தூரத்தில் நிறைய காலி இடம் இருக்கும் இடத்தில்தான் அமையும் எனவே பொது மக்கள் அதிக தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கும்.

* அங்கு வேலை செய்யும் பணியாளர்களின் வேலை மற்றும் இதர விஷயங்கள் பற்றிய கொள்கை மற்றும் வேலை உத்தரவாதம் போன்றவை இன்னும் குறிப்பிடப்படவில்லை.

* பணவீக்கம் அதிகரிக்கும்.

* சில்லரை வணிகத்தில் அந்நியர் நுழைந்தால் இந்தியா மீண்டும் அந்நாடுகளுககு அடிமையாக நேரிடலாம்.

அந்நிய முதலீட்டால் உண்டாகும் நன்மைகள் என சொல்லப்படுபவை.

* பல்வேறு வெளிநாட்டுப் பொருள்களை வாங்கி விற்பதால் ஏற்படும் பொருளாதார வளர்ச்சி.

* மத்தியில் ஆளும் U.P.A. அரசின் கணிப்புப்படி மூன்றாண்டுகளில் சுமார் ஒரு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

* பில்லியன் டாலர்கள் இந்திய சந்தையில் முதலீடு செய்யப்படும்.

* பல வெளிநாடுகளுடன் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் பரவும்.

* விவசாயிகள் அவர்களுடைய விளைபொருளுக்கு நல்ல விலை பெறுவார்கள்.

சில்லறை வர்த்தகத்தினால் பாதிக்கப்படுபவர்கள் மேலே சொன்ன காரணங்களால் அதனை எதிர்க்கிறார்கள். அதே போல் அதனை ஆதரிப்பவர்கள் அதற்கான காரணங்களைக் கூறுகிறார்கள். மத்திய அரசு சார்பில் சொல்லப்படுவது அதை அமல்படுத்துவது அந்தந்த மாநிலங்களின் விருப்பத்தைப் பொறுத்தது என்பதாகும். தற்போதைய சூழலில் தமிழக அரசு அதனை ஆதரிப்பதாகத் தெரியவில்லை. ஏறத்தாழ 21 மாநிலங்கள் ஆதரவு தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் இந்நிய நாடாளும் மன்றத்தின் இரு அவைகளிலும் அதை அமல்படுத்த அரசு ஆதரவு பெற்றுள்ளது.

நம் நாட்டு சூழலுக்கு ஏற்புடையதா?

1. இடப்பிரச்சனை

அமெரிக்கா போன்ற நாடுகள் பரப்பளவில் நம் நாட்டை விட மிகப் பெரியவை. மக்கள் தொகை நம்மைக்காட்டிலும் மிகக்குறைவு, அங்கெல்லாம் நகரின் மத்தியில் வால்மார்ட் K. மார்ட் போன்ற பெரிய வர்த்தக நிறுவனங்கள் அமைக்கவும் அவற்றுக்கேற்ற வாகனங்கள் நிறுத்துமிடம் அமைக்கவும் நிறைய இட வசதி உண்டு நகருக்கு வெகு தூரத்தில் அமைத்தாலும் அங்கு செல்வதற்கு பெரும்பாலானோரிடம் கார் வசதி உண்டு.

நம் நாட்டில் குறிப்பிட்ட [பத்து லட்சத்துக்கு மேல்] மக்கள்தொகை உள்ள ஊர்களில் மட்டுமே அமல்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது. அத்தகைய சென்னை மதுரை கோவை திருச்சி போன்ற ஊர்களில்

நகரின் மத்தியில் அவ்வளவு இடம் கிடைப்பது கடினம் நகர எல்லைக்கு வெளியே அமைந்தால் அவ்வளவு தூரம் அன்றாடம் எல்லோரும் சென்று வர சொந்த வாகனங்கள் எல்லோரிடமும் இருக்காது.

2. விலைப்பிரச்சினை

வெளிநாடுகளில் JCPenny, Macys, Sears போன்ற பெரிய வர்த்தக நிறுவனங்களில் விற்கும் [இந்தியா, பாகிஸ்தான், சீனா, பங்களாதேஷ், தைவான் போன்ற நாடுகளில் தயாரானவை] ஆடைகளைக் காட்டிலும் அதே நாடுகளில் தயாரான அதே மாதிரியான ஆடைகள் அவற்றைக் காட்டிலும் பல மடங்கு குறைந்த விலையில் வால் மார்ட்டில் கிடைப்பதால் நடுத்தர மக்கள் பயன் அடைகிறார்கள்.

ஆனால் நம் நாட்டில் நிலைமை அப்படியில்லை. நம் நாட்டில் விற்கப்படும் ஆடைகளில் பெரும்பாலானவை நம் நாட்டிலேயே தயாரனவைதான் ரேமாண்ட்ஸ் பாம்பே டையிங் போன்ற பெரிய நிறுவன ஆடைகள் விலை சற்று கூடுதலாக இருந்தாலும் சாதாரண மற்றும் நடுத்தர மக்கள் வாங்கக் கூடியவிலையில் தி.நகர் போன்ற இடங்களில் நிறைய கடைகளில் கிடைக்கும் சூழ் நிலையில் வால்மார்ட் அதைவிடக் குறைவாக கொடுக்குமா ?

3. Return of Goods and Sale

அமெரிக்காவில் உள்ளது போல் இங்கேயும் பில்லுடன் வாங்கிய பொருளை திருப்பிக் கொடுத்தால் வால் மார்ட் ஏற்றுக்கொள்ளுமா ? அங்குள்ளது போல் பண்டிகை காலம் முடிந்த பிறகு ஆடைகள் மற்றும் அப்பண்டிகைக்காக விற்பனைக்கு வந்த பொருள்களை 80%, 90% என்ற அதிரடித் தள்ளுபடி Sales இங்கேயும் விஸ்தரிக்கப்படுமா ?

இவற்றுக்கெல்லாம் விடை அந்நிய முதலீடு நடைமுறைக்கு வரும்போதுதான் தெரியும்

[funinstore இணைய தளத்திலிருந்து தொகுத்து வழங்கியவர் மேலையூர் ச. அன்பழகன். துரைப்பாக்கம், சென்னை. 97]

ஓர் அறிவிப்பு

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள் ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25ஆம் தேதிக்குள் அனுப்பபடவேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் கீழே சங்கத்தின் தலைவர் / செயலரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையுடனும் அனுப்பப்படவேண்டும்.

- செய்திகள், கட்டுரைகளை கூட்டவோ, குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க விழாக்கள் பற்றிய செய்திகள் சுருக்கமாகவும், தெளிவாகவும், முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்கள் கையொப்பத்துடன் அனுப்பப்படவேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

Online fund Transfer Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்

தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,
எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.
என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.

- கார்காத்தார் ஒப்புரவு

சங்க பலகை

பங்கு பெறுவோர் : ஆண்டாள், பிரியா, மீனா, சித்ரா, வசுமதி, கோமதி, தீபிகா, கௌரி.

இடம் : கிண்டி குழந்தைகள் பூங்கா

மகளிர் அனைவரும் மாலை சுமார் 4 மணி அளவில் கிண்டி குழந்தைகள் பூங்காவில் குழுமினர்.

சித்ராஒஆண்டாளக்கா! நாம் முதலில் ஆவணி மாத சிறப்புகளைப்பற்றி பேசலாமா?

தீபிகா : இந்த மாசம் பிள்ளையார் சதுர்த்தி, கிருஷ்ண ஜெயந்தி வரும்ல? அதைத் தவிர வேறேதேனும் உள்ளதா?

மீனா : ஆவணியை அற்புதங்கள் நிறைந்த மாதமென்றும், மாதங்களில் சிங்க மாதம்; மாதங்களின் அரசன் என்றும் சொல்லப்படுகிறது.

ஆண்டாள் : வினை தீர்க்கும் விநாயகர் அவதரித்த மாதம். பெருமாளின் வாமன அவதாரம், கண்ணன் அவதாரம் தோன்றிய மாதம். அம்மனுக்கு வரலட்சுமி பூஜை செய்யும் மாதம் சூரிய பகவான் தனது சொந்த வீடான சிம்மராசியில் பயணிக்க துவங்கும் மாதம் ஆவணி.

கௌரி : கேரளாவில் ஆவணிதான் ஆண்டின் முதல் மாதமாக கருதப்படுகிறது. இந்த மாசத்துலே வர்ற திருவோணம் நட்சத்திரத்தன்று, அவர்களின் பேரரசன் மகாபலி கேரளாவைச் சுற்றிப் பார்க்க வருவதாக ஐதீகம்.

வசுமதி : வடக்கே இது ஷ்ராவண மாதம் எனப்படும். இம்மாத பௌர்ணமியில் 'ரக்ஷபந்தன்' எனும் விழாவினை விமரிசையாக கொண்டாடுவார்கள். சகோதரன் கரத்தில் சகோதரி ரட்சை கட்டி, இனிப்பு கொடுத்து, பாதுகாப்பு கோருவதாக கருதுவர். சகோதரன் பதிலுக்கு அன்பளிப்பு கொடுப்பான்.

கோமதி : இந்த மாசம் வேதம் கற்றுக்கொள்ள தொடக்க மாதம். பூணூல் மாற்றும் சடங்கு ஆவணி அவிட்டம் அன்று சிறப்பாக, வீட்டின் விருந்துடன் கொண்டாடுகிறார்கள். இளையான் குடி மாற நாயனார், குலச்சிறை நாயனார், திருநீலகண்ட நாயனார், அதிபத்த நாயனார் போன்றோரின் குருபூஜை இம்மாதத்தில் வருகிறது.

ஆண்டாள் : இந்த மாசம் செய்யப்படும் வழிபாடுகள் முக்கியமானவை என்று கூறுவர். ஈசன் ஆலகால விஷத்தை ஏற்று, நீலகண்டனாகியதும் இம்மாதம்தான்.

மீனா : ஆவணி மூலம், ஆவணி ஞாயிறு, ஆவணி அவிட்டம், புத்ரதா ஏகாதசி, துழந்தைப் பேறு கிடைக்க) காமிகா ஏகாதசி (மோட்சம் கிடைக்க), வரலட்சுமி விரதம் உள்ளிட்ட பல விரத நாட்கள் இந்த மாசத்தில் உள்ளன. புதிதாக திருமணமான பெண்கள் மாங்கல்ய பலம் பெற ஆவணி செவ்வாய் அல்லது வெள்ளிக்கிழமையில் மங்களகௌரி விரதம் அனுஷ்டிப்பர்.

சித்ரா : ஆண்டாளக்கா! முக்கியமான பண்டிகைகளை எப்படி கொண்டாடணும்னு சொல்லுங்க அக்கா!

ஆண்டாள் : ஆவணி மாத வளர்பிறை சதுர்த்தி தான் விநாயகர் சதுர்த்தி. ஒரு நல்ல நாளில் விநாயகர் உருவ பொம்மை வாங்கி வந்து சதுர்த்தி அன்று படைக்கும் வழக்கமும் உள்ளது. வீட்டில் உள்ள பிள்ளையார் சிலையோ, படமோ அத்துடன் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்தும் வணங்கலாம். விளக்கேற்றி, அருகம்புல், வெள்ளெருக்கு, செம்பருத்தி ஆகியவை சாற்றி, மதியம் சர்க்கரைப் பொங்கல், சுண்டல், வடை நைவேத்தியம் செய்யணும். சாயந்தரம் மோதகம், அவல்பொறி, கொழுக்கட்டை, அப்பம், பழவகைகளுடன் விளாம்பழம் வைத்தும் படைக்க வேண்டும்.

வசுமதி : மகாராஷ்டிராவில் கணேஷ் சதுர்த்தி பாலகங்காதர திலகரால் சமூக வழிபாடாக அறிமுகப்படுத்தப்பட்டது. அங்கு ஒவ்வொரு பகுதியிலும் பணம் வசூலித்து, பிள்ளையார் பொம்மைகளை முதல் நாள் மாலை வீட்டிலும், பொது இடத்தில் பந்தல் அமைத்தும் வைப்பர். சதுர்த்தி தினத்திலிருந்து 10 நாட்கள் மராத்திய மாநிலமே கொண்டாட்டத்தில் திளைக்கும். மக்கள் உறவினர்களையும், நண்பர்களையும் தங்கள் வீட்டு கணபதியைத் தரிசிக்க அழைப்பர்.

சித்ரா : வசு கூறியது போல, மும்பையில் படுகோலாகலமாக இருக்கும். அநேக வடிவங்களில் கணேசனை அமைத்து, அந்தந்த பகுதிகளில் இருக்கும் பொதுப்பந்தலுக்கு ஆட்டம், பாட்டத்துடன் அழைத்து வருவர். பந்தலும், பிள்ளையாரும் அவ்வளவு அழகாக இருக்கும். மக்கள் தினமும் கூட்டம் கூட்டமாக ஒவ்வொரு பிள்ளையாரையும் சென்று தரிசிப்பது வழக்கம். லால்பாகி ராஜா, மாதுங்கா கணபதி, திலக் நகர் பிள்ளையார் மிகவும் பிரசித்து பெற்றவை. தினமும் மூன்று வேளை பூஜை; நைவேத்தியம் தினமும் ஒரு

இரண்டு வீட்டிலிருந்து சுண்டல் வரும், மற்றவர்கள் பழம், மோதகம் (பாலில் செய்வது), இனிப்பு வகைகள் என கொண்டு வருவர். பந்தாம் நாள் விசர்ஜன் நடக்கும். பவாய் ஏரி, பிரபாதேவி, வெள்ளி, மகாலட்சுமி, சௌபாத்தி கடற்கரைகளில் கூட்டம் அலை போதும்.

ஆண்டாள் : நல்லா detail ஆக இரண்டு பேரும் சொல்லி இருக்கீங்க. இப்ப கிருஷ்ணனுக்கு வருவோம். கிருஷ்ண ஜெயந்தி ஆவணி மாத தேய்பிறை அஷ்டமியோடு வரும் ரோகிணி நட்சத்திரத்தன்று கொண்டாடுகிறோம். கண்ணன் குழந்தையாக நம் வீட்டுற்கு வருவதாக நினைத்து, வாசற்படியில் இருந்து பூஜை அறை வரை சிறு சிறு பாதங்களை வரைவர். கண்ணனுக்குப் பிரியமான பால், அவல் வெண்ணெய், இனிப்பு சீடை, உப்பு சீடை, முறுக்கு, அதிரசம், தேன்குழல், பால் திரட்டுப்பால் மற்றும் அனைத்து பழங்களும் முன் இரவில் படைத்து வழிபடுவோம். அடுத்த நாள் உறியடி விழா நடக்கும். கிராமங்களில் தெருவில் இரண்டு கம்புகளை நட்டு, உறியைக் கட்டி, சிறுவர்கள், இளைஞர்கள் குழுக்களாக இணைந்து, ஒருவர் மேல் ஒருவர் ஏறி, பிரமிடு அமைத்து பானையை உடைப்பர்.

கோமதி : ஆவணி மூலத் திருவிழா மதுரை மீனாட்சி அம்மன் கோவில் நடக்கும் ஒரு முக்கிய திருவிழா. சொக்கர் மதுரையில் நிகழ்த்திய 64 திருவிளையாடல்களில் 10 திருவிளையாடல்கள் நடத்தப்படும். இதன் பின் 5 மாதங்கள் மதுரையில் சொக்கநாதப் பெருமானின் ஆட்சி தான் நடைபெறும்.

தீபிகா : அடுத்த topic போவோமா? வடக்கு ஈராக், துருக்கியின் தென்கிழக்கு, வடசிரியா, ஈரானின் ஒரு பகுதி. மற்றும் காக்கஸஸ் மலைத்தொடரில் யாஸிதி (yazidi) எனும் மலை வாழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் பல மதங்களை அதாவது ஜுடாலிசம், கிறிஸ்டியானிட்டி, இஸ்லாம், நெஸ்டோரியன் போன்றவைகளைப் பின்பற்றுகின்றனர். ஆனால் அம்மக்கள் வழிபடும் கடவுள் யாரென்று தெரிந்தால், உங்களுக்கு நிச்சயம் ஆச்சரியமாக இருக்கும். அந்தக் கடவுள் மயில் மீது வேலுடன் இருக்கும் நமது முருகன் தான். அவர்கள் அவரை Peacock Angel என அழைப்பதுடன், மிகவும் நம்பிக்கையுடன் வழிபடுகின்றனர். என ஒரு செய்தி தெரிய வந்தது. அதான் உங்களுடன் பகிர்ந்து கொண்டேன்.

(அனைவரும் கைதட்டி பாராட்டுகிறார்கள்)

பிரியா : கைதட்டலைப் பற்றி ஒரு artical படித்தேன். கி.மு. 300–ல் ரோம நாடக ஆசிரியர் பிளாட்டஸ், தன் நாடகத்தின் முடிவில் ரசிகர்களால் பார்த்து 'பிளாடைட்' எனக் கூற மக்கள் கைதட்டியதே உலகின் முதல் கைதட்டல் நிகழ்வாகும். கிரேஸ் லுடெங்கா மொட்டோவ் என்ற பாடகர், ஜூலை 30–ஆம் தேதி, 2023–ல் உகாண்டாவில் ஒரு இசை நிகழ்ச்சியில் பாடி முடித்ததும், அவையோர் தொடர்ந்து 3 மணி நேரம் 16 நிமிடங்கள் கைதட்டி பாராட்டினராம். உலக சாதனையாக 117 டெசிபல் அளவு சத்தத்தில் ஸ்டீபன் வாலஸ் என்பவர் கைதட்டி உள்ளார். அது சரி, கை தட்டுவதால் என்ன நன்மை?

கௌரி : உடற்பயிற்சி என கேள்விப்பட்டிருக்கேன். அஜீரணக் கோளாறு முதுகு வலி, கழுத்து வலி விலகும். ரத்த அழுத்தம் சீராகும்; மூளையின் செயல்பாடு கூர்மை பெறும், ரைட்டா?

பிரியா : மெயினை விட்டுட்டியே! நிகழ்ச்சியில் பங்கு பெறும் கலைஞர்களுக்கு உற்சாகத்தை அளிக்கும். நோய் எதிர்ப்பு சக்தியும் கூடும் என்கிறார்கள்.

கோமதி : பிரேசிலின் அமேசான் காடுகளில் 39,000கோடி மரங்கள் இருப்பதாக கணக்கிட்டுள்ளனர். 'காஸ்போனேர்' என்ற மரத்தை 'வாக்கிங் பாம் ட்ரீ' என்று கூறுகின்றனர். இந்த சிறுமரம் இடம் விட்டு இடம் நகர்ந்த கொண்டே இருக்குமாம். இது ஒரு ஆண்டில் 20 மீட்டர் தூரம் நகர்ந்து வருவதாக கண்டு பிடித்துள்ளனர்.

வசுமதி: நம் நாட்டில் உள்ள மிகப்பெரிய ஆலமரம் கொல்கட்டாவில், ஜகதீஷ் சந்திரபோஸ் தாவரவியல் மையத்தில் 670 ஏக்கரில் பரந்து விரிந்துள்ளது. கர்னல் அலெக்ஸாண்டர் குட் என்பவரால் கி.பி. 1786–ல் இந்த மையம் உருவாக்கப்பட்டது. இங்கு 12,000 வகை தாவரங்கள் உள்ளன. விதவிதமான மூங்கில், பனை மரங்கள், ஆர்கிட் மலர் வகைகள், மிகப்பெரிய இலைகளை உடைய விக்டோரியா அமேசானிகா அல்லி போன்ற தாவரங்கள் உள்ளன. இங்குதான் 18, 918 ச.மீ பரப்பில் விரிந்துள்ளதும், 25 மீ உயரமானதும், 3800 க்கு மேற்பட்ட விழுதுகளைக் கொண்டதுமான ஆசியாவிலேயே பெரிய ஆலமரம் உள்ளது.

ஆண்டாள் : என்ன மரமா போய்க்கிட்டு இருக்கீங்க! சயின்ஸ், கோவில் எல்லாம் இந்த மாசம் கிடையாதா?

சித்ரா : ஏன் இல்லாம? விஞ்ஞானி செந்தில்குமார் கண்டு பிடித்த 'எக்ஸ்ப்லைபெட்'

எனும் மருந்தைப் பற்றி பார்ப்போம். அலெக்ஸாண்டர் ஃபிளெமிஸ் 1928–ல் கண்டு பிடித்த பெனிசிலினை அடிப்படையாகக் கொண்டு, பல ஆன்டிபயாடிக் மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டு, பாக்டீரியா தொற்றுக்கள் குணமாக்கப்படுகின்றன. இருப்பினும் ஆண்டிற்கு 12 லட்சம் பேர் நோய்த் தொற்றினால் இறக்கின்றனர். ஏனெனில் ஆன்டிபயாடிக் மருந்துகளை எதிர்கொள்ளும் சக்தியை பாக்டீரியாக்கள் பெற்று விட்டன. இவை வளரும் நொதியை செயலிழக்கச் செய்யும் மருந்தினை 2005–ஆம் ஆண்டு கண்டுபிடித்த விஞ்ஞானி செந்தில்குமார் அவர்கள் முறையான சோதனைகளை எலி போன்ற விலங்குகளிடம் முடித்த பின், மனிதர்களிடமும் பரிசோதனை செய்து, ஐரோப்பாவிலும் செய்ய வேண்டிய சோதனைகளை முடித்ததும், ஐரோப்பிய மருந்து கட்டுபாட்டு நிறுவனம், இவரது மருந்தை அங்கீகரித்து, பயன்பாட்டிற்கு ஏற்றது என்று சான்று வழங்கியுள்ளது. நுரையீரல் மற்றும் சிறுநீரகத் தொற்றினுக்கு முதன்மையான மருந்தாக செயல்படுகிறது.

கௌரி : 'அகத்தியர் ரத்தின சுருக்கம்' என்ற சித்த மருத்துவ நூலில் மனிதர்களுக்கு 4448 நோய்கள் வரலாமெனவும் அத்தனைக்கும் சித்த மருத்துவத்தில் சிகிச்சையும், மருத்தும் உள்ளது என கூறப்பட்டுள்ளது.

மீனா : போனமாசம் நல்லூர் சென்றோமல்லவா ? இப்ப குடந்தைக்கு அருகிலிருக்கும் கொரநாட்டு கருப்பூர் போவோம். அருள்மிகு அபிராமி சமேத சுந்தரேஸ்வரர் திருக்கோயில் உள்ளது. ஞான உபதேசம் பெற விரும்பிய பிரம்மா, சிவலிங்கத்தை நிறுவி வழிபட்ட தலம். யக்ஞவால்கியர், கண்வர் போன்ற மகரிஷிகள் இங்கு பூசித்திருப்பதாக வரலாறு. இந்திரன் ஐராவதத்துடன் சித்ரா பௌர்ணமியன்று இங்கு வழிபட்டு அருள் பெற்றதாக ஐதீகம். அபிராமி அன்னை சந்நிதியின் கிழக்கே அருள்மிகு சுந்தரமாகாளியின் பெட்டகம் வைக்கப்பட்டு வழிபாடு நடந்து வருகிறது. இக்காளி அம்மன் பெட்டிக்காளி என போற்றப்படுகிறாள். சுமார் 200 வருடங்களுக்கு முன் காவிரியில் மிதந்து வந்த பெட்டி, இவ்வூரின் கரையில் ஒதுங்கியது. மக்கள் அதனைத் திறந்து பார்க்க, அதில் மேல்பாதி மட்டும் உள்ள மரத்தாலான காளி சிலையைக் கண்டனர். அர்ச்சகர்களும், மக்களும் அதை என்ன செய்வது என்று யோசித்த போது, அங்கிருந்த ஒரு சிறுமியின் மேல் காளியின் அருள் இறங்கி, பிராக்ரதமும், மலையாளமும் கலந்த மொழியில், அவளை எப்படி பூசிக்க வேண்டுமென கூறி, அச்சிறுமியை விட்டு நீங்கினாள். ஊர்ல தென் பகுதியில் ஒரு ஓலைக்குடிசையில் வைத்து வணங்கி வந்தனர். ஒரு நாள் கொட்டகை தீப்பிடிக்க, பெட்டியைக் காப்பாற்றிய மக்கள், குடந்தை காமகோடி பீடத்தில் இருந்த மகாபெரியவரிடம் செய்தியைக் கூறினர். அவர் சுந்தரேஸ்வரர் கோவிலில் வைத்து வழிபடும்படி கூறியதால், இக்கோவிலில் எழுந்தருள்கிறாள். அன்னையின் அருள்வாக்கின்படி செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் அஷ்டோத்ர அர்ச்சனை செய்து, அன்னம் போன்ற பிரசாதங்களைப் பெட்டி முன் வைத்து படைத்து பெட்டி திறக்கப்படும். அப்போது நாம் அன்னையைப் பெட்டிக்குள் தரிசிக்கலாம். சாமியாடி குறி சொல்லும் நாளில், பெட்டியினுள் இருந்த வண்ணமே பல்லக்கில் வருடத்திற்கொரு முறை அல்லது இரண்டாண்டிற்கொரு முறை என திருமஞ்சன வீதியில், ராஜகோபுரத்தைத் தாண்டியதும், ஆடிக் கொண்டும் , ஓடிக் கொண்டும் உலா வருவாள். அது உக்கிரகாளியின் ஆவேசம் என மக்கள் நம்புகின்றனர். மிகுந்த சக்தி வாய்ந்த இந்த அம்மனை ஐந்து வெள்ளிக்கிழமைகள் நெய் விளக்கேற்றி வணங்கினால், வேண்டுதல் கைகூடும் என அங்கிருந்த மக்கள் கூறினர்.

கௌரி : டைம் ஆயிடுச்சு! இன்று இத்துடன் முடித்துக் கொள்வோம், கொண்டு வந்திருக்கின்ற சிற்றுண்டிகளை ருசித்து கலைவோம்பா! அடுத்த மாதம் மாலை எலியட்ஸ் கடற்கரையில் சந்திப்போம் என்று கூறு, மகளிர் குழு விடைபெற்று கலைந்தனர்.

நன்றி ! வணக்கம் !

வாழ்த்துகிறோம்

கார்காத்தார் ஒப்புரவு படைப்பாளி திரு. T. கபீர்தாஸ் அவர்களின் மகன்வழிப் பேத்தி, பீ. அநுரதி திருச்சிற்றம்பலம் வானின்று வாழ்த்தும் சிவ. குஞ்சிதபாதம் பிள்ளை அவர்களின் மகன்வழிபெயரன் இரெ. அருண்பரத்ராம் இவர்களது திருமணம் 12–07–2024 அன்று சிதம்பரத்தில் சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

திருமண நினைவாக மணமகள் பெற்றோர் திரு. க. பீகர் பிள்ளை – திருமதி. ஸ்ரீதேவி தம்பதியினர் குமராட்சி ஒன்றிய சங்கத்திற்கு ரூபாய் ஐந்தாயிரம் நன்கொடை வழங்கியுள்ளார்கள் என்பதை நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

"தவத்திரு குன்றக்குடி அடிகளார் நூற்றாண்டு"

சமய – சமுதாய ஞானி

பிறந்தது : பரிபூரணம் அடைந்தது :

11–7–1925 15–4–1995

இளமைப் பருவம் :

சமயம், இலக்கியம், பேச்சு, எழுத்து எனப் பல துறைகளிலும் பெயர் பெற்ற அடிகளார் மயிலாடுதுறை, மணல்பேடு அருகிலுள்ள நடுத்திட்டு கிராமத்தில் நம் கார்காத்தார் இன சீனிவாசம் பிள்ளை – சொர்ணத்தாச்சி இணையருக்கு இளைய மகனாகப் பிறந்தார். அவருக்கு இரண்டு மூத்த சகோதரர்களும், ஒரு சகோதரியும் இருந்தனர். இவரின் இயற்பெயர் அரங்கநாதன், அண்ணன் கோபாலகிருஷ்ணன் அண்ணாமலைப்பல்கலைக் கழகத்தில் படிப்பதற்காக இவர்களின் குடும்பத்தினர் சிதம்பரம் அருகில் திருவேட்களம் எனும் ஊருக்கு குடி பெயர்ந்தனர். குடும்பத்தினர் மாடுகளை வைத்துப் பால் வணிகம் செய்தனர். பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு பால் கொண்டு சென்று தரும் போது தமிழறிஞர்கள் ந.மு. வேங்கடசாமி நாட்டார், ரா.பி. சேதுப் பிள்ளை, சுவாமி விபுலானந்தர் ஆகியோரிடம் அடிகளார் அணுக்கமாகி தமிழார்வம் அடைந்தார். ரா.பி. சேதுப் பிள்ளை வீட்டில் தினம் ஒரு திருக்குறளை ஒப்பித்து காலணா பெறுவது இவரின் வழக்கம். மாலை வேளைகளில் சேரிப் பகுதிகளுக்குச் சென்று ஏழை மக்களின் வாழ்வுக்கு வழி காட்டிய விபுலானந்த அடிகளின் அன்புக்கு பாத்திரமாகி, அரிக்கேன் விளக்கேற்றி இவர் உடன் சென்றார். அதனால் இவர் மனதில் தீண்டாமை விலக்கு உணர்வும் மனித நேயப் பண்பும் வளரக் காரணமாக இருந்தது. தமையன் கோபாலகிருஷ்ணன் கடியாபட்டியில் தமிழாசிரியராகப் பணி புரிந்த போது அடிகளார் அங்கு பள்ளிப் படிப்பைத் தொடர்ந்தார். காங்கிரஸ் கட்சியினர் நடத்திய சமபந்தி விருந்தில் கலந்து கொண்டார். சுயமரியாதை இயக்கத்தின் கு. பழனியப்பனிடமிருந்து விடுதலை, குடியரசு இதழ்களைப் பெற்று வாசித்தார்.

துறவு பூண்டது :

பள்ளி இறுதி வகுப்பு முடித்து இராணுவத்தில் சேர முயன்றார், கிடைக்கவில்லை. பேருந்து ஓட்டுனர் உரிமம் பெற்றும், பணி கிடைக்கவில்லை. காகித உற்பத்தி குடிசைத்தொழிற் கூடத்திலும், சிறிது காலம் ஆசிரியப் பணியும் புரிந்தார். தருமபுர ஆதீனத்தில் 1944–ல் தபால் சேகரிக்கும் எழுத்தர் பணியில் சேர்ந்தார் அங்கு முதல் நிலைத்துறவு (யாத்திரைக் கஷாயம்) கந்தசாமிப் பரதேசி எனப் பெயர் மாற்றம், பின் மதுரை, நெல்லை, கன்னியாகுமரி வரை 47 நாட்கள் நடந்து சென்று பிச்சை எடுத்தபடி திரும்பிய பின் இரண்டாம் நிலை (மந்திரக் கஷாயம்) குருவிடம் பெற்றார். 1945–ல் தருமபுரத் திருமடத்தின் 25 வது குருமகா சன்னிதானம் அரங்கநாதனை துறவுக்கு ஆட்படுத்தி "கந்தசாமித் தம்பிரான்" ஆக்கினார்கள். திருக்கயிலாயப் பரம்பரையில் வந்த அத்தகைய ஆதீனங்கள் 18 அவற்றுள் தொன்மையானவைகளுள் ஒன்று திருவண்ணாமலை ஆதீனமாகும். கந்தசாமித்தம்பிரான், தருமையாதீனத்தின் சார்பில் குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன குருபூசை விழாவில் சொற்பொழிவாற்றினார். இவரின் நாவன்மையால் கவரப்பட்ட குன்றக்குடி ஆதீன கர்த்தர் ஆறுமுக தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் தருமையாதீனத்தின் இசைவு பெற்று தனது திருமடத்துக்கு ஆதீன இளவரசாக கந்தசாமித்தம்பிரானை ஆக்கினார். 5–9–1949–ல் இளவரசாகிய இவர் 16–6–1952 முதல் குன்றக்குடி ஆதீனத்தின் 45–வது குருமகா சன்னிதானமாகப் பொறுப்பேற்றார். அவருக்கு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் என்ற திருப்பெயரும் சூட்டப்பட்டது.

சமயப்பணி :

குன்றக்குடி இளைய ஆதீனமாக இருக்கும் போதே து.ச. துரைசாமிக் குருக்களிடம் சமஸ்கிருதமும், ஆகமங்களும் கற்றுக் கொண்டார். 2–8–1952–ல் பெரியார் அறிவித்த பிள்ளையார் சிலை உடைப்புப் போராட்டத்தை எதிர்த்து 11–8–1952–ல் சமயச் சான்றோர்களையும், தமிழறிஞர்களையும் ஒன்று திரட்டி குன்றக்குடியில் பெரும் மாநாடு ஒன்றை நடத்தினார். அதன் விளைவாகத் தோன்றியதே 'அருள் நெறித் திருக்கூட்டம்" பெரியாரின் போராட்டத்தை எதிர்த்து அருள்நெறித் திருக்கூட்டம் மாநிலம் முழுவதும் பிரச்சாரம் செய்தது. மம்சாபுரத்தில் அடிகளார் கலந்து கொண்ட கூட்டத்தில் கற்கள் வீசப்பட்டன. அவருக்கு எதிராக திராவிடர் கழகத்தினர் போராட்டம் நடத்தினர். 10–7–1954–ல் அருள் நெறித் திருக்கூட்டத்தில் முதல் மாநாடு தேவக்கோட்டையில் மூதறிஞர் இராஜாஜி தலைமையில் நடைபெற்றது. அதன் செயலாக்கப் பிரிவாக "அருள் நெறித் திருப்பணி மன்றம்" எனும் அமைப்பு 10–6–1955–ல் உருவானது. தமிழக ஆலயங்களைப் பாதுகாக்கவும், சமயம் பரப்பவும்,

மதத்தலைவர்கள், ஆதீனத்தலைவர்கள் பங்களிப்புடன் தமிழக அரசின் துணையோடு 1966–ல் தமிழ்நாடு தெய்வீகப் பேரவை எனும் அமைப்பு தருமபுர ஆதீனக் குருமகா சன்னிதானம் அவர்கள் தலைமையில் அடிகளாரால் உருவாக்கப்பட்டது. பின் 1969 முதல் 1976 வரை இந்த அமைப்புக்கு அடிகளார் தலைமையேற்று அரும் பணிகள் பல ஆற்றினார். மத ஒற்றுமைக்காக 1981–ல் இராமநாதபுரம் இனக் கலவரம், புளியங்குடி கலவரம், 1982–ல் மண்டைக்காடு கலவரம் ஆகியவ்றில் அமைதி திரும்ப நடைப்பயணம் மேற்கொண்டார்.

சமுதாயப்பணி :

1958–ல் குன்றக்குடியில் உயர்நிலைப்பள்ளியைத் தொடங்கினார். அடிகளார், மனித நேய சமூக சீர்திருத்தங்களை உருவாக்க விரும்பினார். சாதி வேறுபாடுகளையும், தனிப்பந்தி முறையையும் அவர் ஏற்கவில்லை. மூட நம்பிக்கை, மனிதாபிமானமற்ற ஆச்சாரங்கள் ஆகியவற்றுக்கு எதிராகப் போராட உறுதி பூண்டார். கம்யூனிஸ்டு கட்சித்தலைவர் ப. ஜீவானந்தம் மகள் திருமணத்தை 1967–ல் பெரியாரும், அடிகளாரும் இணைந்து நடத்தி வைத்தனர். அன்றைய முதல்வர் அண்ணாவும் அதில் கலந்து கொண்டு வாழ்த்தினார். 1972–ல் சோவியத் ஒன்றியத்தில் மேற்கொண்ட பயணத்தின் விளைவாகத் தோன்றியது தான் "குன்றக்குடி கிராமத்திட்டம்." 1973–ல் குன்றக்குடி கிராமத்தை தன்னிறைவு கிராமமாக ஆக்கும் திட்டத்தைத் தொடங்கினார். தீப்பற்றாத வீடுகள் அமைத்தல், குடிநீர் வசதி, கிராம நிர்வாக சீராமைப்பு போன்ற பணிகளைச் செய்தார். குன்றக்குடியை முன் மாதிரி கிராமமாக மாற்ற STAR (Science Technology Agriculture religion) என்னும் கொள்கை வரைவு ஒன்றை உருவாக்கினார். அது இந்திய அரசின் திட்டக்குழுவினரால் ஆராயப்பட்டு முன் மாதிரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 7, 8–7–1985–ல் நடைபெற்ற அடிகளார் மணிவிழாவில் தேசியக் கொடி, அருள் நெறித் திருக்கூட்டக் கொடி, கூட்டுறவுக்கொடி ஆகியவை ஏற்றப்பட்டன.

சிறப்புகள் :

பேச்சுக்கு நிகராக எழுத்திலும் வல்லவரான அடிகளார் மணிமொழி, தமிழகம், அருளோசை, மக்கள் சிந்தனை, அறிக அறிவியல் போன்ற இதழ்களை நடத்தியதுடன், 52 நூல்களை எழுதி வெளியிட்டார். அடிகளாரின் படைப்புகள் 2007–ல் தமிழக அரசால் நாட்டுடமை ஆக்கப்பட்டன. தமிழ்நாடு அரசின் திருவள்ளுவர் விருது (1986), அண்ணாமலைப் பல்கலைக்கழக கௌரவ டாக்டர் பட்டம் (1989), இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக்குழு, தேசிய விருது (1991) போன்ற விருதுகளை அவரைச் சிறப்பித்தனர். அடிகளார் தமிழக அரசின் சட்ட மேலவை உறுப்பினர். அரசு மற்றும் தனியார் அமைப்புகளிலும் பொறுப்புகள் வகித்து மக்களுக்காகப் பணி புரிந்தார்.

15–4–1995–ல் மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனையில் தொண்டு மரபும், துறவு ஒழுக்கமும் பூண்ட அடிகளார் பரிபூரணம் அடைந்தார். அடிகளார் நம் கார்காத்தார் இனத்தவர் என்பது நமக்குப் பெருமைதானே ! அவர் தம் நூற்றாண்டு 11–7–2024–ல் தொடங்குகிறது.

– ப. சுவாமிநாதன்,
மயிலாடுதுறை.
9360185457

நம்பிக்கை - முயற்சி - வெற்றி !

சென்ற இதழ் தொடர்ச்சி....

கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த இடத்து.

காத்திருந்து காலம் வரும் கொக்கு மீனை கொத்தியதைப் போல் கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்த தெரிய வேண்டும். வெற்றி, வளர்ச்சி, புகழ், வசதி, சாதனை இவையெல்லாம் ஒன்று திரண்டு வரும் போது வேகமும், துடிப்பும் வரும். அத்தருணத்தில் எந்த ஒரு பெரிய செயலும் கடினமில்லாமல் மிக மிக சாதாரணமாகத் தெரியும்.

எந்த பிரச்சனை வந்தாலும், எவ்வளவு கஷ்டம் வந்தாலும் சமாளித்து போராடி வாழ்ந்துக் காட்டவேண்டும், என்ற எண்ணமும், உறுதியும் கொண்ட ஒரு பெண்ணின் கதை. பெங்களூரில் ஆறு ஆண்டுகள் குடும்பத் தலைவியாக, தன் கண–வரோடு மகிழ்ச்சியாக மணவாழ்க்கை நடத்தி வந்த ஒரு பெண்மணி, எதிர்பாராத விதமாக கணவனை இழக்க நேர்ந்தது. கணவனை இழந்த நிலையில் நிலைகுலைந்துப் போகாமல், வாழ வழித்தேடும் முயற்சியில் தையல் இயந்திரம் ஒன்றை வாங்கித் துணிகளைத் தைத்து விற்று வாழ்க்கையை நடத்த ஆரம்பித்தாள். அப் பெண்மணி வித்தியாசமான, காலத்திற்கு ஏற்றவாறு வடிவமைப்பு கொண்ட ஆடை–களை தைத்து விற்பனை செய்தாள். ஆடைகள் அமோகமாக விற்பனை ஆயின. அவள் தைத்த

ஆடை ஒன்று வெளிநாட்டிலிருந்து வந்திருந்த வியா–பாரி ஒருவரின் கையில் கிடைத்தது. இதைப்போன்று தைத்துக் கொடுத்தால் தானே வாங்கிக் கொள்வதாக பெண்ணின் முகவரியைத் தேடி வந்து தெரிவித்தார். அப்பெண்ணிடம் முதலீடு செய்ய போதுமான பணம் இல்லை எனத் தெரிந்ததும் பணம் கொடுத்து உதவியும் செய்தார். இறக்குமதியாளர்களின் அழைப்பின் பேரில் வெளிநாடுகளுக்குச் சென்று அங்கு தனது துணிகள் விற்கப்படும் கடைகளுக்குச் சென்று தனது துணிகளை விரும்பி வாங்கும் வாழ்க்கையாளர்களின் முகவரிகளைப் பெற்று, அவர்களை நேரில் சந்தித்து நேரடியாக விற்பனை செய்தார். அவரிடமிருந்து ஆடைகளை வாங்கிய வாடிக்கையாளர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவரவர் தாங்கள் விரும்பிய வண்ணம் ஆடைகள் தயாரிக்கக் கேட்டுக் கொண்டதன் பேரில் வாழ்க்கையாளர்களின் ஆலோசனைக்கிணங்க ஆடைகள் தயாரிக்கக் கற்றுக்கொண்டார். இந்தியாவிற்கு திரும்பி வந்ததும், ஆடைகளில் தேவையான மாற்றங்களை செய்து, புதிய வடிவத்தில் தயாரிக்கப்பட்ட ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டது. அபார விற்பனை. ஆர்டர்கள் குவிந்தன. அவரது ஆண்டு விற்பனை இருபத்தைந்து கோடியாகியது. இவரின் இந்த வளர்ச்சிக்கு காரண–மாக அமைந்தது வாழ வேண்டும் என்ற எண்ணமும் மன உறுதியுமே ஆகும். தனித்து நின்ற இந்த பெண் போராடி வாழ்க்கையில் உயர் நிலையை அடைந்ததை ஒரு பாடமாக ஏற்று நாமும் வெற்றிப் பாதையை நோக்கிச் செல்வோம்.

எல்லாருடைய வீடுகளிலும்தான் உலை கொதிக்கிறது. ஆவி வெளி வந்து மூடியைத் தள்ளி விடுகிறது. ஆனால் அதை உன்னிப்பாக கவனித்த ஜேம்ஸ்வாட் என்பவரால் தான் நீராவி எஞ்சினை உருவாக்க முடிந்தது. ஏன்? எதற்கு? எதனால்? எப்படி! என்று பல கேள்விகளைத் தனக்கு தானே கேட்டுக்கொண்டு, அதற்கான விடையை அறிய முற்படும் போதுதான் சாதனை பிறக்கும். கிணற்று தவளைப் போன்று குறுகிய வட்டத்திற்குள் சுற்றி சுற்றி வந்தால் எதையும் சாதிக்க முடியாது. பரந்த மனப்பான்மை, விரிந்த சிந்தனை, ஆராயும் தன்மை உள்ளவர்களால் மட்டுமே நினைத்ததை நிறைவேற்ற முடியும். உலகின் மிகப் பெரிய ஆற்றல் எது? என்று விவாவதம் நடந்தது. மின்சாரம், காந்தம், புவியீர்ப்பு விசை என ஆளுக்கொரு ஆற்றலை விடையாக பகிர்ந்தனர். அதில் ஒருவர் ஹீரோஷிமாவில் விழுந்த அணுகுண்டு 1,80,000 மனித உயிரை 0.02 நொடியில் கொன்றுவிட்டது. எனவே அணுசக்திதான் உலகிலேயே மிகப்பெரிய ஆற்றல் என்றார். இன்னொருவர் அந்த அணுச்சக்தியைக் கண்டு பிடித்தது கூட ஒரு மனிதனின் மூளைதானே! ஆகவே உலகின் மாபெரும் ஆற்றல் மனிதனின் மூளைதான் என்றார். அவரின் விடையே அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உலகம் தழுவிய ஓவியப்போட்டி நடக்கிறது. மிக அழகாக இயற்கை காட்சி வரையப்பட்டிருந்த ஒரு ஓவியத்திற்கு முதல் பரிசு கிடைத்தது. விழா மண்டபத்தில் கூட்டம் வெள்ளமாய் நிரம்பி வழிந்தது. விழாவில் மூன்றாம் பரிசு, இரண்டாம் பரிசு, பெற்றவர்கள் விருது பெற்றனர். முதல் பரிசு பெற்றவர் மேடையேறியதும் மக்கள் ஆரவாரம் செய்தார்கள். கழுத்தில் வெற்றிப் பதக்கம் அணிவிக்கப்பட்டது. தங்க முலாம் பூசிய விருது வழங்கிய போது அவருக்குப் பின்னாலிருந்து இரண்டு கைகள் நீண்டு அவ்விருதினைப் பெற்றுக்கொண்டது. அனை–வரும் வியந்து பார்த்த போது உண்மை புரிந்தது. கூடியிருந்தவர்கள் கண்கள் பனித்தன. முதல் பரிசு பெற்றவர் இரு கைகளும் இல்லாதவர். இவர் ஒரு இளம் பைலட், விமான விபத்தில் இரு கைகளையும் இழந்தவர். ஒரு நாள் மழை பெற்த போது தனது வீட்டு தாழ்வாரத்தில் விழுந்த மழை நீரை தனது கால்களால் ஓவியமாகப் பதிக்க இதைக் கவனித்த பெற்றோர், தனது மகனின் எதிர்காலம் கேள்விகுறியாக இருந்ததற்கு விடை கிடைத்து விட்ட மகிழ்ச்சியில், கால்களாலேயே ஓவியம் வரைய அவரை ஊக்குவித்தனர். இரு கை–களையும் இழந்த அந்த இளம் பைலட், உலக ஓவியப் போட்டிக்குத் தனது ஓவியத்தை அனுப்பி வைத்தார். அதற்கான முதல் பரிசையும் பெற்றார்.

வயது மட்டுமல்ல, உடல் ஊனம் கூட நம்மின் சாதனைக்கு தடையாக இருக்க முடியாது என்பது அறியப்படுகிறது. அனைவரிடத்தும் பிரகாசமான வீச்சான சிந்தனை உண்டு. கற்பனைத்திறன் உண்டு. அதனை ஆக்க ரீதியாக பெருமைக்குரிய முறைகளில் கையாண்டு அற்புதமான சாதனைகளை படைக்கலாம்!

பிறந்த மண்ணின் மேன்மைக்காக சாதனைகள் செய்து தடம் பதிப்போம்!

இரா. திலகம்,

வையூர்.

9789412635

"நகரமா? நரகமா?"
- ஒரு வாசிப்பனுபவம்.

Dr. D. Kalyanakumar, Trichy-18.

ஒரு நகரத்தின் பரபரப்பு என்பது கொதிக்கும் நீரில் தேயிலையை கலந்தவுடன், ஏற்கெனவே வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் திரவ மூலக்கூறுகளுடன் தேயிலைத் துகள்களும் சேர்ந்து ஏற்படுத்தும் அதிவேக சீரற்ற இயக்கத்தைப் போன்றது. இந்தக் கதையை வாசித்த பிறகு எந்த நகரத்திற்குச் சென்றாலும் இந்த உவமை என் கண்முன்னால் வந்து போகும். நீங்கள் நிதானமானவராகவும், உங்கள் பணி அவசரமில்லாததாக இருப்பினும் கூட நகரத்தின் செயல்பாடுகளால் நீங்களும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள். அனைவருமே ஏதோ போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசு பெற யத்தனிக்கும் மனநிலையில் இருப்பார்கள். நகரத்தின் உச்ச நேரம் மட்டுமல்லாது நாள் முழுவதுமே எங்கோ எதற்காகவோ திரள் திரளாக மக்கள் கூட்டம் ஓடிக் கொண்டிருப்பதை நகரத்தில் வாழும் தினங்களில் உணர்ந்திருக்கிறேன்

ஓர் இன்சொல்லோ, புன்னகையோ கூட பரிமாற்றிக் கொள்ள நேரமில்லாது, வேறு சிந்தனைகள் ஏதும் இல்லாது, முழுக்க முழுக்க சுயநலத்தோடு, எந்தவித பச்சாதாபமுமின்றி, வில்லில் இருந்து புறப்பட்ட அம்பு அதன் இலக்கை மட்டுமே கருத்தில் கொண்டு பயணிப்பது போன்று மந்தை மந்தையாக மக்கள் கூட்டம் நகர்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து ஸ்தம்பித்திருக்கிறேன். இந்தச் சிறுகதை அப்படிப்பட்ட நகரத்தின் பெரிய அரசு ஆஸ்பத்திரிக்கு வந்திருக்கும் ஒரு படிப்பறிவில்லாத அறியாப் பெண்ணான வள்ளியம்மாளைப் பற்றியது. அவள் அன்றைய தினம் ஆஸ்பத்திரியில் சந்திக்கப் போகும் இடர்பாடுகளும், படித்தவர்களின் மெத்தனத்தால் அந்நாளின் இறுதியில் அவளுக்குக் காத்திருக்கும் கருணையற்ற கொடூரத்தைப் பற்றியதும்தான்.

வள்ளியம்மாளின் பெண் சரஸ்வதிக்கு முதல் தினத்திலிருந்தே நல்ல ஜுரம் அவர்கள் வாழும் கிராமத்து ஆரம்ப சுகாதார மைய மருத்துவர் சரஸ்வதியை பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துக்கொண்டு போகச் சொல்லிவிட அடுத்த நாள் விடிந்தும் விடியாததுமாக முதல் பேருந்தில் ஏறி ஒரு பெரிய மருத்துவமனையின் புற நோயாளிகளுக்கான பிரிவில் வந்து காத்திருக்கிறாள்.

கிழிந்த நாராக ஸ்ட்ரெச்சரில் கிடக்கும் சரஸ்வதி ஒரு 'மாதிரியாகக் கொண்டு மருத்துவ மாணவர்களுக்கு வகுப்பு எடுக்கும் பெரிய டாக்டர். சரஸ்வதி மீது சில பரிசோதனைகளைச் செய்து விட்டு இது "Acute case of meningitis" என்றும், அதற்கான அறிகுறிகளைக் குறிப்பெடுத்துக் கொள்ளுமாறும் மாணவர்களுக்கு அறிவுறுத்துகிறார். திராணியின்றிக் கிடக்கும் தன் மகளையே ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டிருக்கும் வள்ளியம்மாளுக்கு அவர்கள் பேசுவது ஒன்றுமே விளங்கவில்லை சிறுமி சரஸ்வதி கேஸைத் தானே பார்த்துக் கொள்வதாகவும், அவளை உடனே மருத்துவமனையில் சேர்த்துக் கொள்ளும்படியும் தனசேகரன் என்பவரிடம் உத்தரவிட்டுத் தான் அடுத்து எடுக்கப்போகும் வகுப்பிற்கு விரைகிறார். பெரிய டாக்டர் அவரைப் பின்தொடர்ந்து செல்ல வேண்டிய சூழலில் இருக்கும் தனசேகரன் வெளிநோயாளிகளுக்கான பிரிவில் பணியாற்றும் ஸ்ரீனிவாசனிடம் விஷயத்தைக் கூறிவிட்டு நகர்கிறார்.

பலவிதமான நோயாளிகளை தினசரி பார்த்துப் பழகி சலிப்பான மனநிலையிலிருக்கும் நிர்வாக ஊழியர்கள் சரஸ்வதியுடைய நோயின் தீவிரத்தைப் பற்றி உணராததால், அடுத்தடுத்துப் பந்தாடப்படுகிறாள் வள்ளியம்மாள். கைப்பந்து விளையாட்டுக் களத்தில் கைப்பந்தைத் தட்டித் தள்ளிவிடுவது போல நோயாளியின் எதிர்காலம் ஆஸ்பத்திரி வளாகத்தில் பந்தாடப்படுகிறது. கிராமத்திலிருந்து நகரத்திற்கு வந்திருக்கும் அந்த அப்பாவிப் பெண்ணிற்கு அந்தப் பெரிய ஆஸ்வத்திரியின் சட்ட திட்டங்கள், சம்பிரதாயங்கள், நடைமுறைகள் எல்லாம் தலை கிறுகிறுக்க வைக்கின்றன. "Patient பேரு என்ன?" என்ற கேள்விக்குத் தன் கணவனின் பெயரை கேட்கிறார்கள் என நினைத்துக்கொண்டு அவர் இறந்துவிட்டதாகக் கூறும் இடத்திலும், "எத்தன ரூபா மாசம் சம்பாதிப்பே?" எனும் கேள்விக்கு "அறுப்புக்குப் போனா நெல்லாக் கிடைக்கும், அப்புறம் கம்பு, கேழ்வரகு!" என்று கூறும் இடத்திலும் வள்ளியம்மாளின் அப்பாவித்தனத்தையும், அறியாமையையும், அன்றாடங்காய்ச்சி நிலைமையையும் எளிதில் உணர்த்தி விடுகிறார் கதையின் ஆசிரியர்.

சேர்க்கை நடைமுறைகளுக்காக சரஸ்வதியை விட்டுப் பிரிந்த அவள் மருத்துவமனையின் மூலை முடுக்கெல்லாம் பயணிக்க வேண்டியிருக்கிறது. குழந்தையை எங்கோ ஒரு மூலையில் விட்டுவிட்டு அவள் அலையும் போது அந்தத் தாயோடு சேர்ந்து நம் மனமும் கலங்குகிறது; பதறுகிறது; வயிற்றைப் பிசைகிறது. திரும்பத் திரும்பக் கேட்கப்படும் கேள்விகளும், அடுத்துப் போகுமிடத்தைக் காண்பிக்கும் குறியீடுகளும், எண்களும், படிப்பறிவில்லாத வள்ளியம்மாளை நிலைகுலையச் செய்கின்றன.

வள்ளியம்மாவோடு சேர்ந்துப் பயணிக்கும் போது ஓர் ஆஸ்பத்திரியின் அத்தனைக் காட்சிகளையும் நம் கண் முன்னே கொண்டு வந்து

காட்டுகிறார் ஆசிரியர். ஒரு வழியாக சரஸ்வதியை மருத்துவமனையில் சேர்க்கும் இடத்தைத் தேடிக் கண்டடைகிறாள். துரதிர்ஷ்டவசமாக அன்றைக்கு அதற்கு மேல் நோயாளிகளைச் சேர்த்துக் கொள்ள இடமில்லாததால், மறுநாள் காலை ஏழரை மணிக்குத் திரும்பி வரச் சொல்கிறார்கள். செய்வதறியாது புற நோயாளிகள் பிரிவுக்குத் திரும்பிப் போக யத்தனிக்கும் வள்ளியம்மாளுக்கு, அந்தச் சக்கர வியூக மருத்துவமனையில் திரும்பிச் செல்லும் வழி மறந்து விடுகிறது. எப்படியோ துணிவை வரவழைத்துக் கொண்டு ஒரு பெண் மருத்துவரிடம் உதவி கேட்டுத் திரும்புகிறாள். இருப்பினும் பாதி வழியில் மீண்டும் விக்கித்து நிற்க, அப்போது வரை அவளுக்குள் இருந்த பயமெல்லாம் திகிலாய் மாற அழ ஆரம்பித்து விடுகிறாள் வள்ளியம்மாள்.

அப்போது ஒரு ஆள் அவளை ஓரமாக நின்று அழச் சொல்கிறான் தினந்தோறும் பல நூறு அவலங்களைச் சந்திக்கும் மருத்துவமனை ஊழியர்கள் எவ்வாறு பச்சாதாபமில்லாத இயந்திரர்களாய் மாறியிருக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. இறுதியில் சுதாரித்துக்கொண்டு அவள் புற நோயாளிகள் பிரிவை அடையும்போது அங்கு உள்நுழைய கால அவகாசம் முடிந்து கதவு பூட்டப்பட்டிருக்கிறது. தன் மகள் உள்ளே இருப்பதைச் சொல்லிக் கதறும் வள்ளியம்மாளிடம், உள்ளே அனுமதிக்கக் கையூட்டு கேட்கும் காவலாளியின் சைகை மொழி அவளுக்குப் புரியவில்லை. வேறு யாரோ உள்நுழையும்போது அவளும் இடையில் நுழைந்து தன் பெண்ணைச் சென்றடைகிறாள்.

வகுப்புகளை முடித்து விட்டுத் திரும்பும் பெரிய டாக்டருக்கு சரஸ்வதி கேஸ் நன்றாக நினைவிருக்கிறது. ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு விட்டாளா என்று விசாரிக்கும் அவரிடம், இடமில்லை என்பதால் மறுநாள் காலை அவர்களை வரச் சொல்லியிருப்பதாக விபரம் தெரிவிக்கப்படுகிறது. அதீத கோபம் கொண்டு அவர் உரக்கக் கத்துகிறார். "வாட் நான்சென்ஸ்! நாளைக்கு காலை ஏழரை மணியா! அதுக்குள்ள அந்த பொண்ணு செத்துப் போயிடும்யா! என அவர் சொல்லும் தருணம் நம் காலடியிலிருந்து உலகம் நழுவிச் செல்வதைப் போல் தோன்றுகிறது. எப்பாடு பட்டேனும் சரஸ்வதி கண்டுபிடித்து வந்து சேர்க்கச் சொல்லி உத்தரவிடுகிறார். அவருக்கு வேண்டப்பட்டவர்களோ என்று ஊழியர்கள் பேசிக் கொள்கிறார்கள். நாற்புறமும் சிதறியடித்து ஓடுகிறார்கள். இடமே இல்லை என்று திருப்பி அனுப்பப்பட்ட பெண்ணிற்கு எப்படியேனும் ஓர் இடத்தை ஒதுக்கவும், சிறப்பான சிகிச்சை அளிக்கவும் அதீத முனைப்பு காட்டுகிறார்கள். திடீரென ஏனிந்த மாற்றம்? சரஸ்வதியின் மீது பெரிய டாக்டருக்கு இருக்கும் விசேஷ கவனம்!

அந்த நாள் முழுவதும் உடல்நலமில்லாத குழந்தையைத் தன்னந்தனியே விட்டுவிட்டு அலைக்கழிக்கப்பட்டிருந்த வள்ளியம்மாள், தன் ஊருக்கு திருப்பிச் சென்றுவிட முடிவெடுக்கிறாள். ஆஸ்பத்திரியின் நடைமுறைகள் அவளைக் கலக்கங்கொள்ள வைத்திருக்கிறது. வெறும் ஜுரம் தானே? கிராமத்திற்கே திருப்பிச் சென்று வைத்தியரிடம் காட்டிக் கொள்ளலாமென்றும் வெள்ளைக்கட்டி போட்டு விபூதி மந்திரித்து விட்டால், எல்லாம் சரியாகிவிடுமென்றும் எண்ணிக் கொள்கிறாள். சைக்கிள் ரிக்ஷாவில் ஏறி பஸ் நிலையத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் வள்ளியம்மாள், "சரஸ்வதிக்குச் சரியாய் போனால் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு இரண்டு கை நிறைய காசு காணிக்கையாக அளிக்கிறேன்" என்று வேண்டிக் கொள்வதோடு கதை முடிகிறது.

சொல்லவொண்ணாத் துயரத்தை ஏற்படுத்தும் இடம் இது வாசித்த ஓரிரு நாட்கள் உறக்கம் இழக்கச் செய்யும் வேதனை அது ஒரு சுவாரஸ்யமிக்க கதையாக மட்டுமே அது வரை வாசித்து கொண்டிருக்கும் எதிர்வினையற்ற முடியாத வெற்று வாசகனை, "நம்மால் ஏதேனும் செய்ய இயலாதா?" என்று பரபரக்க வைக்கிறது. கதைக்குள் ஒரு பாத்திரமாக நுழைந்து ஓடிச் சென்று வள்ளியம்மாளிடம் "திரும்பிப் போகாதே, அங்கே உன் பெண்ணை அனுமதித்துக் கொள்ள சிறப்பாய் ஏற்பாடுகள் நடக்கிறது. ஏனெனில் உன் குழந்தைக்கு வந்திருப்பது சாதாரண ஜுரம் அல்ல, நாளை காலை வரை கூட அது உன் மகளை உயிருடன் விட்டு வைத்திருக்காது" என்று உரக்க கத்திச் சொல்ல வேண்டும் என்கிற வெறி எழுகிறது.

சிறுகதைகள் வாழ்விலிருந்து உதிப்பவை எனக்கோ, உங்களுக்கோ, எவருக்கோ, வாழ்வில் என்றோ, எங்கோ நடந்த ஒரு சம்பவமோ அல்லது பல சம்பவங்களின் தொகுப்புதான் சிறுகதையாக வடிவெடுக்கிறது. சிறுகதைகள் எந்தத் தீர்வையும் சொல்வதில்லை. சுபம் போட்டு முடிவதில்லை, எந்த நீதியையும் வழங்குவதில்லை அவை நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

மருத்துவர் என்பவர் யார்? மருத்துவத் தொழிலின் முதன்மை தர்மம் எது? கடுமையான மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அடுத்த நாள் உயிரோடு இருப்பதே அரிது என்கிற வகையில் போராடிக் கொண்டு இருக்கும் ஒரு சிறுமியை ஒரு பெரிய மருத்துவர் எவ்விதம் கையாண்டிருக்க வேண்டும்? அந்தப் பெண்ணை மாதிரியாக வைத்து மாணவர்களுக்கு பாடம் எடுப்பதோடு மனிதாபிமானத்தை அல்லவா போதித்திருக்க வேண்டும்? அதன் அறிகுறிகளை குறிப்பெடுத்துக்

கொள்ளச் சொல்லும் போதே அதன் தீவிரத்தை பற்றியும் சிகிச்சைக்கான நடவடிக்கைகளையும் அல்லவா செயலாற்றிக் காட்டியிருக்க வேண்டும்? அந்தப் பாமரத் தாயிடம் அவள் குழந்தைக்கு ஏற்பட்டிருக்கும் இக்கட்டான நிலைமையை எடுத்துரைத்திருக்க வேண்டும் அல்லவா? உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் சிறுமியைக் காப்பாற்றும் பணியைவிடவா வகுப்புகள் முக்கியம்? ஓர் அவசர உணர்வு இருந்திருக்க வேண்டாமா?

சேவை மனப்பான்மையோடு செய்ய வேண்டிய கடமைகளுக்கு ஏன் மருத்துவமனை ஊழியர்கள் இவ்விதம் அலுத்து கொள்கிறார்கள்? சலிப்புடன் ஒரு அப்பாவிப் பெண்ணைக் கடிந்து கொள்ளும் ஸ்ரீனிவாசனிடம் தொடங்கி அங்குள்ள நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்காக அவளை அலைக்கழிக்கும் மற்ற ஊழியர்கள், ஓரமாக நின்று கொண்டு அழச் சொல்லும் ஒரு பரோபகாரி, காலங்கடந்ததால் உள்ளே செல்ல அனுமதிக்கக் கையூட்டு கேட்கும் காவலாளி என அங்கு யார் மீது சினம் கொள்வது? ஏன் ஒருவரிடத்திலும் பச்சாதாபம் இல்லை என கேள்வி எழலாம். ஆனால் அது அவர்களின் தவறு அல்ல. ஒன்றிரண்டு அல்ல ஓராயிரம் பேரை அன்றாடம் பார்த்து சலித்து இயந்திரர்களாய் மாறிப் போயிருக்கிறார்கள்.

நம்பிக்கையோடு வாழக் கற்றுக் கொடுக்கப்படுகிறதோ இல்லையோ, நிறைய மூட நம்பிக்கைகளோடு வாழப் பழக்கப்பட்டிருக்கிறோம் நாம். "வெள்ளைக்கட்டி போட்டு விபூதி மந்திரித்து விட்டால் எல்லாம் சரியாகி விடும்" என்ற எண்ணத்தோடு கிளம்பிவிடும் வள்ளியம்மாளின் அறியாமை நம்மைக் கடுங்கோபம் கொள்ளச் செய்தால், நம்மையும் நாம் சுய பரிசீலனை செய்து கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். வாழ்வில் எல்லாமே சார்பியல்தானே? அவள் அறிவுக்கு எட்டிய விதத்தில் அவள் யோவிசிக்கிறாள். ஆனால் நாம்? கொரோனா என்கிற கொள்ளை நோயால் உலகமே ஸ்தம்பித்து நிற்கும் வேளையில் கூட எத்தனையோ விவேகமற்ற செயல்களைச் செய்து கொண்டிருந்தோம் அல்லவா?

இப்படிப் பல கோணங்களிலிருந்து வினா எழுப்பும் இந்தச் சிறுகதை. எத்தனை முறை வாசித்தாலும் கதைதானே என்று கடக்க இயலாதது வள்ளியம்மாள் போன்ற அப்பாவித்தனமான, வறிய பெண்களுக்குப் போர்க் களமாய்க் காட்சியளிக்கும் மருத்துவமனைகளைக் கொண்ட இது போன்ற நகரம் நகரமே அன்று. அது "நரகம்" என்பதை உணர்த்திச் செல்கிறது.

உறவுகள் மேம்பட தத்துவஞானி வேதமாந்திரி மகரிஷி கூறிய அறவுரைகள்.

1. குடும்பத்திலும் சரி, அலுவலகத்திலும் சரி மனித உறவுகளில் விரிசல் ஏற்படாமல் இருக்கவும் ஏற்பட்ட விரிசல்கள் மேலும் வளராமல் இருக்க.
1. அர்த்தமில்லாமலும் பின்விளைவு அறியாமலும் பேசிக் கொண்டு இருப்பதை விடுங்கள்.
2. எந்த விஷயத்தையும் பிரச்சனையும் நாசுக்காக கையாளுங்கள், விட்டுக் கொடுங்கள்.
3. சில நேரங்களில் சில சங்கடங்களை சகித்துதான் ஆகவேண்டும் என்று உணருங்கள்.
4. நீங்கள் சென்னதே சரி, செய்ததே சரி என்று வாதாடாதீர்கள். குறுகிய மனப்பான்மையை விட்டு ஒழியுங்கள்.
5. உண்மை எது, பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள்.
6. மற்றவர்களை விட உங்களையே எப்பொழுதும் உயர்த்தி நினைத்து கர்வபடாதீர்கள்.
7. அளவுக்கு அதிகமாக, தேவைக்கு அதிகமாய் ஆசைப்படாதீர்கள்.
8. எல்லோரிடத்திலும், எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ, இல்லையோ சொல்லிக்கொண்டு இருக்காதீர்கள்.
9. கேள்விபடுகிற, எல்லா விஷயங்களை நம்பி விடாதீர்கள்.
10. அற்ப விஷயங்களை பெரிதுபடுத்தாதீர்கள்.
11. உங்கள் கருத்துக்களை உடும்பு பிடியாக இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.
12. மற்றவர் கருத்துகளை, செயல்களை, நடக்கின்ற நிகழ்ச்சிகளை தவறாக புரிந்து கொள்ளாதீர்கள்.
13. மற்றவர்களுக்குரிய மரியாதை காட்டவும், இனிய, இதமான சொற்களை பயன்படுத்த தவறாதீர்கள்.
14. புன்முறுவல்காட்டவும்சிற்சில அன்புசொற்களையும் சொல்லவும் கூட நேரம் இல்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.
15. பேச்சிலும், நடத்தையிலும், பண்பில்லாத வார்த்தைகளையும் தேவை இல்லாத மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத்தையும், பண்பையும் காட்டுங்கள்.
16. அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.
17. பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கி வர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சை துவக்க முன் வாருங்கள்.

– தொகுத்தது. வி. முத்துக்குமரசாமி,
மாப்படுகை.

ஊழ்வினை

ஞான. அம்புலி.

இறைவன் படைப்பில் அனைத்து உயிர்களுக்கும் ஆத்மா என்றதொன்று உடனிருக்குமாம்! அந்த உயர் எத்துணை பிறப்பெடுத்தாலும் அதனுடன் விடாமல் வருவது ஆத்மா மட்டுமே. ஆத்மா என்பது ஒவ்வொரு உயிரும் எப்படி வாழ வேண்டும் என்ற பாதையை வகுத்துக்கொடுக்குமாம். மேலும் ஒரு உயிர் நன்மை தீமைகளை செய்யத் தூண்டுவதோடு அவைகளை பட்டியலிட்டு பாதுகாத்துவருமாம். நேரம் வாய்க்கும் போது அந்த பட்டியலிலிருந்து ஒவ்வொன்றாக எடுத்து அவ்வுயிர் அனுபவிக்க வேண்டிய நன்மை தீமைகளை அடைந்திடச் செய்யுமாம். ஒரு உயிர் பூதயுடலை பிரியும்போது அதன் ஆத்மாவும் உடன் செல்லுமாம்.

சுருங்கச் சொல்ல வேண்டுமானால் ஊழ் அல்லது வினைப்பயனென்றால் ஒருவர் தனது வாழ்நாளில் செய்யும் நன்மை தீமைகளின் தொகுப்பேயாகும். இத்தொகுப்பு அந்த உயிர் எத்துணை பிறப்பை எந்த ரூபத்தில் எடுத்தாலும் தொடர்ந்து வருமாம். எனவே ஒரு உயிரின் வாழ்க்கை நிலை அவ்வுயிரின் முன் வினைப் பயன்களை பொருத்தது மட்டுமல்லாமல் அதனை ஆத்மா இடும் கட்டளைக்கேற்றவாறு இருக்குமாம். நல்லது அலலது தீயவை தனித்தனி பட்டியலில் இருக்குமாதலால் இவ்விரண்டையும் தனித்தனியே அனுபவிக்கப்பட வேண்டியதாம். உதாரணத்திற்கு எத்துனை நன்மைகள் செய்திருந்தாலும் அவரவர் செய்த பாவத்தில் ஒரு துளி கூட குறைக்கப்படாதாம். அதாவது ஒருவரது அபரீத நல்வினைப் பயன்கள் neither transferable nor interchangeable but accountable. முன் வினைப் பயன் ஒரு பிறவியில் தீர்க்கப்படாவிட்டால் பின் வரும் பிறவிகளுக்கும் தொடர்ந்து வருமாம். அதோடு ஒவ்வொரு பிறவியிலும் புதிதாக செய்யப்படும் நல்ல தீய காரியங்கள் ஊழ்வினைப் பட்டியலில் தொடர்ச்சியாக சேர்க்கப்படுமாம்.

திருக்குறளில் ஊழலை பற்றி குறிப்பிடப்படும்போது ஊழலை முழுமையாய் தடுக்க வேற்று வழியை எண்ணினாலும் அது அவ்வழியைத் தாண்டி முன்வந்து நிற்குமாம்! ஊழலின் விளைவுகளில் ஒன்று தீவினைப்பயன் அறிவை அகற்றுவது மட்டுமில்லாமல் நல்வினைப்பயன்னுற்றிருந்தால் தான் அறிவை பெற முடியுமாம்.

ஊழ்வினையினைப் பற்றி பல்வேறு சமயங்கள் எதிர்மறையான கருத்துக்களை கூறிவந்துள்ளன. உதாரணத்துக்கு பௌத்தர்களும் சமணர்களும் ஊழ்வினையிலிருந்து எவரும் எள்ளளவுகூட தப்பவே முடியாது என்ற கருத்தை முன்வைக்கின்றனர். ஆயினும் இந்து சமயம் குருவறுளும் இறையருளும் ஒன்று சேரப்பெற்றவர்கள் ஊழ்வினையின் முழுத்தாக்கத்திற்கு ஆளாக்கப்படமாட்டார்கள். எனச் சொல்கிறது. உதாரணத்திற்கு இறையருள் பெற்ற ஒருவர் Major அறுவை சிகிச்சை செய்து கொள்ள நேரிட்டால் பின்வரும் வலியின் தாக்கத்தை தாங்கும் மனவலிமை அவருக்கு கிடைத்திடுமாம். ஏதோ முற்பிறவியில் செய்த ஊழ்வினையின் தாக்கத்தை, துயரை, இப்பிறவியில் அனுபவிக்க வேண்டிய நிலை ஏற்படுவது இயற்கையின் நியதி என்பதால் அத்தண்டனையை ஏற்றுக்கொள்ளும்போது அத்தண்டனையின் தாக்கத்தை ஓரளவு குறைத்திட வைத்தல் ஆண்டவர் அருளால் உண்டெனச் சொல்லுவர். இதுபற்றி பல நிகழ்வுகள் உண்டென்றாலும் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

பாரதப்போரின் உச்சகட்டம்! யுத்தகளத்தில் கர்ணன் தன்னை முழுமையாய் ஈடுபடுத்திக்கொண்டிருந்த சமயம். குந்திதேவி தன் மகன் கர்ணனை அழைத்து ஒரு உண்மையை கூறுகிறார். அதாவது எதிர் வரிசையில் நின்று போராடும் பாண்டவர்கள் அனைவரும் உன் உடன்பிறந்த சகோதரர்கள் என்றும் அவர்களில் எவரையுமே கொன்று வெற்றி கொள்வது மகாபாதகச் செயல் என்கிறாள். திகைத்துப்போன கர்ணன் தன் தாயின் கரம்பிடித்துச் சொன்னான்! 'என்னை வளர்த்து இன்நிலைக்கு உயர்த்திய துரியோதனனையோ அவர்பால்ஈர்புடைய வேறுகௌரவசகோதரர்களையோ இந்த நிலையில் விட்டுவர நான் எள்ளளவும் சம்மதிக்க மாட்டேன்! இதுவே எனது சத்தியவாக்கு. மேலும் பாண்டவர்களை வென்று துரியோதனனுக்கு செஞ்சோற்றுக்கடன் முடித்த பிறகே தாயாகிய நீ அளிக்கும் எந்த தண்டனையையும் ஏற்பேன்' என்றான். பேதலித்துப்போன குந்திதேவி 'என்னருமை மகனே! நீ போர்க்களம் செல்லும்முன் எனக்கு 2 வாக்குருதியாவது தருவாயா? இல்லையேல் உன் கண்ணெதிரே என் உயிரை மாய்த்துக்கொள்கிறேன்' என்றாள். கர்ணன் தாயின் பாசத்திற்கு கட்டுப்பட்டு சம்மதிக்கவே, குந்தி சொன்னான். "கர்ணா! முதலாவதாக அர்ஜுனன் வில்வித்தையில் உன்னைப் போல் உலகமகா வீரன். ஒரு வேளை விதிப்படி உன் கரத்தால் அவன் சாகத்தான் வேண்டுமென்றால் தன் மார்பிலே அம்புபட்டு அவன் இறக்க வேண்டுமே தவிர முதுகிலோ வேறு எந்த பகுதியிலோ அடிப்பட்டு இறக்கக்கூடாது. அதனால் உனது நாக பாணத்தை அர்ஜுனனை நோக்கி ஒரே ஒரு

முறைதான் பிரயோகிக்க வேண்டும். இரண்டாவதாக அர்ஜுனனைத் தவிர வேறு எந்த பாண்டவ மன்னர்களையும் கொல்லக்கூடாது'' என்றாள். இரண்டு வாக்குறுதிகளுக்கும் உறுதியளித்துவிட்டு கர்ணன் போர்க்களம் விறைந்தான்.

இந்த இருவருடைய பேச்சை ஒட்டுக்கேட்ட கிருஷ்ண பரமாத்மா, ஒரு கால் அர்ஜுனன் அம்படிபட்டு உயிரிழந்தால் பாரதப்போரே தலைகீழ் ஆகிவிடுமே என யோசித்தார். அர்ஜுனனின் வாழ்க்கையை ஞானக்கண்ணால் பார்த்த கிருஷ்ணபரமாத்மா வினைப்பயனின் விளைவால் அர்ஜுனன் சாவதற்கு நேரம் வந்துள்ளதை கண்டறிந்தார். உடனே அவர் தன் வேலையில் இறங்கினார். அர்ஜுனன் தன் தேரிலிருந்தபடி அம்பு மழை பொழிந்து கௌரவப்படைகளை கொன்று குவித்துக் கொண்டிருந்தான். அர்ஜுனன் களைப்புற்ற நேரம் பார்த்து கர்ணன் தனது நாகபாணத்தை (இந்த அம்புவிடமிருந்து எவரும் தப்பிவிடவே முடியாதாம்) அர்ஜுனனை நோக்கிவிட்டார். இந்த செயலைப்பார்த்த அர்ஜுனன் திகைத்து செய்வதறியாமல் நின்றான். அதே சமயம் அர்ஜுனன் தேருக்கடியில் பதுங்கியிருந்த கிருஷ்யபரமாத்மா சடாரென தேரை பூமிக்கடியில் அமுக்கினார். சடாரென தேரும் பூமிக்கடியில் ஒரு அடி அளவு அமுங்கிவிட அர்ஜுனனின் மார்பு நோக்கி விடப்பட்ட கர்ணனின் அம்பு (அர்ஜுனன் தேர் ஒரு அடி ஆழத்தில் திடீரன புதைந்த காரணத்தால்) அர்ஜுனனின் தலைக்கு மேலே பறந்து சென்றது. அர்ஜுனன் ஊழ்வினைப்பயனால் உயிர் துறக்க இருந்த நிலையில் கிருஷ்ண பரமாத்மாவின் அருளார்ந்த செயலால் அர்ஜுனன் உயிர் தப்பிட, பாரதப்போரில் பாண்டவர் வெற்றி பெற்றனர்.

பொதுவாக முற்பிறவியில் அவரவர் செய்த பாவபுண்ணியங்களுக்கேற்ப கிரக அமைப்புகளும் கிரக அமைப்புகருக்கேற்ப நோய்களும் உண்டாகின்றன. நோய் பாதிப்புகளிலிருந்து அந்தந்த நோயுக்குறிய தெய்வப் பரிகாரங்களை மேற்கொள்வதின் மூலம் ஓரளவு நோயின் கடுமையான தாக்கத்திலிருந்து தப்பித்துக்கொள்ளலாம். ஒவ்வொரு கிரகமும் தனக்கென சில தனித்தன்மையுடன் செயல்படுகின்றன. பாதகமாக அமைந்த கிரகங்களின் தசாபுத்தி காலங்களில் அதனதன் காரகாரகத்துவத்திற்கேற்ப நோய்கள் உண்டாகின்றன. இந்த கிரகப்பலன் காரணமாக நோயின் தன்மை, தாக்கம் முடிவு செய்யப்படுகிறது.

நவக்கிரகங்களின் வலிமையான கிரகமாக இருப்பவர் சனிபகவான். ஒருவர் முற்பிறவியில் செய்த பாவ புண்ணியங்களுக்கு (வினைப்பலன்) ஏற்ப இப்பிறவியில் நன்மைகளையும் தீமைகளையும் பெறுகிறார்களா என்பதை அவ்வப்போது Monitor செய்வது இவரே என்பார்கள். கெட்ட காலங்களில் வருமுன் காப்போனாக இருக்க சனிபகவானின் தாக்கம் குறைய அனுமனை வணங்க வேண்டும் என்று சொல்லுவர். இதனால் அனுமன் 'சங்கட மோச்சனன்' என்று அழைக்கப்படுகிறார்.

ஊழ்வினை பற்றி சிலப்பதிகாரத்தில் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்
உரைசால் கற்புடைப் பெண்டிரை உயர்ந்தோர்
போற்றுவர்,
அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும்.

சுவாமி விவேகானந்தரும் வினைப்பயனைப்பற்றி கடுமையாக சாடியுள்ளார். 'ஒருவன் தவறு செய்துவிட்டால் அதற்குள்ள தண்டனையை யாரும் நிறுத்தி வைக்க முடியாது. அதே போல் ஒருவன் செய்யும் நல்ல காரியத்துக்காக அவனுக்கு கிடைக்கும் பலாபலன்களை யாரும் தடுத்திட முடியாது'

பிள்ளைகள் என்போர் வினைக்கடன் வாங்க வருவோரே! அவர்களிடம் திரும்ப எதையும் எதிர்பார்க்காமல் அவர்களுடைய நன்மையை மட்டும் கருதி அவர்களை வளர்த்து ஆளாக்கி விட்டுவிட்டால் அக்கடன் பெரும்பாலும் தீர்ந்துவிடுமாம். பழைய கடனை வாங்கப் பிள்ளையாய் வந்தவர்கள் என்று அறியாமல் புதுக்கடனைத் தம்மக்களிடமிருந்து அன்பையும் ஆதரவையும் ஆயுள்வரை கீழ்படிதலையும் விரும்பி வற்புறுத்துகிறார்கள். இது மேலும் வினைகளை உண்டாக்கி விடுதலை பெறவொட்டாமல் தடுக்கும். வாங்கிய கடனை மாத்திரம் கொடுத்துவிட்டு மேற்கடன் விரும்பாதவர்களுக்கு இல்லறம் விடுதலை மார்க்கமே ஆகும்.

நம் முன்வினைக்கு ஏற்ப தீய நல்ல காரியங்கள் அவ்வப்போது அரங்கேறிவந்தாலும் விதைவிதைத்த பின் வளர்ந்த பயிர் பருவமடைந்து மொட்டாகி பூவாகி கனியாகி பழுக்கும்போது அவைகளை முழுமையால் பறித்திடுதலே புத்திசாலித் தனம் என்பதுபோல் வினை விதைத்தவன் வினைப்பயன் அனைத்தையும் அனுபவித்தே ஆகுவேண்டும் என்பது இறையாண்மையாகும்.

தொடரும்....

சிறுவர் பகுதி

தயாரிப்பு **தஞ்சை தியாகு**
அலைபேசி: 94437 00375
Email: thiagu1943@gmail.com

நாளைக்குச் செய்யலாம் என்று ஒத்திப்போடுவது உங்களை நீங்களே பிடித்துப் பின்னுக்குத் தள்ளுவது போலாகும். செய்ய வேண்டியதை இன்றே செய்யுங்கள். இப்போதே செய்யுங்கள்.

உலகின் எட்டாவது அதிசயம் !



பெரும் செல்வந்தர் ஒருவர் எதுக்கு இந்த சொத்து.... பார்க்க முடியல . வாரிசுக்கும் ஆர்வமில்லை... என்று ஒரு எஸ்டேட்டை விற்றார். சாக்கு மூட்டையில் கட்டும் அளவுக்கு பணம் வந்தது. ஆனால் அவர் என்ன செய்ய ? .... உடம்புல இல்லாத வியாதியை பட்டியல் போட்டுடலாம். மருத்துவர்கள் உயிரை காப்பாத்துனாலும், நல்ல ஆரோக்கியத்தை தர மாட்டேங்குறாங்க. வயசாயிடுச்சுல்ல அப்படித்தான் இருக்கும்ன்னு சொல்றாங்க.எந்த உடற் குறையும் இல்லாம ஆரோக்கியமா இருக்கானேன்னு பிச்சைக்காரனைப் பாத்தாக்கூட பொறாமையா இருக்கு. இவ்வளவு பணம் இருந்து என்ன பயன்..... அனுபவிக்க வழியில்லையே....என்கிறார்.இதன் மூலம் இவர் நமக்கு சொல்வது, உலகத்திலேயே தலையாயது சொத்தோ, வீடோ, எஸ்டேட்டோ, வளாகங்களோ, தொழிலோ, பணமோ அல்ல, நல்ல உடல் நலமே சொத்து! நம் சரிமான உறுப்புகளின் முன், ஜப்பானிய மிக்சி கூட தோற்றுவிடும். வேண்டாத உணவுகளை உள்ளே தள்ளி, அதற்கு ஏகப்பட்ட கெடுதல்களைச் செய்கிறோம். 1015 ஆண்டுகள் மட்டுமே உழைக்கும் ஒரு நீரிறைக்கும் இயந்திரத்தைவிட நம் இதயம் 100 ஆண்டுகள் பழுது இன்றி உழைக்கத் தயாராக இருக்கிறது. ஆனால் அதை , சிகரெட் புகையாலும், குடியாலும்,கொழுப்பு சத்தாலும் சரிவர இயங்கவிடாமல் செய்கின்றோம். வடிகட்டி இயந்திரம் எதுவாயினும் அதை அவ்வப்போது சுத்தம் செய்ய வேண்டி யிருக்கிறது. ஆனால் கிட்னி (சிறுநீரகம்) எனும் அருமையான வடிகட்டி இயந்திரத்தை வைத்திருந்தும் அதனைக் கெடுத்தே தீருவது என்ற முடிவோடு வாய்க்கட்டுப்பாடு இன்றி அதன் செயல்பாட்டைக் குறைக்கிறோம்.உலகின் அதிசயம் ஏழு என்கின்றனர். அதை எட்டாக்கி அவற்றில் முதலாவது இடத்தில் வைக்கவேண்டியது மனித உடல். இவ் உடலை முழுமையாக முறையாக செயல்பட வைத்தால்தான் உடல் நலம் பெறுவோம்!

சாவிலும் சிலேடை



புலவர் ஒருவர் நோயுற்று படுக்கையில் கிடக்கிறார். உணவு உள்ளே போகவில்லை. வேதனையுற்ற அவர் குடும்பத்தார் ஒரு குவளையில் பாலை எடுத்து பதற்றத்தில் பக்கத்திலே இருந்த ஓர் அழுக்குத் துணியில் நனைத்து வாயில் பிழிந்திருக்கிறார்கள். கொஞ்சம் பாலாவது வாயை நனைக்கட்டுமே என்ற நினைப்பில்... அவரோ வாயில் பட்ட பாலைத் துப்பிவிட்டார். வீட்டு மனிதர்கள் வேதனையோடு ...பால் கசக்கிறதா ?... என்று கேட்டதும் பாவி மனிதர் குறும்பு பொங்க... பாலும் கசக்கவில்லை.துணியும் கசக்கவில்லை என்றாராம்.கசக்க என்பதற்கு இரண்டு பொருள் உண்டு. ஒன்று கசப்புச் சுவை.துணியும் கசக்கவில்லை என்றால் துணி துவைக்க(கசக்க)வில்லை என்று ஒரு பொருள். பாருங்கள், மரணப் படுக்கையிலும் சிலேடை பேசுகிறார் என்றால் எவ்வளவு சந்தோஷமான மனிதர் அவர்!

பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்.

ஒரு நாளின் முற்பகலில் ஒருவனுக்குத் தீங்கு செய்தால் ,
செய்தவருக்குத் தீங்குகள் அன்று பிற்பகலுக்குள் தாமாகவே வந்து சேரும்.

திருக்குறள்

நடப்பதும் நடக்கப்போவதும்

நடப்பதை நடக்கப்போவதை உள்ளபடி சொல்லும் ஞானி ஒருவர் ஒரு ஊருக்கு வந்தார்.மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அவரை வியந்து பாராட்டினர். ஒரு விடலைப் பையனுக்குமட்டும் அவர் புகழ் வெறுப்பை விளைவித்தது. அவரைத் தோற்கடிக்கத் துடித்தான். ஒரு பட்டாம் பூச்சியைத் தன் உள்ளங்கையில் வைத்து மூடிக்கொண்டான் ஞானியைக் கேட்டான் கையைத் தன் பாண்ட் பாக்கெட்டில் புதைத்துக் கொண்டான. ஞானியைக் கேட்டான்ஐயா.. உம்மை உள்ளது உள்ளபடியே சொல்லும் ஞானி என்கிறார்கள். எங்கே என் பாக்கெட்டில் உள்ள பூச்சி உயிருடன் இருக்கிறதா ? செத்துவிட்டதா ?...சொல்லுங்கள் பார்ப்போம். என்று சவால் விட்டான்.

செத்துவிட்டது என்று அவர் சொன்னால், உயிருடன் காட்டுவது, உயிருடன் இருக்கிறது என்று சொன்னால் சாகடித்துவிட்டு செத்துவிட்டது என்றுகாட்டுவது. எப்படியும் அவர் பொய்யர் ஆக வேண்டும்என நினைத்துசொல்லுங்கள்...இது உயிருடன் இருக்கிறதா ? செத்துவிட்டதா ?. என்றான். ஞானியோ அது உன்கையில் இருக்கிறது. என்று கூறிவிட்டுச் சிரித்தார். பூச்சி அவன் கையில் இருக்கிறது. அது உயிருடன் இருப்பதும் இல்லாததும் அவன் கையில் (முடிவு) இருக்கிறது. சரிதானே, நம் வாழ்க்கையும் அந்த வண்ணத்துப் பூச்சி நிலையில்தான் உள்ளது. வாழ்வா, சாவா... ? புகழா, இகழா... ? வெற்றியா, தோல்வியா... ? இவையெல்லாமே நம் விடாமுயற்சி, இலக்கு இவற்றைப் பொறுத்துதான் இருக்கிறது.

நன்றி: சுகி சிவம்

பணவெறியர்

ஒரு பணவெறியர்...படகு விடும் ஏரிக்குப்போனார் தமக்கு நீச்சல் தெரியாது என்றாலும் ஜம்பமாக தெரிந்தவர் போல் ஆழமான பகுதியில் குதித்துவிட்டார். மூச்சுத் திணறியது. யாராவது தம் உயிரைக் காப்பாற்ற மாட்டார்களா, காப்பாற்றி விட்டால் தன் சொத்தையே கொடுக்கலாம் என்றும் அலறினார். அங்கே வந்த காவலர் ஒருவர் குதித்து இவரைக் காப்பாற்றி கரை கொண்டுவந்து சேர்த்தார்.

உயிர் தப்பியதும் புத்தி மாறிவிட்டது. காசு கொடுக்க மனம் வரவில்லை. பணவெறியர் ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து பிச்சைக் காரனுக்கு வீசுவது போல் வீசினார்.அதை எடுக்க மறுத்த காவலர் பக்கத் திலிருந்த ஒரு விளம்பரப்பலகையைக் காட்டினார். சிக்கிக் கொண்டவர்களை யாராவது காப்பாற்றினால் குறைந்த பட்சம் அன்பளிப்பு நூறுரூபாய் என்றிருந்தது.

பணவெறியர் காவலரை அவமதிக்கும் தொனியில்...ஓஹோ! இந்தப் பணத் தாசையால்தான் காப்பாற்றினாயா ? நான், நீ ஏதோ மிகப் பெரிய சேவை உணர்வுடையவன் என்று நினைத்து விட்டேன். இருந்தாலும் உனக்கு இவ்வளவு கீழான பணத்தாசை கூடாதப்பா !...என்று நீட்டி முழங்கினார். காவலர் சிரித்தபடி ...ஐயா... இந்தப்பணம்தான் எனக்கு முக்கியமென்றால் நான் உங்களைக்காப்பாற்றி இருக்கவே மாட்டேன்...சாக விட்டிருப்பேன். அதோ அங்கிருக்கும் அரசாங்க விளம்பரப் பலகையைப் படியுங்கள்.... அப்போதுதான் உங்களுக்குப்புரியும்... என்றபடி போய்விட்டார். அவசர அவசரமாக அங்கே போய்ப் பார்த்தால் இந்த ஏரியில் விழுந்து இறந்து போகும் நபர்களின் சடலங்களை உடனுக்குடன் அப்புறப் படுத்தினால் சடலத்திற்கு ஐநூறு ரூபாய் சன்மானம் தரப்படும். என்று எழுதியிருந்தது. காவலர்க்கு ரூபாய்தான் முக்கியம் என்றால் அவரைச் சாகவிட்டு செத்த பிறகு எடுத்துப் போட்டிருந்தால் கூடுதலாக நானூறு கிடைத்திருக்குமே!

கணிதப்புதிர்:

1) ஆங்கில எழுத்துக்கள்26க்கும் வரிசையாக 1, 2, 3, 4 என்றவாறு எண் கொடுத்துக் கொள்ளுங்கள். அதன்படி 21475 என்ற எண் வரிசை குறிப்பிடும் வார்த்தை எது ?

2)ஒரு ரயில் நிலையத்தில் கீழ்க்கண்ட நான்கில் ஒன்று கட்டாயமாக இருக்க வேண்டும்:

a). பிளாட்பாரம் b). புக்கிங் ஆபீஸ் c). ரயில்வே லைன் d). வெயிட்டிங் ரூம்

3)கீழ்க்கண்ட வார்த்தைகளில் எழுத்துக்கள் தாறுமாறாக க் கலைந்துபோயுள்ளன. அதை ஒழுங்குபடுத்தி ஒளிந்திருக்கும் வார்த்தைகளைக்கண்டுபிடியுங்கள்.

1. கம்புதத் 2.யாரபிணம் 3. ERGIT 4. ARMSAD

பழமொழியை பூர்த்தி செய்யுங்கள்

1. ஆடற மாட்டைஆடிக் கறக்கணும்.....
2. கல்லானாலும் கணவன்.....
3. அரண்டவன் கண்ணுக்கு .....
5. வல்லவனுக்குப்.....
6. பாம்பின் கால்.....
7. அழற குழந்தைதான்.....
8. தாயைப்போல பிள்ளை.....
9. வீட்ல எலி.....
10. விடிய விடிய கதை கேட்டாலும் .....
11. ஏட்டுச்சுரக்காய்.....
12. தாய் எட்டடி பாய்ந்தால் .....
13. ஊர் ரெண்டு பட்டா .....
14. பணம்.....

ஜூலை முக்கிய தினங்களில் சில

01 டாக்டர்கள் தினம்

11 உலக மக்கட்தொகைக் கணக்கெடுப்பு தினம்

ஒரு வேண்டுகோள்!

தனக்கென்று ஒரு தனி பாணி அமைத்துக்கொண்டு வெற்றி யாளராக வலம் வரும் முக்கிய நபரை சந்தித்த கல்லூரி இளம் மாணவர்கள் அவர் பெயரில் ரசிகர்மன்றம் தொடங்கவேண்டும் என்று ஒரு வேண்டுகோளை வைத்தனர். அப்போது அந்த நபர் அளித்த பதில் அற்புதமானது. ரசிகர் மன்றங்கள் அமைப்பதில் ஆர்வம்காட்டும் பலரும் இருபது முதல் இருபத்தி ஐந்து வரை உள்ள இளைஞர்கள்.அந்த காலகட்டம்தான் ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் மிக முக்கியமானது. தன் எதிர்கால பிரகாசமான வாழ்வுக்கான அஸ்திவாரக்கல் நடவேண்டிய அருமையான நேரம். இந்தத் தருணத்தில் இன்னொரு மனிதனுக்குக் கொடி பிடிப்பதிலும், பாராட்டுவிழா நடத்துவதிலும் ,போஸ்ட்டர் அடித்து ஒட்டுவதிலும் இளைஞர்கள் தங்களது பொன்னான நேரத்தைச் செலவழித்து தங்கள் வாழ்க்கையை வீணடித்துக் கொள்வதை என்னால்அனுமதிக்கமுடியாது என்றார். இத்தகு உயர்வான மனிதர்தான் நடிகர் நாசர்.

கடவுள் கொடுத்த ஒப்பற்ற பரிசாகிய காலத்தை யாருக்காகவோ வீணடிக்கிற இளைஞர்கள் சினிமா, கட்சி, அரசியல் , ஜாதி என்ற ஏதோ ஒரு பெயரில் பாழாகிவிடுகிறார்கள். அருமையான இளம் பருவத்தை எவன் பின்னோ திரிந்து எவனுக்கோ ஜே போட்டு வெறி பிடித்தவர்களாய் வீணாவது சகிக்கமுடியாது.ஒரு விவேகம் ,ஒரு விழிப்பு,ஒருவகை எச்சரிக்கை உணர்வு, இளமையில் உள்ளவர்கள் வாழ்வில் உயரம் தொடுகிறார்கள்.யாரோ ஒரு தலைவனுக்காக முட்டாளாக இவர்கள் அழிவதை கவிஞர் அறிவுமதி அழகாக படம்பிடிக்கிறார்.

ஒன்றைப் பத்தாகவும் நூறாகவும்
ஆயிரமாகவும் லட்சமாகவும்
கோடியாகவும் ஆக்கிக்காட்ட உதவும்
பூஜ்யங்களே நாங்கள் – இப்படிக்குத் தொண்டர்கள்.

பயம்தான்



ஒரு ராஜா விசித்திரமான போட்டி ஒன்று வைத்தார். ஓர் ஆடு வளர்த்துக் கொண்டிருந்தார்.நாள் தோறும் அதற்கு நல்ல சாப்பாடு போடவேண்டும்.ஆனால் அது கொழுக்கவே கூடாது....முடியுமா? என்று போட்டி வைத்தார். எல்லாரும் தோற்றுப் போனார்கள். புத்திசாலியான ஒருவன் மட்டும் காட்டிலிருந்து ஒரு நரியைப் பிடித்து வந்து ஆட்டுக்கு எதிரில் கட்டிவிட்டான்.ஆட்டுக்கு வேளாவேளைக்கு நல்ல தீனி வழங்கப்பட்டது.என்றாலும் ஆடு பயத்தில் சாப்பிடவே இல்லை.கொழுக்கவில்லை. மாறாக வாடி வதங்கி மெலியத் தொடங்கியது.பிறகென்னபரிசு இவனுக்குத்தானே! பயம்தான் உயிர்களுக்கெல்லாம் முதல் எதிரி! மனிதனுக்குக் கவலை...மரணவாசல்!

நாள் கிழமைகளில் நண்பர்களுக்கு வாழ்த்து,எஸ்.எம்.எஸ். அனுப்புகிறோம்.அதோடு நின்றுவிடாமல் ,சிறியவர்கள்,வயதில் மூத்த பெரியவர்களின் பாதங்களை வணங்கி ஆசிகளைப் பெற்று,அவர்களையும் மகிழ்கிக்கலாமே!

ஆசைப்படுங்கள். அதில் தெளிவாக இருங்கள்!.

ஏதாவது வேலை வேணும் சார்!...கொஞ்சம் பார்த்து செய்யுங்க...நான் பார்க்கப்போன ஒரு பிஸினெஸ் மேனிடம் இப்படிக் கெஞ்சிக் கொண்டிருந்தார் ஒருவர். இவரோ என்ன வேலை வேணும்... என்று கேட்டார். எதுவா இருந்தாலும் செய்யறேன் சார்... நீங்க மனசு வச்சா போதும். என்ன படிச்சிருக்கே... ? டிகிரி படிச்சிருக்கேன் சார்.

கம்ப்யூட்டர் இயக்கத் தெரியுமா?

தெரியும் சார்... ஆங்கிலத்தில் கடிதம் டைப் பண்ணத்தெரியுமா ? தெரியும் சார்...., இவ்வளவு தெரிஞ்ச உனக்கு என்ன பண்ணணும்னு தெரியலையா ? வந்தவர் கொஞ்சம் நம்பிக்கையிழந்து சார் உங்க கம்பெனில இல்லேன்னாலும் வேற ஏதாவது கம்பெனில கொஞ்சம் சொல்லிவிடுங்க சார்...
சரிப்பா சொல்றேன். உனக்கு என்னவேலை வேணும்... எதுவா இருந்தாலும் சரி சார். என்னோட ஆட்டோ மொபைல் கம்பெனில மெக்கானிக்காக சேர்ந்துகிறியா ? எனக்கு வேலை தெரியாது. வேற ஏதாவது வேலை கொடுங்க சார்..... வேறன்னா என்ன வேலைய்யா ?..... என்று அவர் எரிச்சலானார்.....

வந்தவர் விக்கித்து நின்றார்.போங்க தம்பி என் நேரத்தை வீணடிக்காதீங்க என்று சொல்லி அந்த பையனை விரட்டாத குறையாக அனுப்பிவிட்டார்.பக்கத்திலிருந்த அவரைத் தெரிந்த நபர் கேட்டார்.
ஏன் சார் இங்கே வேலை எதுவும் காலி இல்லையா ? ஏன் இல்லை....நிறைய இருக்கு.ஆனா! அவனுக்குத் தகுதி இல்லை என்றார்.என்ன செய்யணும்னே தெரியாதவன வச்சிட்டு என்ன வேலை வாங்கமுடியும் தம்பி.

நானும் ,அவனா ஏதாவது கேட்பானான்னு கம்யூட்டர் தெரியுமா ?இங்கிலீஷ் தெரியுமா ?ன்னுல்லாம் கேட்டுப்பார்க்கின்றேன். எதாவது வேலை குடுங்கன்னுதான் கேட்கிறானே ஒழிய வேற எதுவும் சொல்றானா பாத்தியா !...அவனுக்கு என்ன வேணும்னு அவனுக்கே தெரியலை.விபரம் தெரிஞ்ச யாரும் அவனை வேலைக்கு வச்சுக்க மாட்டாங்க. எந்த குறிக்கோளும் இல்லாம இருக்கிற இவன் எதையும் கத்துக்கவும் மாட்டான் என்றார் தீர்க்கமாக. இப்படித்தான் நிறையபேர் என்னவாகவேண்டும் என்ற குறிக்கோள் ஏதும் இன்றி உள்ளனர்.

என்னவாகவேண்டும் என்பதில்கூட தெளிவில்லாத ஒருவருக்கு யாரால்தான் உதவி செய்யமுடியும். நான் ஆசைப்படுகிறது எதுவுமே நடக்கிறதில்லை என்பவர்களை இறுக்கிப் பிடித்துக்கேட்டால் அவர்களது எல்லா ஆசைகளும் மங்கலாகவே இருக்கும்....தெளிவானதாக இருக்காது என்பதுதான் உண்மை..

பொன்மொழிகளில் சில

நல்ல நண்பர்கள் கடவுள் கொடுத்த பரிசு. நல்ல பெற்றோர்கள் பரிசாக வந்த கடவுள்கள்.

நட்பு ஒன்றுதான் அனைவருக்கும் இன்பம் அளிக்கக்கூடிய ஒன்று. காது கேளாதவர்களும் அதைக்கேட்க முடியும். பார்வை இல்லாதவர்களும் அதைப்பார்க்கமுடியும்,குழந்தைகளும் அதை உணரமுடியும்.

கணிதப்புதிர் விடைகள் :

1) BADGE 2) எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் ரயில்வே லைன் கட்டாயம் வேண்டும்.

3) 1. புத்தகம் 2. பிரயாணம் 3. TIGER 4. MADRAS

பழமொழிவிடைகள்

1. பாடுற மாட்டை பாடிக் கறக்கணும். 2. புல்லானாலும் புருஷன் 3. இருண்டதெல்லாம் பேய்
4. வீட்டுக்குப் பிள்ளை 5. புல்லும் ஆயுதம். 6. பாம்பறியும்
7. பால் குடிக்கும் 8. நூலைப்போல சேலை 9. வெளியில புலி
10. சீதைக்கு ராமன் கித்தப்பான்னான் 11. கறிக்கு உதவாது. 12. குட்டி 16 அடி பாயும்.
13. கூத்தாடிக்குக் கொண்டாட்டம் 14. பத்தும் செய்யும்.

பிழைதீருத்தம் சிறுவர் பகுதி 46ம் பக்கம் கடைசி 3வரிகள்

கவலைகள் மேகங்கள் போன்றவை. தொடர்ந்து வந்துகொண்டே இருக்கும். அதை நிரந்தரமாக்குவதும் தற்காளிக மாக்குவதும் நம்மிடம்தான் உள்ளது. நிரந்தரமாக்கினால் நீங்கள் நோயாளி தற்காலிக மாக்கினால்நீங்கள் புத்திசாளி.

திருவிளையாட்டம் நண்பர் கூட்டமைப்பின் ஆண்டு விழா

பரந்துபட்டு வாழும் திருவிளையாட்டம் கார்குலச் சுற்றங்கள், ஆழங்காற்பட்ட நட்பின் வேட்கையால் ஒன்று கூடி மகிழும் 7ஆம் ஆண்டு விழா, சென்னை, வடபழனி நம்ம வீடு வசந்த பவன் அரங்கில் கடந்த 23.06.2024, ஞாயிறு காலை 10மணி முதல் மதியம் 2மணி வரை கோலாகலமாக நடைபெற்றது. நூற்றுவர் மகிழ்ந்து குலாவ, பாட்டும் பரதமும், கூட்டப் போட்டியும் பரிசுமாய், சிறுவர், பெரியோர் நெஞ்சம் களித்தனர்.

திரைப்புகழ் நடிகர் திரு. கமலேஷ் அவர்களின் சிறப்புரையோடும்

நல்விருந்தோடும் மண்வாசம் மணந்தது. அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு.கோ. தியாகராஜன் அவர்களின் பெருமுயற்சியால் விழா வெற்றிகரமாக நடந்தேறியது.

திருவிளைத் தருநிழல்
நறுமண முல்லையூர்
ஒருவன நாயகி
பெருமுளைச் சுயம்பரின்
திருவிளை யாட்டமே!
திருவருள் பெற்றவூர்
தீந்தமிழ் நாட்டிலோர்
அறிவொளி முழக்கமாய்
ஆல்போல் விரிந்தசீர்!
கருவிலே திருவெனக்
கார்குலம் கிளைத்தவோர்!
சேரும் இடமெலாம்
செழிக்கும் சுற்றமே;
வீர சோழனின்
ஈர நதிக்கொடை!
ஊரும் சூழ்கலை
வாணராம் நட்பிலே!

வீட்டுக் கொருவரோ
வாத்தியார் ஆவார்–
வேளாண் தொழிலே
உயிர்மூச் சாகும்!
காட்டு மூங்கிலைக்
கட்டாய் அறுத்து,
தோட்ட வேலியாய்த்
தொடுத்தவோர் காலம்;
பூட்டிய ஏர்க்கால்
புழுதிகள் பறக்கும்;
பாட்டுகள் மீட்டியே
நாற்றுகள் நடுவர்;
மாட்டுவில் வண்டியும்
வெண்ணை பாலென
பாட்டன் ஆட்சியில்
பானையில் அமுதாம்!!

ஏற்றக் கிணறெலாம்
ஆழ்துளை ஆயின;
சேற்றுமண் சுவர்கள்
செங்கல் வேய்ந்தன;
கீற்றுக் கூரைகள்
கான்கிரீட் அணிந்தன;
போற்றும் பெரியார்
சவுரி ராசனின்
ஆற்றல் அறிவின்
கல்வி ஆலயம்–
மாற்றம் விளைந்த
மண்ணின் வேர்ப்பலா!
வேற்றிடம் பறந்தும்
வெற்றிகள் சூடியும்
ஊற்றினை மறவா
உவப்பக் கூடலாம்!!

கவிக்கூத்தன்
தஞ்சை மயிலரசன்

திருவிளையாட்டம் நண்பர்கள் அமைப்பு
குடும்பத்தினருடன் கூடி மகிழும் விழா

நாள் : 23.06.2024

மணமகன் தேவை

பெயர் **செல்வி Deepalakshmi A R**

படிப்பு B.E. (EEE)

வேலை TN Govt. (Group 2 Service - Home Dept.) Chennai
Rs. 10 Lakhs/PA

பிறந்த தேதி 6-10-1995

உயரம் 165 cm

நட்சத்திரம் Poorattathi

கோத்திரம் Pallavaraya

பூர்வீகம் கழுக்காணி முட்டம், மயிலாடுதுறை

தகப்பனார் **Ramadoss S**
(Proprietor, Kasthuri Medicals, Senpathaniruppu, Sirkali TK)

தாயார் **Amudha R**
(Co-Proprietor, Kasthuri Medicals, Senpathaniruppu, Sirkali TK)

முகவரி Cell : 80723 29892, 90808 37579 (Whatsapp Only)

விருப்பம் Well educated, Family Oriented, Open Minded, Independent, Self-Confident, Supportive, Understanding and caring Individual.,
Girl is willing to relocate (beneath her job)

பெயர் **செல்வி ஆ. அபிராமி**

படிப்பு B.E. (EEE),

வேலை தனியார் துறை (Software)

பிறந்த தேதி 14.12.2001

உயரம் 157 cm

நட்சத்திரம் கேட்டை

கோத்திரம் காருட

பூர்வீகம் பரதூர் – சிதம்பரம்

தகப்பனார் **பூ. ஆனந்தசபேசன்**

தாயார் **த. அனுராதா** (அரியலூர்)

முகவரி மனை எண். 84, பத்மாவதி நகர் பிரிவு,
பிரதான சாலை, (மோகன் நகர் பின்புறம்),
மாடம்பாக்கம், சென்னை – 600 126.
Cell : 94447 01201, 94441 23022

மணமகன் தேவை

பெயர் **செல்வி சு. சௌமியா**
படிப்பு M.Sc. (Chemistry)
வேலை Infosys Limited, Chennai
பிறந்த தேதி 14.07.2001
உயரம் 162 cm
நட்சத்திரம் அசுவினி
கோத்திரம் இறையுட
பூர்வீகம் சத்தியவாடி–விருத்தாசலம்
தகப்பனார் **தி. சுரேஷ்**
தாயார் **சு. ரமா (எ) ஜெகதா**
(கீழ்நத்தம் – சிதம்பரம்)
முகவரி 2/8, பிள்ளையார் கோவில் தெரு,
சத்தியவாடி (PO),
விருத்தாசலம் (Tk).
Cell : 88703 01558 / 99944 65946
விருப்பம் பணிபுரியும் பொருத்தமான வரன்.

பெயர் **செல்வி செ. கிருத்திகா**
படிப்பு B.E (EEE)
வேலை SYRMA SGS டெக்னாலஜி
பிறந்த தேதி 15.06.1999
உயரம் 157 cm
நட்சத்திரம் திருவாதிரை
கோத்திரம் செம்பதரிய
பூர்வீகம் கன்னியாகுடி
தகப்பனார் **த. செல்வமணி** (விவசாயம்)
தாயார் **செ.சாந்தி**
முகவரி வெள்ளாளர் தெரு,
கன்னியாகுடி, திருப்பன்கூர் P.O
சீர்காழி தாலுக்கா
PIN–609 112.
Cell : 94436 80141,90808 73701
விருப்பம் பணியில் உள்ள வரன்

மணமகன் தேவை

பெயர்	**செல்வி து. லக்ஷ்மி பிரியா**
படிப்பு	B.E., (E&IE)
வேலை	Senior QA Engineer, Quickheal Technology Ltd. / Rs. 12 Lakhs/PA
பிறந்த தேதி	16/05/1997
உயரம்	5' - 2"
நட்சத்திரம்	பூரம்
கோத்திரம்	சாத்துக்குட
பூர்வீகம்	சீர்காழி (ஆர்ப்பாக்கம்)
தகப்பனார்	**அ. துரை,** B.E., Managing Director of Lakshmi Publications and Suchitra Publications (Previously worked as Executive Engineer, NLC Limited, Neyveli)
தாயார்	**து. நிர்மலா,** B.A., (விருத்தாசலம்) Proprietrix of Lakshmi Publications
முகவரி	73, இரண்டாவது பிரதான சாலை, வி.ஐ.பி. கோகுல் நகர், பெரும்பாக்கம், சென்னை – 600 100. Cell : 98423 06514 E-mail : duraibeneyveli@gmail.com
விருப்பம்	BE / ME / MCA படித்த நல்ல பணியில் உள்ள வரன்.

சென்னை கார்காத்தார் சங்கம்

64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை–600 094.

100 நூற்றாண்டு விழா 1922-2022

அன்புடையீர் வணக்கம்.

பெருமைமிகு திருநெல்வேலி மாநகராட்சியின் **புதிய மேயர் பொறுப்புக்கு**

பாரம்பரியமிக்க நமது சமூகத்தை சேர்ந்த மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்த, நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக சமுதாய பணி மற்றும் அரசியல் பணியாற்றி வருகின்ற திரு. **கிட்டு** என்கிற **இராமகிருஷ்ணன்** அவர்கள் தேர்ந்து எடுக்க பட்டுள்ளார்கள். அன்னாரது பணிகள் மென்மேலும் சிறக்க சென்னை கார்காத்தார் சங்கம் மற்றும் கார்காத்தார் ஒப்புரவு மனமார்ந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

கைலை. சண்முகம்
செயலாளர்

மணமகன் / மணகள் தேவை

பெயர் செல்வி M. சௌமியா
படிப்பு MCA.,
வேலை XSEED Company - Software Engineer (Work From Home) Rs. 6.6 Lakhs / PA

பிறந்த தேதி 03.10.1999
உயரம் 170 cm
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் விளந்துட
பூர்வீகம் இலையூர், குடவாசல்
தகப்பனார் J. முரளிதரன் Supdt. (Rtd.) - TNCSC
தாயார் M. ராதா (ஹரிஹரன்சுடல்)
முகவரி 10/5, சிவன் கோவில் தெரு, அகரஓகை, குடவாசல் – 612 601. குடவாசல் தாலுக்கா, திருவாரூர் மாவட்டம்
Cell : 78711 38272, 94866 14771
94862 77662 (Whatsapp)
விருப்பம் IT Dept.ல் பணிபுரியும் 1995 & அதற்கு பின் பிறந்த வரன்

பெயர் செல்வி M. தீபதாரணி
படிப்பு B.E. (ECE)
வேலை LTI Mindtree, Chennai Rs. 16 Lakhs / PA

பிறந்த தேதி 10.11.1996
உயரம் 165 cm
நட்சத்திரம் சுவாதி
கோத்திரம் களப்பாள
பூர்வீகம் இறையூர் (பெண்ணாடம்)
தகப்பனார் G. முருகேசன் Design Engineer, Oragadam
தாயார் P. நிர்மலா, ஆசிரியை அரசு மேல்நிலைப் பள்ளி பள்ளிக்கரணை, சென்னை–100
முகவரி 1/980, சௌமியா நகர், பெரும்பாக்கம், சென்னை – 600 100.
Cell : 94444 25342 (Whatsapp)
8122588342
விருப்பம் சமபடிப்பு, சமவேலையில், சென்னையில் பணிபுரியும் வரன்.

பெயர் செல்வி கா. லெட்சுமிபிரியா
படிப்பு B.Tech (Civil)
வேலை Software Engineer, Chennai

பிறந்த தேதி 21.03.1997
உயரம் 163 cm
நட்சத்திரம் மகம்
கோத்திரம் சாத்துக்குட
பூர்வீகம் மணல்மேடு – இராதாநல்லூர்
தகப்பனார் க. கார்த்திகேயன் (TNSTC ஓய்வு)
தாயார் கா. லதா (கீழையூர்)
முகவரி 7/295C, முருகையா நகர், புளியம்பேட்டை, அம்மாசத்திரம் (PO), திருவிடைமருதூர் (TK) கும்பகோணம் – 612 103.
Cell : 94866 48536 (W)
79043 80537
விருப்பம் சமபடிப்பு, நல்ல பணியில் உள்ள வரன்.

பெயர் செல்வி B. ஓவியா
படிப்பு B.E. (C.S.E.), M.S. , (Suny Buffalo, USA)
வேலை Cloud Engineer, California, USA

பிறந்த தேதி 03.02.1998
உயரம் 160 cm
நட்சத்திரம் பரணி முதல் பாகம்
கோத்திரம் பாலுட
பூர்வீகம் வெள்ளியக்குடி, கடலூர் மாவட்டம்
தகப்பனார் M.N. பாலமுருகன், B.E., Director, IT MNC, Chennai
தாயார் B. தாமரைச்செல்வி, B.Sc., (வெய்யலூர், கடலூர் மாவட்டம்)
முகவரி AP 1239, 77வது தெரு, 12வது செக்டர், கே.கே. நகர், சென்னை – 600 078.
Cell : +91 99401 16291, 98407 77045
E-mail : mnbtso@gmail.com
விருப்பம் அமெரிக்காவில் பணிபுரியும் வரன்

திருமண விழா

மணமக்கள்

இரெ. அருண் பரத் ராம் B.Tech., - **பீ. அநுரதி** M.Sc., Ph.D.,
BNP Paribas - Chennai

இவர்களின் திருமண விழா **12.07.2024 வெள்ளிக்கிழமை, சிதம்பரம், ஸ்ரீ கிருஷ்ணா கிராண்ட் மஹாலில்** நடைபெற்றது. இத்திருமண வரவேற்பு நிகழ்விலும், திருமண நிகழ்விலும் **உற்றார், உறவினர்கள், நண்பர்கள்** பெருமளவு வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்தனர்.

மாநிலத்தலைவர் **திரு. K.K.R. சுரேஷ்** அவர்களும், அமைப்பு செயலாளர் **திரு. கைலை சண்முகம்** அவர்களும், சிதம்பரம் நகரத் தலைவர் **திரு. N. முருகன் பிள்ளை** அவர்களும், குமராட்சி ஒன்றியத் தலைவர் **திரு. A.G. சிவராமன்** அவர்களும், கடலூர் மண்டல துணைத் தலைவர் **திரு. V. சிவராஜன்** ஆகியோருடன் **மயிலாடுதுறை, சீர்காழி, சிதம்பரம்** நகர கார்காத்தார் சங்க பொறுப்பாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி மகிழ்ந்தார்கள். அனைவருக்கும் எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை பகிர்ந்து கொள்கிறோம்.

மணமகன் வழிஊர்,
செம்மங்குடி, குளத்துடை கோத்திரம்
க. பீகர்
இரா. ஸ்ரீதேவி,
65/64, S.R. நகர், சிதம்பரம்
Cell : 99436 44254

மணமகன் வழிஊர்,
திருச்சிற்றம்பலம், கொங்கராய கோத்திரம்,
கு. இரெத்தினகுமார்
பொன்.பூங்குழலி
28, தில்லைநகர், மயிலாடுதுறை
Cell : 88380 41914

திருமண விழா - 12.07.2024



மணமகள் தேவை

பெயர் செல்வன் **E. DINESH**
படிப்பு B.Tech IT
வேலை Cognitive Intercept (WFH)
Rs. 24 Lakhs+ PA
பிறந்த தேதி 04.03.1997
உயரம் 175 cm
நட்சத்திரம் Moolam
கோத்திரம் Anganuda
பூர்வீகம் Pudhuthurai - Sirkali Tk.
தகப்பனார் **S. Elavazhagan,** MBA., FCS
Company Secretary & Vice President - ABT Ltd., Coimbatore,
தாயார் **E. Revathi,** M.Com., (Mayiladuthurai)
முகவரி 53/1, Ashok Nagar II Avenue,
MKP Colony, Ganapathy,
Coimbatore - 641 006.
Cell : 9994461133, 9944066550

பெயர் செல்வன் **V. VIGNESHWARAN**
படிப்பு B.E(Mech.), MBA(Finance)
வேலை Quality Control
M/s. Ashok Leyland
Rs. 30,000/-PM
பிறந்த தேதி 14.02.1994
உயரம் 167 cm
நட்சத்திரம் Revathi
கோத்திரம் Athimada
பூர்வீகம் Thiruvidaimarudur
தகப்பனார் **V. Venaktesan** (Teacher)
தாயார் **V. Tamizhpaavai** (Teacher)
முகவரி D 311, 3rd Floor,
Urban Tree Oxygen,
Perumbakkam, Chennai 100.
Cell : 9940038541, 8754336670

மணமகள் தேவை

பெயர் செல்வன் **S. நிரஞ்சன்**
படிப்பு B.E. (Mechanical Engineering)
வேலை Plant Manager,
Premier Carbonic Pvt. Ltd.
Gummidipoondi Unit,
Thiruvallur Dt., Chennai
Rs. 9,00,000/PA

பிறந்த தேதி 05.11.1994
உயரம் 188 cm
நட்சத்திரம் அனுஷம்
கோத்திரம் காமகுட
பூர்வீகம் திருவந்திபுரம், கடலூர்
தகப்பனார் **ம. சிவராமகிருஷ்ணன்,** B.Sc.,
கண்காணிப்பாளர் ஓய்வு
தாயார் **S. சந்திரா,** B.Sc., இல்லத்தரசி
முகவரி 1/5, பிள்ளையார் கோவில் தெரு,
திருவந்திபுரம் – 607 401
கடலூர் T.K., Dt.,
Cell : Whatsapp : 97885 21529
95516 87053

பெயர் செல்வன் **இர. ஞானபிரகாசம்**
படிப்பு B.Tech (Computer Science)
வேலை Nat West Group, Chennai
Rs. 25,00,000/PA

பிறந்த தேதி 15.05.1985
உயரம் 5' - 10"
நட்சத்திரம் உத்திரட்டாதி
கோத்திரம் ஒகளுட
பூர்வீகம் S.நரையூர், கடலூர் Dt.
தகப்பனார் **ஆ. இரத்தினசபாபதி,** B.Sc., (Agri)
JD (Agri), (Rtd.) விழுப்புரம்
தாயார் **இர. தமிழரசி,** M.Phil.,
செந்துறை, அரியலூர் Dt.
BT Asst., (Rtd.) Teacher
நயினார்பாளையம்
முகவரி 470/B2, பகமை தெரு,
பாலாஜி நகர், தெற்கு பெரியார் நகர்,
விருத்தாசலம் – 606 001.
Cell : 97900 95725 / 944322 3983
விருப்பம் அனுசரித்து செல்லும் பெண்ணும் பெற்றோரும்.
குறிப்பு சட்டப்படி விவாகரத்து பெற்றவர்.

பெயர் செல்வன் **கா. வருண் நேரு**
படிப்பு B.Tech (IT)
வேலை Specialist - Software Engineering
L T I Mindtree, Chennai
Rs. 12 Lakhs / PA

பிறந்த தேதி 22.11.1986
உயரம் 166 cm
நட்சத்திரம் பூசம்
கோத்திரம் எரவுட
பூர்வீகம் இறையூர் (பெண்ணாடம்)
தகப்பனார் **மு. கார்த்திகேயன்**
தாயார் **கா. தனலட்சுமி**
(செந்துறை)
முகவரி 174/2, கொத்தட்டை ரோடு,
இறையூர் – 606 111.
கடலூர் மாவட்டம்
Cell : 98844 91678
E-mail : dhanamkarthi76@gmail.com

"கார்காத்தார் ஒப்புரவு" கட்டண விபரங்கள்

ஆண்டு சந்தா	ரூ. 300/-
ஆயுள் சந்தா (12 ஆண்டுகளுக்கு மட்டும்)	ரூ. 2000/-
கலர் (¼) கால் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ. 1500/-
கலர் (½) அரைப் பக்கம் (மணமகன் / மணமகள் தேவை மட்டும்)	ரூ. 3000/-
கலர் முழு பக்கம்	ரூ. 6000/-
பின் அட்டை வெளியீடு	ரூ. 7000/-
மணமகன் மணமகள் தேவை கருப்பு வெள்ளை (மாதம் ஒன்றுக்கு)	ரூ. 500/-
கருப்பு வெள்ளை (¼) கால் பக்கம்	ரூ. 750/-
கருப்பு வெள்ளை (½) அரைப் பக்கம்	ரூ. 1500/-
கருப்பு வெள்ளை முழுப் பக்கம்	ரூ. 3000/-

சஷ்டி யப்த பூர்த்தி விழா

எங்கள் அன்பு பெற்றோரும், கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோயில் வட்டம் கொத்தவாசல் கிராமம் தெய்வத்திருவாளர்கள் எரவுட ஆ. மருதவாணன் பிள்ளை – கஸ்தூரி அம்மாள் ஆகியோரின் மூத்த மகன் திரு. **ம. ஞானசபாபதி** (தமிழாசிரியர் – பணி நிறைவு ப. ரா.கு.மேல்நிலைப் பள்ளி) அவர்களுக்கும் கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டம் கீழ்நத்தம் கிராமம் தெய்வத்திருவாளர்கள் குளத்துட இரத்தின. சபாநாயகம் பிள்ளை மங்கையர்க்கரசி அம்மாள் ஆகியோரின் மூத்த மகள் திருமதி. **ச. ஞானஜோதி** (தலைமை ஆசிரியர், எள்ளேரி புதுகாலனி) அவர்களுக்கும் 01.07.2024 திங்கட்கிழமை பரணி நட்சத்திரம் கூடிய நன்னாளில் திருக்கடையூர் அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற சஷ்டியப்த பூர்த்தி விழாவிற்கும் அதனை தொடர்ந்து ஓட்டல் மணிவிழாவில் நடைபெற்ற விருந்து உபசரிப்பு நிகழ்விலும் கலந்துக் கொண்டு ஆசிவழங்கி/ஆசிபெற்று சிறப்பித்த உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மகள்கள்

Dr. ஞா. அபிநயசரஸ்வதி, MBBS,

ஞா. அமிர்தவர்ஷினி

காட்டுமன்னார் கோயில்.

9442780675

ம.மேலவன்னியூர் அருள்மிகு அங்காளம்மன் ஆலய 4–வது மகா கும்பாபிஷேகம்.



கடலூர் மாவட்டம், காட்டுமன்னார் கோயில் வட்டம், ம.மேலவன்னியூர் கிராமத்தில் எழுந்தருள் புரிந்து வரும் அங்காளபரமேஸ்வரி ஆலய ஜீரணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் குரோதி வருட ஆனி மாதம் 26–ம் நாள் 10–07–2024 காலை 10.00 மணியளவில் விமான கும்பாபிஷேகமும் 10.15–க்கு **விநாயகர் முருகன் மற்றும் அங்காளபரமேஸ்வரி அம்மனுக்கும்** கலசாபிஷேகமும், தீபாராதனையும் சிறப்பாக நடைபெற்றது. மேலும் 10.30 மணியளவில் அன்னதானமும் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவினை ம.மேலவன்னியூர் திரு. **R. கண்ணன் பிள்ளை** அவர்கள் தலைமையிலும், திரு. V. சேகர் பிள்ளை, விளத்தூர் திரு. S. கல்யாணசுந்தரம் பிள்ளை மற்றும் ஊர் பிரமுகர்கள் நல் ஒத்துழைப்புடனும் மற்றும் இக்கோயிலை குலதெய்வமாக வழிபடும் நல் அன்பர்களின் பொருள் உதவியோடும் மிக சிறப்பாக நடைபெற்றது.

முதல் கும்பாபிஷேகம் **10-06-1961**-ல் திரு. **சடகோபம் பிள்ளை தாயார்** திருமதி. **காவேரி ஆச்சி**யால் நடைப்பெற்றது.

2–வது கும்பாபிஷேகம் **14-09-1997** லும்,

3–வது கும்பாபிஷேகம் **15-07-2011** லும்

4–வது கும்பாபிஷேகம் **10-07-2024**-ல் நடைபெற்ற அங்காளம்மன் ஆலய வாசலில் புதிதாக **பாலவிநாயகர், பாலமுருகன்** சன்னதி நிர்மானிக்கப்பட்டு சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது.

திருமதி. **சாவித்திரி காந்திமதிநாதன்** அவர்களால் மூன்றும் நடத்தப்பட்டது.

நன்றியுடன்

மணிவண்ணன் காந்திமதிநாதன்
ஆலய பரம்பரை அறங்காவலர் & நிர்வாகி
ம. மேலவன்னியூர் – 608302.
செல் : 9360386353

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்ந்தது
02.09.1960

உதிர்ந்தது
17.08.2020

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், T.நெடுஞ்சேரி
திருமிகு.S.வைத்திலிங்கம் பிள்ளை - தெய்வத்திருமதி சுப்புலெட்சுமி அம்மாள்
அவர்களின் இளையமகன்

தெய்வத்திரு. V. இராஜேந்திரன் B.Sc.,

பாசமான நினைவுகளைக் கொடுத்துவிட்டு,
பலமான உறவுகளை நிலைக்க வைத்து,
உங்கள் பூவுடல் உலகை விட்டு மறைந்தாலும்,
எங்கள் நினைவுகள் என்றென்றும் தொடரும்.
வாழ்ந்து காட்டுவோம் வாழ்க்கையை சிறப்பாக....!

என்றும் நீங்காத நினைவுகளோடு....

சகோதரர்.
V.நடராஜன் - தையல்நாயகி
உரம், நெல், அரிசி வணிகம்.
T.நெடுஞ்சேரி,
சிதம்பரம் வட்டம்.

பேத்தி :
R.மேக்னா

திருமதி. **R.தங்கமலர்** (மனைவி)
மகள் - மருமகன் :
R.அகல்யா B.E.,-**இராமலிங்கம்** B.Tech.,
R.அஞ்சனா B.E.,
R.அனிதா B.E.,

ஆதி கைலாஷ் - ஓர் ஆன்மீகப் பயணம்.

பகுதி – 2.

காலாபாணியிலிருந்து கீழிறங்கி தார்சுலா ஹோட்டலை அடைந்தோம். இரவு ஓய்வுக்குப்பின் ஒரு சிறிய பையில் ஒரு நாளைக்கான உடைகளை எடுத்துக் கொண்டு, எல்லோரது பெட்டிகளையும் அங்கேயே ஒரு அறையில் வைத்த பின், திரும்பவும் ஜீப்புகளில் நேபாள் பார்டருக்கு கிளம்பினோம். சிறிது நேர பயணத்திற்குப் பின் ஓர் ஆற்றங்கரைக்கு வந்தோம். ஆற்றின் நடுவில் ஒரு பாலம். அந்த ஆற்றின் பெயர் டோலி நதி. நதிக்கு ஒருபுறம் இந்தியா; மறுபுறம் நேபாளம். பாலத்தைக் கடந்து சென்று, நம் ஆதார் கார்டை காண்பித்து கடைகளில் பொருட்கள் வாங்கி திரும்பவும் ஜீப்புகளுக்கு அனைவரும் வந்து சேர்ந்தோம். அதன் பின் சௌஸா தாலுக்காவில் சிர்கா எனும் ஊரிலிருக்கும் நாராயண பீடம் சென்றோம். செல்லும் வழியில் மிகப் பெரிய பாறை ஒன்று சரிந்து விழ, இரண்டாவதாக இருந்த வாகனத்தில் நாங்கள் இருந்ததால், நன்றாக பாறையைக் காண முடிந்தது. எங்கள் ஓட்டுநர் 'நேரம் ஆகும்; அருவி வழியாகச் செல்வோம்' எனக் கூறியதாக நாங்கள் நினைக்க, அவரோ பாதுகாப்பு மந்திரி திரு. ராஜ்நாத்சிங் அவர்களால் 2020–ஆம் ஆண்டு அக்டோபர் 12–ஆம் தேதி திறக்கப்பட்ட Elagad பாலத்தின் முடிவிற்கு சென்று, உயரத்திலிருந்து வீழ்ந்த நீர்வீழ்ச்சியின் அழகைக் காணச் செய்தார். பின் திரும்பவும் பழைய இடத்திற்கே வந்து இரண்டாவதாக வரிசையில் இருந்தோம். ½ மணி அல்லது 3/4 மணி நேர இடைவெளியில் எவ்வளவு பெரிய சரிவாக இருப்பினும் சரி செய்வது ஆச்சரியமே!

வழியில் டோலி நதியும், காளி நதியும் இணைந்து கௌரி கங்கா எனும் நதியாக பாய்கிறது. இந்நதியில் கட்டப்பட்டிருந்த சிடிகலா அணையில் நிறுத்தி, அந்த அணையை ரசித்தோம். பின் தணிதை என்ற இடத்திலிருந்த View point-ல் ஜீப்பை நிறுத்தி புகைப்படம் எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். மிகவும் அழகிய இடம். இது சல்மா சிலாசோ எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. மதிய உணவிற்கு நாராயண பீடம் அடைந்தோம். பல படிகள் ஏறி உணவு உண்ணும் இடத்திற்கு வந்து சேர்ந்தோம். அங்கிருந்தும் சுமார் 20 அல்லது 25 படிகள் ஏறி கோவிலை அடைந்தோம். எங்கள் குழு மேலே செல்லும் முன் கோவிலை மூடிவிட்டார்கள். கீழிறங்கி மதிய உணவு உண்டு, சிறிது நேரம் காத்திருந்ததும், கோவில் தகவுகள் திறக்கப்பட்டன. கர்நாடகத்தில் 1914–ல் பிறந்த நாராயணகுரு ஏற்படுத்திய அவர்களின் மடம் அவர் தபோவன் மகராஜ் சந்நியாச தீட்சை பெற்றவர். கோவிலினுள் அருமையான கிருஷ்ணர் சிலை நடுவில் இருக்க, ஒரு தாம்பாளத்தில் அநேக சாளக்கிராமங்கள் வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் அங்கு அமர்ந்து பஜன்கள் பாடி, விஷ்ணு சகஸ்ரநாமம் படித்து, கீழிறங்கி தங்கும் அறைக்குச் சென்றோம். அங்கு பூந்தோட்டமும், காய்கறித் தோட்டமும் அழகுற அமைக்கப்பட்டிருந்தன. ஆப்பிள் மரமும் காய்களுடன் இருந்தன. அங்கு மானசரோவர் கயிலாயம் செல்லும் பாதை என ஒரு வழியும், வளையும் இருந்தது. தங்கும் கட்டிடங்களுக்கு சூரிய குடில், சந்திர குடில் என பெயர் சூட்டப்பட்டிருந்தன. மிகவும் சுத்தமாக பராமரிக்கப்படுவதுடன், அங்கேயே உணவு வழங்கும் இடமும் இருந்தது. இரவு உணவாக சப்பாத்தி, சால்னா, கிச்சடி போன்றவை தரப்பட்டன. மறுநாள் காலை 5 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு தாருசுலா அடைந்து, எங்கள் பெட்டிகளை எடுத்துக்கொண்டு, காலை உணவை முடித்து சிற்றுந்துகளில் ஜாகேஷ்வர் புறப்பட்டோம்.

ஜாகேஷ்வர் தாம் செல்லும் வழியில் தௌலா தேவி எனும் கிராமத்திலிருந்த தும்டா தேவி கோவில் சென்று வழிபட்டோம். அங்கிருந்து மூன்று கி.மீட்டர் தூரம் கீழே இறங்கின், பாதாள தேவி குகை உள்ளது. மாலை ஜாகேஷ்வர்தாம் அடைந்து ஹோட்டலில் தங்கினோம். அடுத்த நாள் காலை கோவில் தரிசனத்திற்குச் சென்றோம். நல்ல கூட்டம். சிவபெருமான் ஜகத்தைக் காக்க வந்தமையால், ஜாகேஷ்வர் தாம் எனப் பெயர் பெற்றது. 125 சிறு சிறு கோவில்கள் அவற்றில் 108 சிவன் கோவில்கள். மற்றவை

அம்பாள், ஆஞ்சநேயர், பைரவர், குபேரர் போன்றவை ஆகும். ஆதிசங்கரர் கேதார்நாத் செல்லும் முன் இங்கு வந்து பக்தர்கள் எது வேண்டினாலும் கிடைக்க அருள் செய்ய வேண்டுமென்று ஈசனை வேண்டி உள்ளார். பின் அவரே சிலர் பிறருக்கு கேடு விளைய வேண்டுமென, வேண்டுவதை அறிந்து, அதைத் தடை செய்து, நல்லன நினைப்பவர்களுக்கு மட்டும் பலிக்கட்டும் எனக் கூறி, கெட்ட எண்ணங்களைத் தடுத்துவிட்டதாக எங்கள் வழிகாட்டி கூறினார். சப்தரிஷிகள் முதன் முதலில் இங்குதான் பூஜை செய்ததாகவும், அவர்கள் சங்கர் பகவானுக்குத் தண்டம் கொடுத்த தண்டேஸ்வரர் கோவில் 1½ கி.மீ தூரத்தில் உள்ளதாகவும் கூறினார். தண்டேஸ்வரராகிய சிவபெருமான் அழகிய உருவில், அங்கு தாண்டவ நடனம் ஆடிக் கொண்டிருக்க, ரிஷிபத்தினிகளும் அவருடன் சேர்ந்து நடனமாடினர். யாகத்திற்குத் தேவையான மலர்கள், சமித்துகளைச் சேகரிக்க மறந்தனர். சிவமுற்ற ரிஷிகள் ஈசனையே சபிக்க, ஈசனும் சப்தரிஷிகளை சபித்து விடுகிறார். அவர்கள் பிரம்மனை வேண்ட பிரம்மன் சப்தரிஷி மண்டலத்தை உருவாக்கி, ஆகாயத்தில் இருந்திட அருளினார் என்று வழிகாட்டி கூறினார்.

தேவதாரு மரங்கள் அடர்ந்த காடு தாருகாவனம் எனப்படும். இதுவே எட்டாவது ஜோதிர் லிங்கத்தலம். இங்கு அர்த்தநாரி ரூபத்தில் இறைவன் காட்சி அளிக்கிறார். மேலும் தேவதாரு மரங்கள் அடியில் ஒன்றாகவும், மேலே இரண்டு மரங்களாகவும் காட்சி அளிப்பது விசேஷம். தல விருட்சமான தேவதாரு மரக்கிளையின் பிள்ளையாரின் உருவம் அதி அற்புதமாக தெரிகிறது. ஈசனின் கோவில்களுக்கும், தேவி கோவில்களுக்கும் கட்டுமானத்தில் வித்தியாசம் காண்பிக்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் மரத்தால் கட்டப்பட்ட இக்கோவில்கள் தற்போது கற்களால் ஆனவைகளாக உள்ளன. ஈசனின் கோவில்கள் தட்டுக்களாக அடுக்கப்பட்டு, ஒரு கூம்பு வடிவத்தில் தாமரை மலருடன் உள்ளது. தேவியின் கோவில் கஜபிருஷ்ட விமானத்துடன் காட்சி தருகிறது. கோவிலின் பின்னால் ஜடாகங்கா எனும் நதி ஓடுகிறது. முக்கிய கோவில்கள் மூன்று : 1) ஜாகேஷ்வர் சிறிய லிங்கம். நாங்கள் கங்கோத்ரி சுவாமிகளுடன் சென்றதால், அபிஷேகம் செய்யும் புண்ணியம் கிடைத்தது. அதன் பின்னே ஒரு பாவையின் கரங்களில் அகண்டதீபம் எரிந்து கொண்டு உள்ளது. 2) மிருத்யுஞ்சேஷ்வர் ஆலயம். இங்கு கருவறையில் ஒரு பெரிய லிங்கம் உள்ளது. இவர் நமது யம பயத்தைப் போக்குபவர். 3) சக்தி பீடம், சக்தி தேவியின் மெட்டி விழுந்த இடம். அழகிய அம்மன். அம்மனுடன் அழகிய கணபதியும் அருள் புரிகிறார். அங்கு வணங்கி, மற்ற கோவில்களைத் தரிசித்தோம். அவற்றில் சில லாகுளஷ் மந்திர், தண்டேஷ்வர், சோட்டா கேதார்நாத், சூரியன், நவக்கிரகம், ஸ்ரீ நீல்கண்ட் மந்திர், குபேரர், தெற்கு நோக்கிய ஆஞ்சநேயர் என்று பல கோவில்கள், தண்டேஷ்வர் கோவிலின் வெளிப்புற சுவரில் நாககன்னிகைகள், நாகராஜாக்கள் இறைவனுடன் நாட்டியமாடுவது போல சித்தரித்துள்ளனர். லவகுசா ஹோமகுண்டம் தற்சமயம் தாமரைத் தடாகமாக காட்சி அளிக்கிறது.

அதன் பின் ஓரிரு மணித்துளிகள் பிராயணத்தில், கோடா பைரவா ஆலயம் அடைந்தோம். வாகனம் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து மேலே பல படிகள் ஏற வேண்டும். கீழே இருந்து நோக்கின் கோவில் கண்ணுக்குப் புலப்படவில்லை. கோவிலில் நுழைந்ததுமே, பெரிய பெரிய காண்டாமணிகள் மற்றும் பல அளவில்ஏராளமானமணிகளும்கட்டப்பட்டிருந்தன. உள்ளே செல்ல ஒரு நீண்ட வரிசை. கருவறையில் ராஜா போன்ற தோற்றத்தில் ஒருவர் குதிரை மேல் காட்சி தர, கீழே ஒரு பாறையில் ஒரு உருவம். அதுதான் கோடா பாபா என்றார் பண்டிட். அங்கு வணங்கி வெளியில் வந்து, எங்களில் சிலரும் மணிகளை வாங்கி, கட்டிய பின் வெளியேறும் வழி தெரியாமல் தடுமாற, சூப்பர் யாத்ராவைச் சேர்ந்தவர்கள் தேடி வந்து எங்களை அழைத்துச் சென்றனர். அங்கிருக்கும் கடவுள் தர்ம தேவதை என்றும் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவர் என்றும் பக்தர்கள் கூறினர். (God of Just) ஒரு புதுமையான கோவிலைத் தரிசித்த திருப்தியுடன் கிளம்பினோம். உத்தரகாண்டின் இந்த பகுதியில் நீம் கரோரி பாபா என்ற சித்தர் மிகவும் பிரசித்தி பெற்றவர்.

அநேக கடைகள், விடுதிகள், அனைத்திலும் இவரது புகைப்படத்தைக் காணலாம். 'ஆப்பிள்' நிறுவனத்தின் ஸ்தாபகர் ஸ்டீவ் ஜாப்ஸ், ஃபேஸ்புக் முன்னாள் தலைமை அதிகாரி மார்க் மற்றும் கிரிக்கெட் வீரர் விராட்கோலி போன்றவர்கள் இவரைப் பின்பற்றுபவர்களில் சிலர். தார்சுலாவில் அவரைப் பற்றி கேள்விப்பட்டதுமே, அவரது ஆசிரமத்திற்குக் கட்டாயம் செல்ல வேண்டும் என்ற அவா எங்களில் பலருக்கும் ஏற்பட்டது. ஆனால் நாங்கள் சென்ற சமயம் அவரின் ஆசிரமத்தில் திருவிழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. அவரின் இயற்பெயர் லக்ஷ்மண் நாராயண் சர்மா; அதன்

பின் பாபா லட்சுமண் தான் என அழைக்கப்பட்டார். நீம் கரோரி என்ற ஸ்டேஷனில், ரயிலில் டிக்கெட் வாங்காத காரணத்தினால் இறக்கிவிடப்பட்டார். அதன் பிறகு அந்த ரயில் என்ன செய்தும் அவ்விடத்தை விட்டு கிளம்பவே இல்லை. பயணிகள் சாது ஒருவரை இறக்கி விட்டதால் தான் இப்படி நடக்கிறதோ என கூறினபடியால், அந்த டிக்கெட் கலெக்டருடன் வந்து மன்னிப்பு கேட்டு, அவரை ரயிலில் ஏறச் செய்ததும், புகைவண்டி அவ்விடத்தை விட்டு புறப்பட்டதாக அவரது அமெரிக்க சீடர் இராமதாஸ் என்பவர் அவரது நூலில் குறிப்பிட்டுள்ளார். அப்போதிலிருந்து அவர் நீம் கரோரி பாபா என அழைக்கப்படலானார். அத்தகைய ஒரு சித்தரின் ஆசிரமம் செல்ல ஆசைப்பட்டோம். ஆனால் மிகவும் கூட்டம் அதிகமாக இருக்கும்; செல்ல இயலாது என எங்கள் ஓட்டுநர்கள் மறுத்துவிட்டனர்.

ஆனால் பாபா எங்களுக்கு அருள் புரிந்த அதிசயம் நடந்தது. வழியில் மதிய உணவிற்கு இரண்டு ஹோட்டலில் எங்களுக்கு இடம் தர மறுக்க, மூன்றாவது இடத்தில் சாப்பாட்டிற்காக இறங்கினோம். அங்கும் பாபா காட்சி புரிந்தார். நாங்கள் அந்த கடையின் பொறுப்பாளரை பாபாவைக் குறித்து விசாரித்த போது, இங்கிருந்த 400 மீ தூரத்தில் அவர் தியானம் செய்த இடமும், குடிலும் உள்ளது. அதை தரிசித்து செல்லுங்கள் எனக் கூற, எங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. சாலையின் மறுபுறம் நின்றிருந்த எங்கள் பயண ஏற்பாட்டாளர்களையும், வழிகாட்டியையும் அழைத்துக் கூறினோம். அவர்களும் ஓட்டுநர்களிடம் கூற, அவர்கள் திரும்பவும் மறுத்தனர். 400 மீட்டர் தானே! நாம் நடந்து சென்று தரிசித்து வந்து விடுவோம் என முயற்ச்சிக்கவும், எங்கள் ஓட்டுனர் மற்ற ஓட்டுனர்களிடமும் பேசி, சம்மதிக்க வைத்து குடிலுக்கு அழைத்துச் சென்றனர். சிறிது மலை ஏறி சென்றதும், ஒரு சிறு குகை போன்ற இடம், ஒருவர் குனிந்து உள்ளே செல்வது போல இருந்தது. மேலும் சுமார் 510 அடிகள் நடந்ததும், உள்ளே ஒரு அழகிய ஆஞ்சநேயர் சிலையும் அடுத்த சந்நிதியில் பாபாவின் சமாதியும், அவரைப் பற்றி நூல் எதுவும் கிடைக்குமா என பண்டிட்டிடம் வினவ, அவை ஆசிரமத்தில் தான் கிடைக்கும் என்றார். அதற்கு எங்களுக்கு நேரமிருக்காது என்று நான் கூறவும், அங்கிருந்த ஒரு பக்தர், நீங்கள் ஆசைப்பட்டு விட்டீர்கள் அல்லவா? பாபா உங்களை அழைத்து விடுவார் என்றார். பிறகு சில படிகள் கீழே இறங்கின், அங்கு ஒரு பெரிய ஆலமரம். அதனடியில் தான் அவர் தியானம் செய்ததாக கூறினர். அருகில் ஒரு சந்நிதியில் அவர் பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்தினை வணங்கி கிளம்பினோம். எங்கள் ஓட்டுனர் கைஞ்சிதாம் என்ற ஊரில் இருந்த பாபாவின் ஆசிரம பஸ் நிறுத்தத்தில் நிறுத்தி, ஆசிரமத்தைத் தரிசித்து வருமாறு கூறினார். வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் இடமிருந்ததால் நிறுத்தியதாக ஓட்டுனர் குறிப்பிட்டார். மூன்று நாள் விழாவில், இவ்விடத்தைக் கடக்கவே பல மணி நேரங்கள் ஆகுமென்றும், நீங்கள் செய்த புண்ணியம் தான் போலும் இன்று உங்களுக்கு தரிசனம் சுலபமாக கிடைக்கிறது என்றார். சிறிது தொலைவு நடந்து ஆசிரமத்திற்குள்ளே வரிசையில் சென்றோம். வைஷ்ணவ தேவி, ஆஞ்சநேயர், சிவசக்தி, லட்சுமி விஷ்ணு, துர்க்கா, சிவலிங்கம் போன்ற கடவுளரின் சந்நிதிகளுடன், அவரின் சிஷ்யையான சித்திமாதா, நீம் கரோலி பாபா சந்நிதிகளிலும் வணங்கி, அங்கு நடைபெற்றுக் கொண்டிருந்த தொடர் பஜனையில் ஒரு 15 நிமிடங்கள் கலந்து கொண்டு, மனநிறைவுடன் அவரைப் பற்றிய புத்தகத்தையும் வாங்கிக் கொண்டு கிளம்பினோம். வழியில் 'பீம்டால்' எனும் ஏரிக்கரையில் வாகனங்கள் நிற்க, சில சகோதரிகள் படகுச் சவாரியும் செய்து மகிழ்ந்தனர். பீம்டால் என்பது பீமன் வனவாசத்தில் முதலில் கால் பதித்த இடம் பள்ளமாகி நீர் தேங்கி இருப்பதாக வரலாறு. பின் இரவு சுமார் 8½ மணி அளவில் ஹல்துவானியில் மல்லிகா விடுதிக்குத் திரும்பினோம். 14–ஆம் தேதி காலை 6 மணிக்கு விடுதியில் இருந்து கிளம்பி பந்த்நகர் விமானநிலையம் 7 மணிக்கு வந்து சேர்ந்தோம். மிகச் சிறிய விமான நிலையம். எல்லமே manual ஆன நடைபெறுகிறது. 9.30 மணி விமானத்தில் கிளம்பி, டெல்லி வந்து, அங்கிருந்து 12–20க்குச் சென்னை புறப்படும் விமானத்தில் சென்னை வந்து சேர்ந்தோம்.

எங்களது ஆதி கைலாஷ் பயணம், நாங்கள் நினைத்ததை விட, எந்த வில்லங்கமுமின்றி நன்முறையில் நடந்தேறியதற்கு, அந்த கயிலை மலையானுக்கு நன்றி கூறி அனைவரிடமும் விடை பெற்றோம். எங்களை நன்முறையில் அழைத்துச் சென்று வந்த சூப்பர் யாத்ரா நிர்வாகிகளுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக செயல்பட்டவர்களுக்கும் பயணத்தில் பங்கு பெற்ற அனைத்து பக்தர்களின் சார்பில்

நன்றி! நன்றி!! நன்றி!!!

– திருமதி. வனஜா இளங்கோவன்.

6369291286

மணமகன் / மணமகள் தேவை

முக்கிய குறிப்பு : எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

பெயர் நட்சத்திரம்	பிறந்த தேதி உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 1/8 செல்வி **கௌ. ரோஷிணி** ரோஹிணி அரசுடையார் பூர்வீகம் : தஞ்சாவூர் விருப்பம் : சென்னையில் வேலையில் உள்ள வரன்.	16.09.95 154 cm	B.E. (Computer Science) M.Sc., (Cyber Forensics and Information Security	Reputed Pvt. Company	திரு. N.Gowrishankar 14/47, Valluvar Street, Jagannatha Nagar, Arumbakkam, Chennai - 600 106. Cell : 97907 68147, 96772 33791
B 2/8 செல்வி **R. பானுபிரியா** கேட்டை 3ம் பாதம் எரவுட பூர்வீகம் : பெண்ணாடம் (முல்லையூர்) விருப்பம் : சமபணியில் உள்ள பொருத்தமான வரன்	21.11.98 165 cm	B.E (ECE) .	Sr. Software Engineer Freshworks Technology Chennai	திரு. T. Ramesh, D.No. 11, SNR Flats, Viswanathapuram Main Road, Kodambakkam, Chennai - 600 024. Cell : 94445 56972, 90801 87596
B 3/8 செல்வி **M. தனலட்சுமி** உத்திரம் பழுவுட பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : சமபடிப்பு	07.05.98 154 cm	B.Tech (CS) .	Software Professional EPSILON Bangalore Rs. 10 Lakhs/PA	திரு. K. மணிகண்டன், G1, Ashok Manor, Ruby Builders, 5/2, Kalamegam Street, East Tambaram, Chennai - 600 059. Cell : 94447 11045, 99416 20355
B 4/8 செல்வி **V. அக்ஷயா** விசாகம் மாத்துடை பூர்வீகம் : திருநெல்வேலி விருப்பம் : MNC Company, IT Company, India, Chennai (or) Bangalore	27.06.96 158 cm	B.E.,	MNC Company IT Infosys, Chennai Rs. 15,00,000/PA	திரு. V. வெங்கடகிருஷ்ணன், Doshi Nakshtra Apartment II, Block 8, 2 Fold State Bank Colony, West Tambaram, Chennai - 600 045. Cell : 89256 67613, 94440 27613
B 5/8 செல்வி **M. பார்கவி** ரோகினி கொங்கராய பூர்வீகம் : திருப்புன்கூர் –சீர்காழி TK விருப்பம் : MBBS, MD	29.10.96	MBBS., MD., .	தென்னக இரயில்வே	திரு. வெ. மாணிக்கவேலு, 52F, பஜனை மடம் தெற்கு, குடவாசல், திருவாரூர் Dt.- 612 601. Cell : 63824 42680, 94881 17102, 94437 09804
B 6/8 செல்வி **S. சுபத்ரா** உத்திரட்டாதி கூடலுட பூர்வீகம் : கீழ்அதங்குடி	5.10.98 157 cm	B.E. (EEE)	Senior Technical Analyst, Hexware Technologies Limited Rs. 7 Lakhs/PA	திரு. T. செல்வராஜன், 117/7, கல்யாணி நகர், சி. தண்டேஸ்வரநல்லூர், சிதம்பரம் – 608 001. Cell : 89399 72070, 98400 70749 E-mail : selvarajanthirunarayanan@ gmail.com
B 7/8 செல்வி **K. ரேணுகா சரஸ்வதி** பூசம் குலத்திரையர் பூர்வீகம் : துறையூர் (குடவாசல்)	6.6.2000 156 cm .	M.Sc., B.Ed., (கணிதம்)		திரு. N. கண்ணன், 137/1, மெயின் ரோடு, திருக்கண்ணமங்கை (PO), குடவாசல் T.K., திருவாரூர் Dt., – 610 104. Cell : 90951 24128 (W), 90951 31558

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
B 8/8 செல்வி **K. அட்சயா** அவிட்டம் வேனுட பூர்வீகம் : காவனூர் விருப்பம் : பணியில் உள்ள வரன்.	21.10.96	M.Sc., B.Ed.,	தனியார் பள்ளி	திரு. V. கார்த்திகேயன், வெள்ளாளர் தெரு, காவனூர், இலையூர், குடவாசல் – 613 705. Cell : 94428 88360, 94429 86955
B 9/8 செல்வி **சொ.பா. கிருஷ்ணபிரியா** சித்திரை – 4ம் பாதம் வங்காருடைய பூர்வீகம் : தூத்துக்குடி விருப்பம் : சமபடிப்பு.	16.06.97	B.E. (Civil)	Civil Engineer Vivega Construction Tiruchendur	திரு. ஆ. சொர்ணபாண்டியன், 47/52, மைலாப்புரம் தெரு, திருச்செந்தூர் – 628 215. தூத்துக்குடி மாவட்டம் Cell : 94420 27695, 94874 46128 E-mail : asornapandian@gmail.com
B 10/8 செல்வி **R. சுபஸ்ரீ** அஸ்வினி கொங்கராய பூர்வீகம் : பெண்ணாடம் விருப்பம் : நிரந்தர வேலை – நல்ல குணம்	09.09.98 160 cm	M.E.,	Asst. Professor (CSE) Pvt. Engineering College	திரு. P.G. இராமமூர்த்தி, 55/18, வள்ளளார் தெரு, பெண்ணாடம் – 606 105. கடலூர் மாவட்டம். Cell : 99761 77910
B 11/8 செல்வி **R. அனுக்கிருபா** மகம் மருங்குட பூர்வீகம் : ஆக்கூர் விருப்பம் : சமபடிப்பு நல்ல வேலையில் உள்ள வரன்	10.05.92 169 cm	B.Com., MBA.,	TCS, Chennai	திரு. A. ராஜாராமன், 7/4, கல்லூரி மேற்கு சாலை, அரும்பாக்கம், சென்னை–600 106. Cell : 97908 80266, 93809 97467 Phone : 044 – 2363 8205 E-mail : rajaramchennai2010@gmail.com
B 12/8 செல்வி **Yazhni .G** Thiruvonam Kangeya விருப்பம் : Looking for Suitable Bride Groom, working in United Kingdom	26.09.93 5' - 7"	B.Arch., M.Sc., University of Bath, United Kingdom	Arechitect & Design Engineer in WSP United Kingdom	திரு. T. Gokulakrishnan, No. 9, Ranganathan Street, Ganesh Nagar, Velcahery, Chennai - 600 042. Cell : 94440 70108, 94450 65590
B 13/8 செல்வி **செ. அபிநயா** மூலம் 3ம் பாதம் காளிங்கராய பூர்வீகம் : திருவிளையாட்டம்	07.04.99 5' - 2"	B.Com., MBA.,	Executive HR Sacha Engineering (P) Ltd., Chennai	திருமதி. செ. கவிதா, 2, செல்லம்மாள் அப்பார்ட்மெண்ட், வெங்கடேஸ்வரா நகர், சேந்தங்குடி மயிலாடுதுறை– 609 118. Cell : 90928 22004, 94868 49107,
B 14/8 செல்வி **R. சண்முகப்பிரியா** ரோகிணி வங்காருட பூர்வீகம் : நெய்க்குப்பை–பந்தநல்லூர் விருப்பம் : சமபடிப்பு /சம வேலையில் உள்ள வரன்	05.03.98	B.E., (EEE)	Application Developer IBM, Bangalore Rs. 10 Lakhs/PA	திரு. C/o. P பாலசுந்தரம், No. 6529, LIG I, த.வீ.வ.வா (TNHB), அயப்பாக்கம், சென்னை–600 077. Cell : 98847 00635, 94864 65798

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 1/8 செல்வன் **R. குருபிரசாத்** அவிட்டம் 1ம் பாதம் கடலுட பூர்வீகம் : வாளூர்	**24.09.96** 180 cm	B.E. (Computer Science)	Software Engineer, Inatech Software, Rs.7.5 Lakhs/PA	திருமதி. R. ராஜேஸ்வரி, ஆற்றங்கரைத் தெரு, வாளூர், கீரனூர் Post, நன்னிலம் TK., Cell : **98424 78018, 99700 34222**
G 2/8 செல்வன் **இரா. மணிபாரதி** தொழுவுட பூர்வீகம் : பெண்ணாடம்	**04.03.96** 168 cm	B.Sc.,	MRF Ltd., Arakonam Rs.6 Lakhs/PA	திரு. தி. இராஜாமணி, **540,** கண்ணப்பா தெரு, நசரத் பேட்டை, பூந்தமல்லி சென்னை – **600 123.** Cell : **89399 91174, 98406 87849**
G 3/8 செல்வன் **மு. அருண்குமார்** விசாகம் –2ம் பாதம் களப்பாள பூர்வீகம் : குழுமூர் விருப்பம் : MBBS படித்த வரன்	**15.10.96** 175 cm	M.B.B.S., M.D.,		திரு. ஆ. முருகேசன், பெருமாள் கோவில் தெரு, குழுமூர், செந்துறை (Tk), அரியலூர் (DT) – **621 714.** Cell : **97870 87695,** **95859 15613** (W)
G 4/8 செல்வன் **P. ஸ்ரீராம்** ஆயில்யம் சாத்தனுட பூர்வீகம் : வயலூர், பெரம்பலூர் மாவட்டம் விருப்பம் : தகுந்த வரன்	**28.10.94** 175 cm	B.E. (CSC)	IT Analyst TCS, Chennai Rs. 40,000/PM	திருமதி. P. உமா, P. இராமச்சந்திரன் (VAO ஓய்வு) 5-A/84C, ரோஸ் நகர், பெரம்பலூர் – **612 212.** Cell : **97874 84028,** **97505 29615** (W)
G 5/8 செல்வன் **ம. அகிலன்** ரோகிணி 1ம் பாதம் கானுட பூர்வீகம் : மடப்புரம் – மயிலாடுதுறை	**15.08.98** 5' - 10"	B.E (EEE)	Technical Assistant TNDIPR Secretariat, Chennai	திரு. இரா. மதியழகன், Plot No. 45, Ashok nagar 3rd Cross, Dasanaickenpatti, Salem - 636 201 Cell : **97154 88160**
G 6/8 செல்வன் **K. கோவிந்தராஜன்** சதயம் கொளத்தரிய பூர்வீகம் : பரதூர் குறிப்பு : டைவர்ஸ் ஆகிவிட்டது திருமணம் முடிந்து (3 மாதம்)	**31.07.88** 5' - 6"	M.Sc., B.Ed., M.Phil.,	ஆசிரியர் Govt. Job, Permanant Rs. 60,000/PM	திரு. G. கலைநேசன், அனந்தீஸ்வரன் கோவில் தெரு, சிதம்பரம், Cell : **99941 11643** **90804 47260**
G 7/8 செல்வன் **B. நாகநாதன்** திருவாதிரை தீனுட பூர்வீகம் : எடுத்துக்கட்டிசாத்தனூர்	**30.10.88**	B.Lit (DCA)	Chennai Radha Engineering Works Pvt. Ltd., Rs. 41,000/PM	திருமதி. B. மலர்கொடி, W/o. A. பாலசுப்ரமணியன், **9/4,** வடக்கு மடவிளாகம், மயூரநாதர் கோயில், மயிலாடுதுறை – **609 001.** Cell : **96003 93154, 94437 85264**
G 8/8 செல்வன் **T. அரவிந்த்செல்வன்** திருவாதிரை சாத்தனுட பூர்வீகம் : பெருந்தோட்டம் விருப்பம் : சம கல்வித்தகுதி USA யில் பணியில் உள்ள வரன்	**11.11.95** 5' - 7"	M.S. Robltics Boston, USA	Robotics Engineer, PDW Inc. New York, H1B Visa	திரு. Dr. A. Thamizchelvan, Plot No. 57, HIG II, 3rd Main Road, 4th Cross Street, Nolambur Scheme Phase I, Mogappair West, Chennai - 600 037. Cell : **98406 95820, 73582 81856**

பெயர் நட்சத்திரம்	வயது உயரம்	படிப்பு	வேலை	முகவரி
G 9/8 செல்வன் **Er. ப. செந்தில்குமார்** உத்திரம் செம்பதரிய பூர்வீகம் : நெடுவாசல் விருப்பம் : குணமுள்ள குடும்பகாங்கான பெண்	13.04.95 180 cm	B.E., (EEE),	Molex Singapore Pvt. Ltd., Rs 2 Lakhs/PM	திரு. கு. பரமசிவம், வெள்ளாழ தெரு, நெடுவாசல், நல்லுச்சேரி (PO), தரங்கம்பாடி (TK), சங்கரன்பந்தல், மயிலாடுதுறை Dt. – 609 308. Cell : 94832 37325, 96296 96512
G 10/8 செல்வன் **இரா. சீதாராமன்** பூரட்டாதி இளமாங்குட பூர்வீகம் : இடைக்கட்டு	29.9.93 170 cm	DME (Tool Die)	Dhanam Infra Chennai - 600 037. Rs 35,000/PM	திரு. சோ. இராமகிருஷ்ணன்பிள்ளை, லெட்சுமி ஸ்டோர் (மளிகை கடை), இடைக்கட்டு, உட்கோட்டை அஞ்சல், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம் – 612 905. Cell : 96298 89261, 96298 89262 (W)
G 11/8 செல்வன் **அ. சரண்ராஜ்** பூசம் – 3ம் பாதம் தொளாறுட பூர்வீகம் : நாகமங்கலம் விருப்பம் : சமபடிப்பு – Any Degree	05.09.91 170 cm	B.E., (Mech)	First Abudhabi Bank Rs. 22 Lakhs/PA	திரு. செ. அன்பரசன், 11 B, பெரியார் நகர், இராண்டாவது தெரு, அரியலூர் – 621 713. Cell : 975008223, 97502 79162, 98402 83867
G 12/8 செல்வன் **R. Karthikeyan** Karthigai Kothanuda பூர்வீகம் : Mullaiyur	28.08.94 5' - 10"	B.Tech., (Computer Science)	Zoho Corporation Chennai Rs. 24 Lakhs/PA	திரு. T. Ramalingam, 1/183, Perumal Koil Street, Sendurai Tk., Ariyalur Dt., Cell : 99655 57000
G 13/8 செல்வன் **வா.வைரமுத்து** சதயம் விஸ்வராய பூர்வீகம் : பேரூர்	27.09.93 5' - 6"	B.E. (EEE), M.E. (Power System)	Siemens Quatar	திரு. வா. செந்தில் நாயகம், 2/395, வடக்கு தெரு, பேரூர் & Post, காட்டுமன்னார்கோயில் TK – 608 701. Cell : 08123409169 E-mail : muthuvageesan@gmail.com
G 14/7 செல்வன் **S. ரவீன்குமார்** சதயம் 1ம் பாதம் கனகராய பூர்வீகம் : திருநெல்வேலி	21.11.93 175 cm	M.Tech VLSI	Senior Engineer VLSI	திரு. A. சங்கர், 28, 29, VGN Highness, Vikramadithian Street, Iyappanthangal, Chennai - 600 056. Cell : 78459 14635, 86670 33721, 94447 48490
G 15/7 செல்வன் **பாலாஜி S.R.** ரோகிணி முதனுட பூர்வீகம் : கோட்டவம், காட்டுமன்னார்குடி விருப்பம் : சமபடிப்பு	30.01.96 180 cm	B.Tech., MBA.,	IT Company - Admaxim - India (P) Ltd., Software Engineer (Java Developer) Rs. 50,000/PM	திரு. S. ராம்தாஸ், 17, காமராஜ் வீதி, தாகூர் நகர், இலாசுப்பேட்டை, பாண்டிச்சேரி – 605 008. Cell : 94425 80571, 86108 73478

வருந்தலும் திருந்தலும் ஒன்றே வழி

– கோலாகலன்.

சாத்தநத்தம் தாமரைக் குளக்கரையில் சிவகாமி சித்தர் அமர்ந்திருக்க அவர் எதிரில் நல்ல கூட்டம். ''பரிகாரம்'' என்பதைப் பற்றிச் சொல்லுங்கள் சுவாமி என்றார் குரு. புன்முறுவல் பூத்த சுவாமிகள் மெல்ல பேசத் தொடங்கினார்.

''பரிகாரம் என்றால் விமோசனம், நிவர்த்தி, ஈடுகட்டுதல் என்றெல்லாம் பொருள் உண்டு. தமிழில் ''கழுவாய்'' என்பர். நாளும் நமக்குப் பல இன்னல்கள். இடையூறுகள், துன்பங்கள், துயரங்கள், குழப்பங்கள், கோளாறுகள் என வரலாம். இவை யாவும் மன அமைதியை இழக்க வைக்கும். மேலும் நம் நடைமுறைச் செயல்களைச் சரியாகச் செய்ய முடியாமல் தடுக்கும். இவற்றிற்குத் தீர்வு காணவும், இவற்றினின்றும் விடுபடவும் நாம் முயல்கிறோம். இம்முயற்சி வெற்றி பெற நமக்குத் தேவை வழிபாடு ஒன்றே! எவ்வளவுதான் அறவழிப்பட்டாலும், அறிந்தோ அறியாமலோ அறம் மீறி இருக்கலாம். அது பாவமாகி இருக்கலாம். அப்பாவம் தீவினைப் பயனாகி நமக்குத் துன்பங்களைத் தரலாம்.

அத்தகையத் துன்பங்களைக் களைய முயல்வதில் பிழை ஏதுமில்லை. அது மிகச் சரியே! சரியான செயல் வழிபாடே! வழிபாடு என்ற சொல் வழிபடு என்ற சொல்லினின்று வந்தது. வழி+படு––––வழிபாடு... இதன் பொருள் வழியில் செல்லுகை, பின்பற்று கை, Proceeding on the way folliwing என்பதாம். வழியில் செல்லுதல் என்பது நல்வழியில் செல்லுதல் என்பதே. நல்வழி என்பது அறவழி. ஏனையவை அவ்வழி. அறவழியைக் காட்டியது யார்? இறைவன், இறைதூதர்களாகிய அருளாளர்கள், அறவாணர், சான்றோர், பெற்றோர், பெரியோர், ஆசான் ஆகியோர் இவர்கள் சொல்லிய அல்லது காட்டிய வழியில் செல்லுதலே வழிபடுதலாம்.

நல்வழியைக் காட்டிய அவர்களால் நாம் பெற்ற நன்மையை எண்ணி அவர்கள்பால் நன்றியுடன் இருப்பதே வழிபடுதலாம். ஆக வழிபடுதல் என்பது நன்றியின் பால் செய்வது. நம்மை வழி நடத்தும் அவர் அறத்தைக் காட்டியவர் (இறைவன்), அறத்தைக் கூறியவர், ஆக இவர்களை வணங்குதலே வழிபடுதலாம். வணக்கம் என்பது 'வா'; நான் உனக்கு இணக்கமாக இருக்கிறேன் என்பதுதான். நீ வந்து என்னுள் இரு. நான் நன்றியுடன் உனக்கு இணக்கமாக ஒத்துப்போகிறேன். உன் வழியில் செல்கிறேன் என்பதே பொருள்.

சரி. நமக்கு வரும், வந்த துன்பங்களைக் களைவது என்பது நாம் செய்த தவற்றிற்கு மனமாற வருந்துதல்; உளமாற உருகுதல்; நெஞ்சாற அழுதல், பின் இறைவனிடம் பொறுத்தருள வேண்டுதல். இயன்றால் நம்மால் பாதிக்கப்பட்டவரிடம் மனச்சான்றின்படி உண்மையை ஒத்துக்கொள்ளுதல், அவர் ஏற்பாரெனில் இயன்ற உதவிகளைச் செய்தல். இனி இது போன்ற பிழைகளை, தவறுகளை, அறம் மீறலை ஒரு போதும் செய்யவே மாட்டேன் என்று உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல் ஆகிய இவை போதும்.

ஆனால் இதனை விடுத்து யார் யாரோ சொல்லும் எதை எதையோ செய்யத் துணிதல் தவறு. அவ்வாறு செய்வதனால் எப்பயனும் இல்லை. செல்வர் செய்யின் அவருக்குப் பணம் ஒரு பொருட்டே அல்ல. கையில் மிச்சம் காசு உள்ளோர் செய்யின் அவர்களுக்குத் தாங்கும்; தாழ்வில்லை. ஆனால் கையில் காசின்றி, உள்ளதை வைத்து அல்லது விற்று, அல்லது வட்டிக்கு வாங்கி பரிகாரம் என்ற பெயரில் பாடாவதியானவற்றைச் செய்கின்றவர்களைப் பார்த்து மனம் மிக வருந்துகின்றது. இதற்கெல்லாம் வழிகாட்டுவோர் பற்றி என்ன சொல்ல?! பரிகாரம் என்றால் என்ன? விமோச்சனம், நிவர்த்தி, ஈடுசெய்தல், பிராயச்சித்தம், கழுவாய் என்றெல்லாம் பல சொற்கள் உள்ளன. பரிகாரம் என்ற பெயரில் பகல்கொள்ளை தான் நடைபெற்று வருகிறது.

இறைவன் நமக்கு அம்மையப்பர். அவரே தாயுமானவர். நாம் செய்த பிழைகளை நன்மை தீமைகளை, பாவபுண்ணியங்களை நாம் பெற்றோராகிய உற்றோரிடம் தானே சொல்ல வேண்டும். அதைவிட்டு மாற்றாரிடம் சொல்லலாமா? நம் பிழைகளை நமது பெற்றோராய் இருக்கும் சர்வ வல்லமை மிக்க இறைவனிடம் சொல்லியழு. அதுபோதும் இடையில் எவரும் வேண்டாம். நம் கண்ணீரை உற்றவராகிய பெற்றோரே துடைப்பர். அவரே ஆற்றுப்படுத்துவர். நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்வர்.

''எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல் மற்றன்ன செய்யாமை நன்று'' என்கிறார் வள்ளுவர்.

பின்னால் வருந்துவனவற்றைச் செய்யாதே! செய்து இருப்பின் தாழ்வில்லை. அதனை விட்டுவிடு. மீண்டும் இனி செய்யாதே! என்பது இதன் பொருள். செய்ததற்கு வருந்து. உடன் திருந்து. அது போதும். இது தொடர்பாக ஒரு நிகழ்வினைச் சொல்கிறேன். கேளுங்கள்''.

''மராத்திய தேசத்தில் ஊரை ஏமாற்றிக் கொண்டிருந்தது ஒரு குழு. இக்குழுவினர் பாவ புண்ணியங்களைப் பற்றிப் பேசி பாவங்களிலிருந்து விடுபட பரிகாரம் செய்ய வேண்டும் என்று

சொல்லி மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தனர். இந்த பாவத்திற்கு இந்த பூசை, இந்த பாவத்திற்கு இந்த ஓமம், இந்த பாவத்திற்கு இந்த யாகம், இந்த பாவத்திற்கு இந்த தானம் என்றெல்லாம் கூறி பணம் சுருட்டிக் கொண்டிருந்தனர். இதனைக்கண்டு சிறிதும் சகியாத இராமதாசர் என்னும் ஓர் அருளாளர், இந்த ஏமாற்றுப் பேர்வழிகளுக்கு ஒரு பாடம் கற்பிக்க விரும்பினார்.

ஒரு நாள் இராமதாசர் கையில் ஓர் உண்டிக்கோலை எடுத்துக்கொண்டு மேற்சொன்ன பரிகாரம் செய்யும் மக்கள் வாழும் தெரு வழியே நடந்தார். அப்போது, அங்கு அவர் தம் கண்களில் பட்ட கிளிகளை எல்லாம் குறிபார்த்து அடித்துக்கொன்றார். இறந்தவற்றை தன் பையில் போட்டுக்கொண்டே சென்றார். இதனைப் பார்த்த அத்தெருவில் வசிக்கும் பரிகாரம் செய்வோர் 'ஆ'.... 'ஊ' என்று அலறினர். ஓடி வந்து என்ன வேலை செய்துவிட்டீர்? இது எவ்வளவு பெரிய பாவம் தெரியுமா? இதனை நீர் இப்படிச் செய்து விட்டீரே!' என்று வருத்தமும், சினமும் கலந்த குரலில் கூப்பாடு போட்டனர்.

இதனைக் கேட்ட இராமதாசர் சற்றும் அயரவில்லை. "ஆம் ஐயா! ஏதோ மனத்துள் தோன்றியது செய்துவிட்டேன். இதற்கு இப்பொழுது என்ன செய்ய முடியும்?"

"இதற்குப் பரிகாரம் செய்தாக வேண்டும். இல்லை என்றால் இப்பாவம் உம்மைச் சும்மாவிடாது!" கிளி அம்பாள் சொரூபம். அவள் தோளில் அமர்ந்திருக்கும் சிறப்புடையது. அவற்றைக் கொன்று விட்டீரே!"

"சரி பரிகாரம் செய்கிறேன். ஆனால் அப்பாவம் உறுதியாக என்னைவிட்டு அகல வேண்டும். சரியா?

"உறுதியாக அகலும். நாங்கள் சொல்வதைக் கேட்க வேண்டும்"

"சரி சொல்லுங்கள் கேட்கிறேன்".

அவர்கள் சொன்ன அனைத்தையும் இராமதாசர் செய்து முடித்தார். நிறைய பணம், பொற்காசுகளை அள்ளிக்கொடுத்தார். மகிழ்வுடன் அவற்றைப் பெற்றுக்கொண்டனர்.

இராமதாசர் "சரி.... இப்பொழுது எனது பாவம் என்னைவிட்டுப் போய்விட்டதா?" என்றார்.

"நிச்சயமாக உம் பாவம் கழிந்துவிட்டது."

"ஆனால் நான் கொன்ற கிளிகள் என் பையிலேயே கிடக்கின்றன."

"அதெப்படி இறந்த கிளிகள் உயிர் பெறும்? இறந்தவை இறந்தவைதான்."

"பரிகாரம் செய்தாகிவிட்டது. பாவம் கழிந்தது என்றால் கிளிகள் உயிர் பெற வேண்டுமல்லவா? கிளிகள் உயிர் பெற்றால் தானே என் பாவம் என்னைவிட்டு விலகியது என்று பொருள்!" என்றார் இராமதாசர்.

"அது எப்படி சாத்தியம்?" அவர்கள்.

"இப்படித்தான்" என்று இராமதாசர் தன் பையில் கிடந்த ஒவ்வொரு கிளியாகக் கையில் எடுத்து இறைவன் பெயரைச் சொல்லி விண்ணில் விட்டெறிந்தார். கிளிகள் உயிர் பெற்று பறந்து சென்றன.

இதனைக் கண்டு வியந்த அவர்கள் இராமதாசரின் திருவடிகளில் விழுந்து வணங்கினர். தங்கள் தவற்றை மன்னித்தருளுமாறு வேண்டினர்.

"ஆடு பூவே" ஆனந்தம் யாவுமென்று
பாடுபூவே! பாவத்துக்குப் பரிகாரம்
வருந்தலும் திருந்தலுமே" என்று
கூத்தாடு பூவே" என்று பாடிக்கொண்டே
சென்றார் சிவகாமிசித்தர்.

ஆன்மீகப் பயணத்தில் ஒருநாள்....

தி. ஜெயராமன்.
9443568722

நாங்கள், குடும்ப உறுப்பினர்களும், உறவினர்களுமாகவும் 9 பேர் ஆன்மீகச் சுற்றுலா செல்ல 13–07–2024 சனிக்கிழமையன்று Van மூலம் காலை 6.30 மணிக்கு எங்கள் பயணத்தைத் தொடங்கினோம். முதலில் என்கண் கிராமத்திலுள்ள அருள்மிகு பிரஹன்நாயகி உடனுறை அருள்மிகு பிரம்மபுரீசுவரர் ஆலயத்திற்குச் சென்றோம். கோயிலின் முன்புறமுள்ள பிரதான விநாயகரை வணங்கி விட்டு ஈசனையும், அம்பாளையும் வணங்கினோம். இழந்ததைத் திரும்பத்தரும் பிரசித்தி பெற்ற சுப்பிரமணியரை வணங்கினோம். பொரவாச் சேரியில் ஆறுமுகங்கள், பன்னிரெண்டு கரங்களுடன் மயில் மீது அமர்ந்துள்ளவாறு அழகுற சில்பமுனிவர் வடிவமைத்த சிற்பத்தின் அழகில் மயங்கிய மன்னன் முத்தரசன், அந்த சிற்பி இதற்குப் பிறகு வேறெந்த சிற்பத்தையும் வடிக்கலாகாது என்றெண்ணி அவருடைய கட்டை (பெரு) விரலை வெட்டி விடுகிறான். இருந்த போதும் அம்முனிவர் எட்டுக்குடி முருகனை வடிவமைத்ததால் மன்னன் அவரது இருகண்களையும் பறித்து விடுகிறான் என்பது வரலாறு. இக்கோயில் பராந்தக சோழன் காலத்தில் கட்டப்பட்டுப் பிறகு பல்வேறு

அரசர்களாலும் புணருத்தாரணம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. இருப்பினும் பழமை மாறாமலுள்ளது. வெளிச்சுற்றில் சில்ப முனிவரின் சமாதியும் அமைந்துள்ளது. 'என்கண்' கோயிலில் முருகன் சிலை செய்த போது சில்ப முனிவர் கைவிரல் கண்களைத் திரும்பப் பெற்றதால் 'என்கண்' என்ற ஊரானது.

காலை சிற்றுண்டியை அங்கேயே முடித்துக் கொண்டு அடுத்ததாக திருக்கொள்ளிக்காடு சனீஸ்வரன் ஆலயத்திற்குச் சென்றோம். குக்கிராமத்தில் அமைந்துள்ள இக் கோயிலில் பொங்குசனியாக காகத்தின் மீது அமர்ந்த நிலையில் சனீஸ்வரன் அருள்பாலிக்கிறார். சிவனுக்குரிய கோயிலாயினும் சனீஸ்வரனுக்கே முக்கியத்துவம் வாய்ந்துள்ளது. நாவுக்கரசரால் பாடப்பட்ட தலம். இத்தலத்திலுள்ள சனிபகவானை வணங்கினால் எதிர்மறையான பாதிப்புகள் நீங்கி வாழ்வு பொங்கிப் பெருகும் என்று கருதப்படுகிறது. எனவே 'பொங்கு சனி' எனப்படுகிறது. கரும வினைகளின் தாக்கம் அகலும்; சுயக்கட்டுப்பாடு பெருகும்; அறிவு வளரும்; தோஷங்களுக்குத் தீர்வு பிறக்கும்.

அதன் பிறகு நாங்கள் கச்சனத்திலுள்ள அருள்மிகு வெள்வளைநாயகி உடனுறை அருள்மிகு கைச்சின்னேசுவரர் ஆலயத்திற்குச் சென்றோம். இவ்வாலயத்திலும் சனீஸ்வரனுக்குத் தனிச் சன்னிதி உள்ளது. இவரும் திருக்கொள்ளிக்காட்டிலுள்ள சனிபகவான் போலவே அருள்பாலிக்கக் கூடியவர். ஒருமுறை ஸ்திரீசாபம் பெற்ற இந்திரன் அச்சாபம் நீங்க மணலால் லிங்கம் செய்து இறைவன் மீது மனமுருகித் தவம் செய்து வணங்கிய பிறகு லிங்கத்தை வழித்தெடுத்து நீரில் கரைக்க முயல லிங்கம் பெயராமல் அவனது கை பதிந்து போயிற்றாம் எனவே இறைவன் 'கைச்சின்னேசுவரர்' என்று அழைக்கப்பட்டார். ஊரின் பெயரும் 'கைச்சின்னேசுரம்' என் வழங்கப் பெற்று பிறகு மருவி 'கச்சனமானது. இறைவி வெண்மை நிறமுள்ள கைவளைகளை அணிந்ததால் 'வெள்வளைநாயகி' என்று அழைக்கப்பட்டார். குழந்தை வரமருளும் தலம்.

கச்சனத்திலிருந்து அடுத்து நாங்கள் சென்ற இடம் திருக்குவளை அங்குள்ள கொடி மரத்துப் பிள்ளையாராகிய "துவஜஸ்தம்ப விநாயகரை" வணங்கிய பிறகு அருள்மிகு பிரம்மபுரீசுவரர் (கோளிலிநாதர்) மற்றும் இறைவி அருள்மிகு வண்டார்குழலி ஆகியோரைத் தொழுதோம். உள் சுற்றில் தியாகவிநாயகர் அருள் புரிகிறார்.

அடுத்து நாங்கள் எட்டுக்குடியிலுள்ள அருள்மிகு சுப்ரமணியர், ஆலயத்திற்குச் சென்று வணங்கினோம். வள்ளி தெய்வானை சமேதராக உள்ள சுப்பிரமணியர் சிற்பமும் முனிவரால் அழகுற அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தினுள்ளே அருள்மிகு சீனிவாசா சௌந்தரராஜப் பெருமாளுக்கு ஒரு தனிச் சன்னிதி உள்ளது. தேர் அமைந்தது (மாடக்கோயில்) போன்றமைந்த கட்டிடக்கலை, படிகளிலேறி முருகனைத் தரிசித்தோம். அறுபடை வீடுகளுக்குரிய முக்கியத்துவம் இதற்குமுண்டு.

அடுத்து நாங்கள் திருத்துறைப்பூண்டி அருள்மிகு பிறவி மருந்தீசுவரர் ஆலயத்திற்கு மதிய வேளை சென்றோம். இறைவி பெரியநாயகியம்மன் மற்றும் மங்களநாயகி அம்மன் நடைசாத்திய பிறகு செல்ல நேர்ந்ததால், இறைவன் பிறவிமருந்தீசர் எங்களுக்குக் 'காட்சி' என்ற மருந்தை அளிக்காததால், கதவுகளுக்குள்ளிருக்கும் ஈசனையும், அம்மையையும், கதவிற்கு வெளிப்புறத்திலிருந்து மானசீகமாக வணங்கி, மதிய உணவை முடித்துக்கொண்டு பொரவாச்சேரி (பொருள் வைத்த சேரி) முருகன் ஆலயத்திற்குச் சென்றோம். ஆறுமுகங்களும், பன்னிரு கரங்களும் கொண்டு மயில் மீது அமர்ந்த கந்தசாமி (முருகன்) யின் விக்கிரகம் கால்கள் தாங்கியுள்ளதாக அமைந்திருப்பது வியப்பாக உள்ளது. மேலும் ஆறுமுகப் பெருமானின் உடலில் நரம்புகள் தெரிகின்றன. வள்ளி ஒருபுறமும், தெய்வானை மறுபுறமும் காட்சி தருகின்றனர். அன்னதான மகாகணபதி, மீனாட்சி சுந்தரேசுவரர் சன்னிதிகளும் உள்ளன. சிக்கல் ஆலயத்தின் புணருத்தாரணத்தின் போது அங்குள்ள பொருள்கள் பொரவாச்சேரி ஆலயத்தில் வைத்துப்பாதுகாக்கப்பட்டதால் 'பொருள்வைத்த சேரி' என்று அழைக்கப்பட்டது.

அடுத்து நாங்கள் சிக்கல் சிங்காரவேலனைத் தரிசிக்கச் சென்றோம். முருகப்பெருமான் ஆலயங்களுள் இது ஒரு முக்கியக் கோயிலாகும். இங்கு சிவன் மற்றும் விஷ்ணுவும் அருள் பாலிக்கின்றனர். நவநீதேசுவரர் திருக்கோயிலினுள்ளேயே சிங்கார வேலனார் கோயிலும் உள்ளது. சிவனுடைய பெயர் வேநீதேஸ்வரர், அம்மையின் பெயர் வேல்நெடுங்கண்ணி. விஷ்ணுவின் பெயர் கோலவாமனன் ஆகும். காமதேனுப்பசு சொறிந்த பாலில் உண்டான வெண்ணெயை லிங்கமாக்கி வசிஷ்ட முனி வழிபட்ட பிறகு, அதை எடுக்க முடியாமல் 'சிக்கல்' ஏற்பட அவ்வூர் சிக்கல் என அழைக்கப்பட்டது. சிவனுக்கும், அம்மைக்கும் இடையே முருகப்பெருமான் அமர்ந்து அருள்பாலிக்கிறார். குழந்தை வரம் அருள்பவர்.

அன்னை வேல்நெடுங்கண்ணியிடம் சிங்காரவேலர் வேல் வாங்கி திருச்செந்தூரில் சூரனைச் சம்ஹாரம் செய்ததாகக் கந்தபுராணம் கூறுகிறது.

அடுத்ததாக நாங்கள் திருச்சங்காட்டாங்குடியிலுள்ள அருள்மிகு சூளிகாம்பாள் மற்றும் அருள்மிகு உத்திராபதீஸ்வரரை வணங்கினோம். இக்கோயில் காவிரியின் தென்கரையிலமைந்த, தேவாரப்பாடல் பெற்ற 79–ஆவது சிவத்தலமாகும். பிள்ளையார் கஜமுகாசுரனைக் கொன்று அப்பாவம் நீங்க இறைவனை வழிபட்டதால் இவ்வாலயம் 'கணபதீச்சுரம்' என்றும் அழைக்கப்படலாயிற்று. இறைவன் சிறுத்தொண்ட நாயனாரிடம் பிள்ளைக்கறி கேட்டுப் பெற்று அருள்புரிந்ததலம். இந்நிகழ்ச்சி 'அமுதுபடையல்' வயீழாவாகக் கொண்டாடப்படுகிறது.

அதன் பிறகு நாங்கள் திருக்கண்ணபுரம் பெருமாள் கோயிலுக்குச் சென்றோம். மூலவர் நீலமேகப் பெருமாள் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கி, மற்ற கோயில்களில் உள்ளது போல அபயக்கரம் காட்டாது, தானம் பெறும் கரத்துடன் காட்சியளிக்கிறார். உற்சவர் அருள்மிகு சௌரிராஜப்பெருமாள். தலையலங்காரம் சவுரிமுடியுடன் உள்ளதால் சௌரிராஜப் பெருமாளானார். 'கிருஷ்ணாபுரம்' என்று அழைக்கப்பட்ட இவ்வூரானது. பின்னர் திருக்கண்ணபுரம் என்ற பெயர் பெற்றது. இவ்வாலயத்தின் முன்புறம் பெரிய தெப்பக்குளம் ஒன்று நன்கு பராமரிக்கப்பட்டு அழகுற அமைந்துள்ளது.

இவ்வாலயத்தரிசனத்திற்குப் பிறகு நாங்கள் திருப்புகலூர் சென்றோம். திருஞானசம்பந்தரால் தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் காவிரி தென்கரைத் தலங்களில் 75–ஆவது சிவத்தலமாகும். இங்கு அக்னிதீர்த்தமும், பாணதீர்த்தமும் உள்ளன. இறைவனின் திருநாமம் அக்னிபுரீஸ்வரர். தாயாரின் பெயர் கருந்தார்குழலி (சூளிகாம்பாள்), நாவுக்கரசர் மற்றும் சுந்தரரும் தேவாரப் பாடல் அருளியுள்ளனர். அக்னிபகவான் வழிபட்டதால் இறைவனின் திருநாமம் 'அக்னிபுரீஸ்வரர்' என வழங்கலாயிற்று. முற்பிறவிப்பாவங்களைப் போக்.கும் அற்புதத்தலம். 'புகல்' அளிக்கக் கூடியதால் திருப்புகலூர் என வழங்கப்படலாயிற்று.

இத்துடன் எங்களின் ஒரு நாள் ஆன்மீகப் பயணத்தை மன அமைதியுடனும், மகிழ்ச்சியுடனும் நிறைவு செய்து இரவு 7.45 மணிக்கு இல்லத்தைச் சென்றடைந்தோம்.

சிவஞான போதம் தமிழ்நூல் - ஆய்வு.

சித்தாந்த ரத்தினம். இர. சீனிவாசன். (எம்.பில்)
அண்ணாமலைநகர், சிதம்பரம்.

"கல்தோன்றி முன் தோன்றா காலத்தே தோன்றிய மூத்த தமிழ்க்குடி,"

என்று தொல்காப்பியம் கூறுகிறது. இப்போதுள்ள கன்னியாகுமரிக்குத் தெற்கே லெமூரியாக் கண்டம் கடல்கோள்களால் மூழ்கியது. லெமூரியாக் கண்டத்தில் தான் முதலில் மனிதன் தோன்றினான். தோன்றிய மனிதன் தமிழன். தமிழன் தன் பண்பாடு, கலாச்சாரம், மொழி நாகரீகத்தை இந்தியா முழுவதும் பரப்பினான். மேலும் பல்வேறு கண்டங்களிலும் (உலகம்) தமிழன் வாழ்ந்து வந்தான்.

தமிழ் மூவேந்தர்களும், சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் தமிழை வளர்த்தனர். பாண்டிய மன்னன் மூன்று சங்கங்கள் வைத்து தமிழ் வளர்த்தான். முதற் சங்கத்தில் சிவபெருமானே தலைமைப் புலவனாக இருந்த தமிழை வளர்த்தான். முதற் சங்கத்தில் தோன்றி வளர்த்த தமிழ் நூல்கள் கடல் கோள்களால் அழிந்தன. அகத்தியம் தமிழ் இலக்கண நூல் கிடைக்கவில்லை. இடைச்சங்க, கடைச்சங்க காலத்தில் தோன்றியதொல்காப்பிய இலக்கண நூல் தமிழரின் வரலாறு, பண்பாடு, கலாச்சாரத்தை தெரிவிப்பன. உலகில் உள்ள எல்லா மொழிகளிலும் எழுத்து, சொல் அதிகாரங்கள் தோன்றின. உள்ளன. ஆனால் பொருள் அதிகாரம் மட்டும் தமிழ்மொழியில் மட்டும் உள்ளன. வேறு எந்த மொழியிலும் இல்லை. மேலும் தமிழில் "ழ" கரம், ல, ள கரம் தமிழ்மொழிக்கு மட்டுமே சிறப்புடையதாகும்.

திருமூலர் தம் திருமந்திரத்தில் தமிழ்மொழி உலகம் முழுவதும் பரவியிருந்தது என்று வாக்கு மூலம் அளிக்கின்றார்.

"தமிழ் மண்டலம் ஐந்து3ம் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவார்
அவிழு மனமும் எம் மாதி அறிவும்
தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவ மாமே"

தமிழ் மண்டலம் என்பதற்கு சில பஞ்ச திராவிட மொழிகளாவன தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், மராட்டியம் வழங்கும் மண்டலங்கள் என்றும், சேர, சோழ, பாண்டிய, கொங்கு, தொண்டை மண்டலங்கள் என்றும் பொருள் செய்து இடர்படுவார் ஆயினர். ஈண்டு மண்டலம் என்ப திருமூலர் கூறியது

ஆசியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியாக் கண்டங்களையே ஆகும். மண் + தலம் என பிரிக்க, அப்பாட்டிலே தமிழ்நாட்டுச் சித்தர் குழாங்கள் அக்கண்டங்களிலே ''ஞானம் உமிழ்வது போல உலகம் திரிவார்'', எனக்கூறி மண்டலம் என்பது உலகம் என்று விளக்கியுள்ளார். திருமூலர் காலம் கி.மு. 6000 க்கும் முற்பட்டது என்று துடிசைக்கிழார் அ. சிதம்பரனார் கூற்று..

''கயிலாயத்தோடு சித்தர் பெறியிற் சேர்வார்'' என்று உமாபதி சிவம் வாக்கு ஆகும். பொதிய மலையில் அகத்தியரைக் காண கயிலையில் இருந்து புறப்பட்டார். இது திருமூலருக்கு இரண்டாவது தென்னாட்டு யாத்திரை ஆகும். திருமூலர்காலம் 8000 ஆண்டுகள் என்று க. வெள்ளைவாரணார், பன்னிரு திருமுறை வரலாற்றில் குறிப்பிட்டுள்ளார். சிந்துநதி பள்ளத்தாக்கில் உள்ள அரப்பா – மொகஞ்சதாரோ என்னும் இடங்களில் அகழ்ந்து கண்டு பிடிக்கப்பட்ட கட்டங்களையும், பொருள்களையும் நோக்கும் இடத்து அவைகள் எல்லாம் 5000 B.C. க்கு பல்லாண்டுகள் முற்பட்டவை என்று சர். ஜான் மார்ஷல் என்ற பாதிரியார் கூற்று. அவை தமிழர் நாகரீகம் என்றும், ஆரியர் வருகைக்கு முன்னே பலநூற்றாண்டுகள் முன்பு தோன்றியது என்று மேலும் விளக்குகின்றார்.

பாரதிதாசன் பல்கலைக்கழக பல்துறை சார்பில் ''பூங்புகள் ஆய்வுத்திட்டம் 2019 இல் தொடங்கி இரண்டரை ஆண்டுகளாக நடைபெற்றது. ஆய்வுத்திட்டத்தலைவர் முனைவர் ராமசாமி கூறுகையில் பூம்புகார் துறைமுகப்பட்டினம் 15,000 ஆண்டு முந்தியது என்று தினகரன் செய்தித்தாளில் 2023 சனவரி 21–இல் புகைப்படத்துடன் விரிவாக விளக்கியுள்ளார். எனவே தமிழ்மொழி 15,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதெனத் தெளிவாகிறது.

இந்நிலையில் திருக்கயிலையிலிருந்து தென்பகுதியில் அகத்தியரைக்காண பொதியமலையை நோக்கி பரஞ்சோதி முனிவர் வானவீதியில் வந்து கொண்டு இருந்தார். அகச்சந்தான குரவர்கள் நான்காவதாக உள்ளவர் சிலர். இவரது விமானம் திருவெண்ணெய் நல்லூருக்கு மேலே வந்ததும் நின்றுவிட்டது. அதன் காரணத்தைத் திருவருட் குறிப்பால் உணர்ந்தார்.

விமானத்தைவிட்டுக் கீழே இறங்கி வந்து சுவேதனப்பெருமானின் திருவருள் திறத்தை அறிந்தார். குழந்தைக்கு முறைப்படி சிவதீட்சை செய்து, ''மெய்கண்டசிவம்'' என்னும் தீட்சா நாமம் சூட்டினார். தன் குருவாகிய சத்திய ஞானதரிசினி என்னும் குருவின் பெயரை, வடமொழியில் உள்ள பெயரை வைக்காமல் தமிழில் மெய்கண்ட சிவம் என்னும் பெயரைச் சூட்டினார். பரஞ்சோதி முனிவர் தெருவில் சிறு தேர் உருட்டி விளையாடிக் கொண்டிருந்த குழந்தையின் தாய்மொழியாகிய தமிழில் பேசினார். தமிழ்நாட்டில் தமிழ்மொழி தாய்மொழியாக உள்ள நிலையிலும், இரண்டு வயது குழந்தைக்குத் தெரிந்த மொழியாக உள்ள தமிழ்மொழியில், மெய்கண்டார் என்னும் திருநாமம் சூட்டினார். அதன்பின் சிவஞான போதம் என்னும் பேரருள் நூலின் நுண்பொருளை உபதேசித்து அருளினார்.

அவ்வருள் உபதேசம் பெற்ற மெய்கண்ட சிவனார் சிவஞானபோதம் என்னும் அருள் நூலினை செந்தமிழ் மொழியில் செய்து அருளினார். மேலும் பொல்லாப்பிள்ளையார் அருள் பெற்று சிவஞானபோதத்திற்கு ''வார்த்திகம்'' ஆகிய பொழிப்புரையினையும் செய்து அருளினார். சிவஞானபோதத்தை ''இரௌவ ஆகமத்தில் எழுந்த சிவஞானபோத'' நூலினைத் தமிழ் உலகம் உய்தல் பொருட்டு மொழி பெயர்த்துக் செய்தார் மெய்கண்டார் என்று சிவஞான பாடிய மங்கல வாழ்த்துப்பாடலில் தொடக்கத்தில் சிவஞான சுவாமிகள் கூறியுள்ளார்கள். ''உயர் சிவஞான போதம் உரைத்தோன்'' என்ற வரியில் சிவஞான சுவாமிகள் சிவஞான போதம் என்ற சொல்லுக்கு மிக அருமையாக விளக்கம் கூறி உள்ளார்கள். உயர்ந்த சரியை, கிரியை, யோக, ஞான பாதம் ஆகிய நான்கினுள் ஞானபாதமே சிறந்தது என்று கூறி ஞானபாதத்தை விளக்கும் சிறந்த நூல் என்றும், அதுவே இந்நூலுக்கு ''சிவஞானபோதம்'' என்று பெயர் ஏற்பட்டது என்றும் அருமையாக விளக்கம் கூறியுள்ளார்கள். மேலும் உரைத்தோன் என்ற சொல்லுக்கு எடுத்துக் கூடியவர்கள். வாயினால் கூறியவன் என்று பொருளை கொள்ள வேண்டும். இந்த இடத்தில் வடமொழி (சமஸ்கிருத) என்று கூறவில்லை. குழந்தைக்குத் தெரிந்த தாய்மொழியில், தமிழில்தான் பரஞ்சோதி முனிவர் உபதேசம் செய்தார். ஆகவே வடமொழியில் இருந்து மொழி பெயர்த்தார் என்று கூறுவது பொருந்தாது. மேலும் வடமொழி (சமஸ்கிருத) க்கு வரிவடிவம் (எழுத்து) இல்லை. தமிழில் உள்ள பிராமி மொழியில் உள்ள வட்ட எழுத்துக்களையும் கோல் எழுத்துக்களையும் கடனாகப் பெற்று தோன்றிய மொழி வட மொழி. இது கி.பி. 2–ம் நூற்றாண்டில்தான் எழுத்து வடிவம் பெற்றது என்று மொழியில் வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்கள் கூற்று. எனவே சிவஞான போதம் வடமொழியில் இருந்து மொழி பெயர்க்கப்படவில்லை என்பதை நாம் அறியலாம்.

தொடரும்...

விரதங்களின் வகைகள்

தீ. கபீர்தாஸ், சிதம்பரம். 9445473386

நாம் இறைவனை நோக்கிச் செல்ல ஆறு வழிமுறைகள் உள்ளன. அவைகள் முறையே பக்தி, ஞானம், தியானம், சத்தியம், சரணாகதி, விரதங்கள் எல்லா சமயங்களும் இதையே பிரதிபலிக்கின்றன. இதில் இப்போது சில விரதங்களைப்பற்றி சிந்திப்போம். விரதங்கள் தெய்வங்களை நினைவூட்டும், பாவங்கள் செய்யாமல் தர்மங்கள் செய்ய ஊக்குவிக்கும். மனம் இறையருளைத் தேடும். அதனால் மனம் உறுதிப்படும்.

1. அட்சய திருதியை விரதம் :

இது அன்பை வளர்க்கும். சித்திரை அமாவாசைக்குப் பின் 3–ஆம் நாள் அட்சய திருதியை வரும். அன்று ஏழைகளுக்கு உதவினால் மறு பிறவியில் ராஜயோகம் தான். உப்பை வாங்கி வீட்டில் வைத்தால் செல்வம் பெருகும். காலபோக்கில் இந்த எண்ணம் மாறி அனைவரும் அணிவணிகத்தை நோக்கி படையெடுக்கிறார்கள்.

2. விநாயக சதுர்த்தி விரதம் :

இது வெற்றியைத் தரும். சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி அன்று விரதமிருந்தால் மனநலம் மேன்மையடையும். ஆரோக்கியம் கிட்டும். எல்லா வனங்களும் இல்லம் நோக்கி வரும். இதன் பலன் குடும்பத்தார்க்கும், அவரைச் சார்ந்தோர்க்கும் போய் சேரும்.

3. நவராத்திரி விரதம் :

இவற்றால் நலங்கள் பல பெருகும். இவ்விரதத்தை பெரும்பாலும் பெண்கள் தான் கடைப்பிடிப்பார்கள். மலைமகள், அலைமகள், கலைமகள் இவர்களை முன் நிறுத்திதான் ஒன்பது நாட்கள் விழா கொண்டாடுவார்கள். வீட்டில் அவரவர் வசதிக்கு ஏற்ப படிகள் அமைத்து பல விதமான பொம்மைகளை கொலு வைப்பார்கள். ஆட்டம் பாட்டம் உண்டு. ஊரார் கண்காட்சி காண்பது போல வந்து போவார்கள். அவர்களுக்கு சுண்டல் போன்ற பிரசாதங்கள் வழங்கப்படும். பத்தாம் நாள் விஜயதசமி விழா கொண்டாடி விழாவை நிறைவு செய்வார்கள். சிறு குழந்தைகளை அன்று தான் பள்ளியில் சேர்ப்பார்கள். தனம், தானியம், மகப்பேறு, உடல் நலம், கல்வி, போன்ற பல நன்மைகள் குடும்பத்தைச் சாறும்.

4. சஷ்டி விரதம் :

இது சந்தான பாக்கியத்தைத் தரும். தம்பதியர்கள் இருவரும் விரதம் இருப்பது அவசியம். நம்பிக்கைக் கொண்டால் பலன் நிச்சயம். குழந்தை பாக்கியம் கிடைத்ததும் வரும் கந்த சஷ்டியில் மீண்டும் விரதம் இருந்து முருகனுக்கு நன்றி சொல்ல மறவாதீர்கள்.

5. கேதார கௌரி விரதம் :

இது கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமையை உண்டாக்கும். ஏதோ ஒரு காரணத்தால் அன்று அவ்விரதம் கடைபிடிக்க தடங்கள் ஏற்பட்டால் அதனால் பாதகம் ஒன்றுமில்லை. அடுத்த ஒரு நாளில் முழு உபவாசம் இருந்து அந்த விரதத்தை பூர்த்தி செய்யுங்கள்.

6. திருவாதிரை விரதம் :

இது திருமண வரம் தரும் விரதம். சிவனுக்கு உரிய நாள் திருவாதிரை. இந்நாளில் கன்னிப்பெண்கள் விரதம் இருந்தால் திருமணம் கைகூடும். விரத தாரங்களுக்கு எல்லா வளமும் உடல் நலனும் வந்து சேரும். திருவாதிரை அன்று களி உண்டால் நரகம் இல்லை என்ற சொல்வழக்கு உலகில் நடமாடுகிறது.

7. மங்கள வார விரதம் :

இந்நாள் மங்களத்தைத் தரும். மங்கள வாரம் என்றாள் செவ்வாய்க்கிழமை அன்று இராகு காலத்தில் விரதம் இருந்து துர்க்கையம்மனை வழிப்பட்டால், எல்லாத் துன்பங்களும் சென்றோடிவிடும். கன்னியர்களுக்கு கல்யாணயோகமும், கல்யாணமானவர்களுக்கு சுமங்கலி பாக்கியமும் நீடிக்கும்.

8. சத்திய நாராயணா விரதம் :

இது சகல சித்தியை அளிக்கும். பிறர்க்கு தீங்கு விளைவிக்காத கோரிக்கையை வைத்து விரதம் இருப்பின் அது நிறைவேறும். அது நிறைவேறியதும் நாராயணனுக்கு பூஜை செய்யுங்கள்.

9. லெட்சுமி குபேர விரதம் :

இது ஐஸ்வர்யத்தை அளிக்கும். வாழ்க்கையில் வரும் சங்கடங்கள், கசப்புகள் எல்லாம் போக வேண்டுமானால் குபேர விரதத்தை கைக்கொள்ளுங்கள். அதனால் துன்பங்களை நீக்கி நலம் பெற வைப்பான் குபேரன்.

10. சித்ரா பௌர்ணமி விரதம் :

இது மன அமைதியைத் தரும். நினைத்தது நடக்கும். ஆயுள் நீளும். திருமணத் தடை நீங்கும். குழந்தை பாக்கியம் கிட்டும். சித்ரா பௌர்ணமியன்று திருவண்ணாமலையில் கிரிவலம் வந்து அன்னதானம் செய்தால், கல்வி, வேலை, பதவி, அரசியல், ஆரோக்கியம், திருமணம், வழக்கு பிரச்சனைகள் அனைத்தும் நீங்கி மேன்மை உண்டாகும்.

சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு குழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பு

செயற்குழு கூட்டம் 21–7–24 அன்று தருமபுரம் ஆதீனம் சொக்கநாதர் திருமண மண்டபம் வடக்கு மாசி வீதி, மதுரையில் நடைபெற்றது.

சென்ற கூட்டத்தின் நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டது. ஓகளூர் நாட்டார் திரு. ரத்தினவேலு பிள்ளை, வரிச்சுக்குடி திரு. வேலாயுதம் பிள்ளை மயிலாடுதுறை திரு. T.S. தியாகராஜன் பிள்ளை, மற்றும் இறைவனடி இணைந்த நம் சொந்தங்கள் அனைவருக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநில சங்கத்திற்கு என்று ஒரு I.T. டீம் உருவாக்கி அதன் மூலம் மாநில சங்கத்தின் செயல் திட்டங்களையும் வாழ்த்துக்களையும் மற்றும் அனுதாப செய்திகளையும் ஒவ்வொரு தினமும் நம் குல மக்களுக்கு கொண்டு போய் சேர்ப்பது இந்த ஐடி டீம் உருவாக்க ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் இரண்டு அல்லது மூன்று பேர் ஐடி துறையில் சிறப்பான அனுபவம் வாய்ந்த இளைஞர்களை அடையாளம் காட்டுமாறு மண்டல செயலாளர்களையும் துணைத் தலைவர்களையும் கேட்டுக்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

கார்காத்தார் ஒப்புரவு இதழில் நமது மாநில சங்கத்தின் செயல்பாடுகளையும் வருகின்ற மாதத்தில் நடைபெற இருக்கின்ற முக்கிய நிகழ்வுகளையும் மற்றும் மாநில சங்கத்தின் செயல் திட்டங்களையும் ஒரு பக்கத்தில் கடிதமாக எழுதுவது : இதனை அனுமதிக்குமாறு கார்காத்தார் ஆசிரியர் பதிப்பாசிரியர் மற்றும் சென்னை சங்க தலைவர் செயலாளர் ஆகியோரை கேட்டுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

நாம் அமைந்துள்ள மெய்கண்டார் மக்கள் நல டிரஸ்ட் பற்றியும் அதனுடைய செயல்பாடு மற்றும் எதிர்கால வளர்ச்சி குறித்தும்: மெய்கண்டார் மக்கள் நல டிரஸ்ட் என்ற அமைப்பு நமது சமுதாயத்தின் ஒரு அடையாளமாக திகழ வேண்டும் என்றும் பெரும் பணிகளை செய்வதற்கு திரட்ட ஒரு மையமாக இருக்க வேண்டும் என்று கருதி இதற்காக மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து நிதி சேர்த்திட தீர்மானிக்கப்பட்டது.

மூன்றாம் முறையாக பிரதமராக பொறுப்பேற்றிருக்கும் நரேந்திர தாமோதர தாஸ் மோடி அவர்களின் தலைமையிலான கூட்டணி அரசுக்கு வாழ்த்து தெரிவித்து கடிதம் எழுத செயற்குழு தீர்மானிக்கிறது.

தமிழ்நாடு அரசு உடனடியாக கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளில் EWS 10% இட ஒதுக்கீடு அமல்படுத்த வேண்டி கடிதங்கள் அனுப்பப்பட்டது. இதற்காக தமிழ்நாடு முழுவதும் உள்ள முற்படுத்தப்பட்ட இன மக்களை ஒன்றிணைத்து சென்னையில் ஒரு பேரணி நடத்தப்பட்டது. மேலும் பல்வேறு குழுக்கள் மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டு தமிழக முதல்வரை சந்தித்து இது பற்றி வலியுறுத்த இருக்கிறார்கள். தமிழக அரசு இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. எனவே EWS 10% இட ஒதுக்கீட்டை உடனடியாக அமல்படுத்துமாறு கேட்டு தமிழக முதல்வருக்கு கடிதம் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி 40 மக்களவைத் தொகுதிகளிலும் வெற்றி பெற்று பதவியேற்றிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்க தீர்மானிக்கப்பட்டது.

விவசாயப் பொருட்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலையை (MSP) உயர்த்தவும் நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 3200 என்று நிர்ணயிக்கவும் தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்வது என்றும்,

இது சம்பந்தமாக ஒவ்வொரு மண்டலத்திற்கும் சம்பந்தப்பட்ட துணைத்தலைவர்களுடன் சென்று எல்லா சங்கங்களுக்கும் உயிரூட்டுவது அல்லது குறைந்த பட்சம் 15 குடும்பங்கள் உறுப்பினர்களாக இல்லாத சங்கங்களை அருகில் உள்ள சங்கங்களுடன் இணைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த ஆண்டிற்கான பொது சபையை செப்டம்பர் இறுதிக்குள் நடத்துவது என்றும் அதற்கு அரியலூர் துணைத்தலைவர் விருப்பம் தெரிவித்ததின் பேரில் அரியலூரில் நடத்தலாம் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

அனைத்து வேளாளர் இனங்களுக்கும் பொதுவான செய்திகள் குறித்து பிற சங்கங்களுடன் இணைந்து பேசுவது மற்றும் நடவடிக்கை எடுக்கலாம் என்றும் நமது தனித்தன்மையை எந்த காலத்திலும் விட்டுக் கொடுக்கக் கூடாது என்று தீர்மானிக்கப்பட்டது.

பிற விஷயங்கள் :

நிதி உதவி கேட்டு காரைக்கால் பகுதியில் இருந்தும், இரவான்குடி பகுதியில் இருந்தும் கடிதங்கள் வந்திருந்தன. மற்றும் பெண்ணாடம் மெய்கண்டார் கோவில் கும்பாபிஷேகம் குறித்தும் ஒரு கடிதம் தரப்பட்டிருந்தது. இவை அனைத்தும் குறித்து விவாதித்து முடிவெடுக்க தலைவர், பொதுச்செயலாளர், அமைப்புச் செயலாளர், பொருளாளர் அடங்கிய குழுவிற்கு அதிகாரமளித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

துணைத்தலைவர் ரவி ஈஸ்வரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

நங்கநல்லூர்

சங்க கூட்டம் 28.7.2024 அன்று தலைவரது இல்லத்தில் தலைவரது வரவேற்புடன் துவங்கியது.

முதல் நிகழ்வு – இரங்கள்: மயிலாடுதுறையை இருப்பிடமாகக் கொண்டு இப்பூவுலகில் 99 ஆண்டுகள் நிறைவாக பல சமுதாய நலம் சார்ந்த அமைப்புகளில் தலைமை பொறுப்பினை ஏற்று சமுதாய / சமூக பணிகளை அனைத்து தரப்பினரும் பாராட்டுகின்ற வகையில் பணியாற்றி இறுதியில் சிறிது காலம் உடல் நலம் குன்றியிருந்து அமரத்துவம் அடைந்த திருமிகு T.S. தியாகராஜபிள்ளை (TST) அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

சென்ற மாதத்திய கூட்ட நிகழ்வுகளும் தொடர்ந்து நடைபெற்ற சங்க நிகழ்வுகளையும் செயலாளரால் விவரிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

சங்கத்திற்கான சொந்த அடுக்குமாடி குடியிருப்பு 'A' குருபிரசாத் அடுக்ககம், 21–வது தெரு, இந்து காலனி, நங்கநல்லூர், சென்னை – 600 061 என்ற முகவரியில் கடந்த 12.07.2024 அன்று பத்திரப்பதிவு செய்யப்பட்டதற்கு சங்க நிர்வாகிகளுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த பணிக்கு அயராது பாடுபட்ட சங்க செயலாளர் திரு. கோ. தியாகராஜன் அவர்களுக்கு சங்க ஆலோசகர், மக்கள் சேவைநாயகன், மனிதநேயம் திருமிகு T.N. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்களது திருக்கரங்களால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

கூட்டத்தில் சங்க கட்டிடத்தின் எதிர்கால பயன்பாடு குறித்து விவாதிக்கப்பட்டது.

சங்க பொருளாளர் திரு. V. செல்வக்குமார் சமர்ப்பித்த வரவு செலவு கணக்கு விவரம் செயற்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

செயற்குழு உறுப்பினர் திரு. R. கார்த்திகேயன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது நிறைவேறியது.

க. சரவணன், தலைவர்.

அண்ணாநகர்

சங்க கூட்டம் 14–7–2024 அன்று கொரட்டூர் சங்க குடியிருப்பில் நடைபெற்றது. தலைவர் திரு. ஜெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் எல்லோரையும் வரவேற்று பேசினார்கள். கொடுங்கையூரில் இருந்து வந்து கலந்து கொண்ட திரு. செல்வகுமார் அவர்களுக்கும், திரு. சிவசங்கர், உதவி காவல் ஆய்வாளர் (ஓய்வு) அவர்களுக்கும் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

செயலாளர் பேசும் போது, சங்கம் என்றாலே மற்றவர்களுக்கு பயன்படும்படியாக ஏதாவது நல்லதை செய்ய வேண்டும், அதன் ஒரு பகுதியாக தான் திருமண தகவல் மையம் சங்கத்தின் சார்பில் தொடங்கப்பட்டுள்ளது என தெரிவித்தார். வழக்கம் போலவே இந்த ஆண்டும் அக்டோபர் 2–ந் தேதியே ஆண்டு விழா நடத்துவதென்றும், அதற்காக மண்டபம் பார்க்கும் வேலையை துவங்கவேண்டும் எனவும் பேசப்பட்டது. நிறைவாக திரு. சிவசங்கர் அவர்கள் நன்றியுரை சொல்ல கூட்டம் இனிதே நிறைவு பெற்றது. நன்றி !

– என். ஆனந்தகணபதி, செயலர்.

9094682811

விருத்தாசலம் :

மகளிர் அணியின் கூட்டம் 8–7–24 அன்று கூடி பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

கௌரவத்தலைவர்: திருமதி. ஜெ. சாந்தி, தலைவர்: திருமதி. வெ. சத்யபிரியா, செயலாளர் : திருமதி. ப. விருத்தாம்பிகை, பொருளாளர் : திருமதி. தி. மணிமேகலை, துணைத்தலைவர் : திருமதி. தி. அன்னபூரணி, துணைச்செயலாளர் : திருமதி. தி. மணிக்கொடி தொழில் முனைவோர்

ஆலோசகர் : திருமதி. அமுதா ராஜாமணி மற்றும் மகளிர் அணி மூலம் 15 பெண்டிர் தையற்பயிற்சி பெற்று வருகின்றனர். மற்றும் 21–07–24 ஞாயிறன்று (பௌர்ணமி) திருவிளக்கு பூஜை விழா நடத்தப்பெற்று 61 மகளிர் கலந்து கொண்டனர். அது சமயம் திருமதி. கோமதிராஜா (சௌடாம்பிகா ஸ்நாக்ஸ்) அவர்களால் அனைவருக்கும் ஜாக்கெட் பிட்டுடன் கூடிய பார்சல் வழங்கப்பட்டன. அது சமயம் மகளிர் அணி பொறுப்பாளர்கள் அனைவராலும் நைவேத்தியங்களும் (சர்க்கரை பொங்கல், லட்டு, சுண்டல்) மற்றும் பிஸ்கட், முறுக்கு போன்றவைகளும் வழங்கப்பட்டன.

பூஜையின் போது அனைவராலும் பாடல்கள் பாடப்பட்டன. கௌரவத்தலைவர் ஜெ. சாந்தி அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது.

காட்டுமன்னார் கோயில் ஒன்றியம்

21–07–2024 அன்று செயற்குழுக் கூட்டம், தலைவர் திரு. R. பத்மநாபன் பிள்ளை அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. இளைஞர் அணி தலைவர் திரு. S. மோகன்குமார் அனைவரையும் வரவேற்றார். தலைவர் தமது உரையில் கார்குல வள்ளல் திரு. S. வெங்கடேசன் பிள்ளை அவர்கள் நமது சமுதாயத்திற்கு செய்து வரும் உதவிகளை பாராட்டினார். இந்த ஆண்டு பொதுக்குழுக்கூட்டம் வரும் 14–08–2024 புதன்கிழமை சிறப்பாக நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக அண்ணாமலை பல்கலைக்கழக யோகா மைய பேராசிரியர் Dr. V. சாந்தி Ph.D., அவர்களையும், திரு. A. சிவன் D.R.S., M.A, M.B.A. ஆகியோரை அழைப்பதென முடிவெடுக்கப்பட்டது. இணைச்செயலர் திரு. K. ராஜீ அவர்களின் நன்றியுரைக்குப்பின் தலைவர் அளித்த சிறப்பான சிற்றுண்டியை ருசித்தோம். மதியம் 12.00 மணி அளவில் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

V.R. ஞானம், செயலர்.

0444876164

குமராட்சி ஒன்றியம்

சங்க 44–வது ஆண்டு விழா ஒன்றிய அரங்கத்தில் 30–06–2024 அன்று ஒன்றிய தலைவர் A.G. சிவராமன் பிள்ளை தலைமையில் நடைபெற்றது. செயலாளர் S.இராமச்சந்திரன் பிள்ளை வரவேற்புரை மற்றும் ஆண்டறிக்கைக்கு பிறகு பணிநிறைவு பெற்ற மருத்துவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் விருது பெற்றோர் பாராட்டி கௌரவிக்கப்பட்டனர். 10th, +2 தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்கள் பாராட்டி பரிசளிக்கப்பட்டார்கள்.

தலைமை ஆசிரியர் திரு. R. இளஞ்செழியன், திருமதி. சாந்தி சிவக்குமார், திருமதி. பில்டெக் அருள்மொழி, பேராசிரியர் திரு. V. செல்வநாராயணன், தொலைதூரக்கல்வி இயக்குனர் Dr. திரு. T. ஸ்ரீநிவாசன் ஆகியோர் பாராட்டி பேசினர். சிவாயம் திரு. பாலசுப்பிரமணியன் பிள்ளை அவர்கள் ''கார்குலத்தின் சிறப்பு'' பற்றி சிறப்புரை ஆற்றினார்கள். டாக்டர். திரு. V.R. பாஸ்கரன் M.S. அவர்கள் தனது ஏற்புரையில் சொந்தங்கள் அனைவரும் தங்கள் வீட்டில் ஒரு உண்டியல் வைத்து தினமும் சிறு தொகையை சேமித்து ஆண்டு முடிவில் சங்கத்திற்கு உதவ வேண்டினார். (தினமும் பிடி அரிசி திட்டம் போல்). அவர் கடந்த ஆண்டு சேமித்த உண்டியலை பொருளாளர் திருமதி. R. திலகம் அவர்களிடம் ஒப்படைத்து புதிய வழியை காட்டினார். இறுதியாக இளைஞர் S. விக்னேஷ் சிவ தாண்டவ நடனத்துடன் சிறுமிகள் கலை நிகழ்ச்சி சிறப்பாக அரங்கேறியது.

பொருளாளர் நன்றி உரைக்குப் பிறகு கூட்டம் மதிய உணவுடன் நிறைவு பெற்றது. விழாவின் போது கார்காத்தார் ஒப்புரவிற்கு ஒரு ஆயுள் சந்தாவும் மூன்று ஆண்டு சந்தாவும் சேர்க்கப்பட்டது. கட்டிட வளர்ச்சி நிதியாக அம்மாப்பேட்டை கிளை தலைவர் திரு. விநாயகசுந்தரம் பிள்ளை, ஒன்றிய அறுப்பினர் திருமதி. மலர்விழி செல்வநாராயணன் மற்றும் வசந்தி ரவிச்சந்திரன் மூவரும் தலா பத்தாயிரம் வழங்கியது முத்தாய்ப்பாக அமைந்தது.

- S. இராமச்சந்திரன் பிள்ளை,

செயலாளர்.

சீர்காழி

சீர்காழி நகர கார்காத்தார் சங்க செயற்குழுக் கூட்டம் 07–06–24 அன்று சங்க கட்டிடத்தில் தலைவர் திரு. கி. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. செயலாளர் திரு. கி. அகோரம் பிள்ளை வரவேற்புரை வழங்கினார்.

LKG முதல் +2 வரை கல்வி பயிலும் ஏழமை நிலையிலுள்ள உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு ஆகஸ்டு 15–ம் தேதி கல்வி உதவி தொகை வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.

பொருளாளர் திரு. S. ரவிச்சந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– சி. அகோரம்,

செயலாளர்.

இளந்தோப்பு

சங்க கூட்டம் 21–07–2024 அன்று S.S. ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையில் S. சபாநாயகர் ஆசிரியர் ஓய்வு அவர்கள் தலைமையில் சிவன் கோவில் வளாகத்தில் இனிதே துவங்கியது. அவர் தம் உரையில் செல்லியம்மன் கோவில் திருப்பணிகள் குறித்து வெகுவாக பாராட்டுதல்கள் தெரிவித்தார்கள்.

பொருளர் R. ஞானசேகரன் தமது உரையில் செப்டம்பர் 15 அன்று நடக்க இருக்கும் அய்யனார் கோவில் கும்பாபிஷேகத்திற்கு நமது கார்குல சொந்தங்கள் அதிகளவில் பொருளுதவி மற்றும் உடல் உழைப்பு நல்கிட வேண்டுகோள் விடுத்தார்கள்.

ஆண்டு சந்தா, நிலுவையில் உள்ளவை வசூல் செய்யப்பட்டது.

செயலாளர் தனது நன்றியுரையில் தலைவர் K.K.R.சுரேஷ் அவர்களதுஇளையமகள் திருமணத்தை இளந்தோப்பு சங்கம் சார்பாக சென்று வந்தமைக்கு அனைவருக்கும் நன்றிகள் தெரிவித்தார்கள். இந்த மாதம் அதிகளவில் உறுப்பினர்கள் கலந்து கொண்டமைக்கு நன்றிகள் தெரிவித்தார்கள்.

வெ. ராஜசேகர், செயலாளர்.

9444610947

மயிலாடுதுறை

செயற்குழு கூட்டம் 14–07–2024 அன்று திரு. R. முருகானந்தம் தலைவர் (பொ) அவர்கள் தலைமையில் மகளிரணி இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது. செயலர் அறிக்கையை திரு. A. இராசேந்திரன் வாசிக்க, பொருளாளர் திரு. R. சந்திரசேகரன் ஜூன் மாதத்திற்கான வரவு செலவு அறிக்கையினை சமர்ப்பித்து அதற்கு செயற்குழுவில் ஒப்புதலை பெற்றார். பள்ளி மாணவ, மாணவியர்க்கான கல்வி உதவித்தொகையை வசூலித்து அதை தகுதியானவர்களுக்கு வழங்கிட நிரந்தர கமிட்டி அமைக்கப் பெற்றது.

வரும் 15–8–2024 சுதந்திர தினத்தன்று சங்கத்தின் சார்பில் கொடியேற்றி கொண்டாட முடிவு செய்யப்பட்டது. 16–8–2024 அன்று மகளிரணி சார்பில் விளக்கு பூஜை கொண்டாட செயற்குழுவின் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

சங்க மேனாள் உறுப்பினர்கள் திரு. G. முருகையன், திரு. ஆனந்தன் திரு. சண்முகம் பிள்ளை (மாநில துணைத்தலைவர்) ஆகியோர் சங்க வளர்ச்சிக்காக தங்களின் மேலான கருத்துக்களை தெரிவித்தனர்.

இறுதியாக திரு. N. முத்துகுமரசுவாமி நன்றி கூற சென்ற மாதம் இறைவனடி சேர்ந்த நமது கார்குல சொந்தங்களுக்கு மௌன அஞ்சலி செலுத்தி கூட்டம் நிறைவு பெற்றது.

- C.R. முருகானந்தம்,

செம்பொன்னார் கோவில்

சங்க கூட்டம் 06–07–2024 அன்று சக்திவிநாயகர் தெருவில் வசித்து வரும் திரு. விசு. சேகர் பிள்ளை அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. சங்க தலைவர் திரு. கி. ராமநாதன் பிள்ளை தலைமை ஏற்கவும், இறைவணக்கம் திருமதி. மீனலோச்சினி பாடிடவும், வரவேற்புரை திரு. விசு. சேகர் பிள்ளை வரவேற்றிடவும், சென்ற மாத அறிக்கை செயலர் வாசிக்கவும் வரவு செலவு அறிக்கை மற்றும் 01–4–22 முதல் 31–3–24 முடிய இரண்டு ஆண்டிற்க்கான அறிக்கை ஆகியவற்றினை பொருளாளர் வாசிக்கவும் கூட்டம் அதனை ஏற்றது. தலைவர் தமது உரையில் எதிர்வரும் ஆகஸ்டு மாதம் சீர்காழி சங்கம் மூலம் நடைபெறவுள்ள 30 வயதுக்கு மேற்பட்டோர், மறுமணம் செய்ய விருப்பம் உள்ளோர் மேலும் சட்டபடி விவாகரத்து ஆனவர்களுக்கான மங்கல சந்திப்பு நடைபெறவுள்ளது என்றும் விருப்பம் உள்ளவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறும் சீர்காழி சங்கத்திற்கு நன்றி தெரிவித்தும் பேசினார்கள். உறுப்பினர் ச. மதியழகன் பல நகைச்சுவை துணுக்குடன் கூடிய செய்திகளை சொல்லி மகிழ்வித்தார்கள். உறுப்பினர் திரு. A.M. சேகர் அவர்கள் வாழ்க்கையில் முன்னேற வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்வதோடு தேவையானதை துணிந்து கேட்கவும், அவமானங்களை தாங்கி கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். மூத்த உறுப்பினர் திரு. V. வாசன் அவர்கள் ஆன்மீக சிந்தனைகளை வளர்க்கும் பொருட்டு சிவனுக்கு உருவம் இல்லை எனபது பற்றியும் சிவன் மட்டுமே God என்றும் மற்ற தெய்வங்கள் யாவும் Lord என்றும் அதாவது மற்ற தெய்வங்கள் யாவும் சிவனால் படைக்கப்பட்டவர்கள் என்றும் விளக்கினார்கள். நிறைவாக முன்னால் மாநில துணைத்தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை தமது உரையில் செம்பனார் கோவிலை பூர்வீகமாக கொண்ட நமது இனமக்களைப் பற்றியும் அவர்களின் ஆளுமை திறன் மற்றும் தனித்துவம் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்கள்.

கூட்டம் நடத்திய இல்லத்தார் திரு. வி.சு சேகர் பிள்ளை தம்பதியினருக்கு 50–ஆம் ஆண்டு திருமணம் பொன்விழா கண்ட தம்பதியினருக்கு வாழ்த்துக்கள் கூறி சால்வை அணிவிக்கப்பட்டது. மேலும் 80 அகவை கண்ட முன்னாள் மாநிலத்துணைத்

தலைவர் திரு. கணபதி நடனம் பிள்ளை திருமதி. மீனலோச்சனி தம்பதியினருக்கு வாழ்த்துக்களை தெரிவித்து சால்வை அணிவித்து சங்க உறுப்பினர்கள் ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார்கள். இறுதியாக சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் பிள்ளை நன்றி கூறிட கூட்டம் இனிதே நிறைவுற்றது. கூட்டம் நடத்திய இல்லத்தார் சார்பாக இரவு சிற்றுண்டி வழங்கப்பட்டது.

S. நெடுஞ்செழியன்.

பரசலூர் :

07–7–2024 அன்று நடைபெற்ற கூட்டம் கண்ணதாசன் நகர் சரவணன் – அகிலாண்டேஸ்வரி இல்லத்தில் ச. சுவாதிகா இறைவணக்கம் பாட, M. சரவணன் வரவேற்புரை நிகழ்த்த தலைவர் க. கோவிந்தராசன் தலைமையில் கூட்டம் துவங்கியது.

சென்ற மாத கூட்ட அறிக்கையை செயலர் வீ. கண்ணன், வரவு செலவு அறிக்கையை பொரளர் S.M. விஜய், மு.அ. நிதிய அறிக்கை தலைவர் க. கோவிந்தராசன் வாசிக்க வரவு செலவு சம்மந்தமான பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

சங்க வளைசுகங்கு உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை கூறினார்கள்.

07–7–24 ஞாயிறு அன்று 30–8–2024 ஆவணி 14 காலை 9–00 to 10–00 மணிக்குள் பரசலூர் பாலாம்பிகை உடனுறை வீரட்டேஸ்வரர், தட்ச சம்ஹார மூர்த்தி ஆலயத்தில் நடைபெறும் மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு தருமபுரம் ஆதீனம் 27–வது ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் கலந்து கொண்டு பந்தல்கால் முகூர்த்தம் செய்தார்கள்.

ஆடி 1–ம் தேதிநடைபெற்ற தட்ச சம்ஹார மூர்த்தி மகா அபிஷேகத்திலும் பரசலூர் கார்குல சொந்தங்கள் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

பரசலூர் சங்க கௌரவத்தலைவர் திரு. க. சண்முகம் பிள்ளை (பட்டாமணியார் பிள்ளை) 19–7–2024 இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதிச்சடங்கில் பரசலூர் கார்காத்தார் சங்கம் மற்ற கிராம சங்க பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.

20 பேர் கொண்ட குழு தலைவர் க. கோவிந்தராஜன் பிள்ளை தலைமையில் இராமேஸ்வரம், திருச்செந்தூர், மதுரை போன்ற ஆன்மீக தலங்களுக்கு சென்று வந்தனர்.

கூட்டம் நடத்திய இல்லத்தாருக்கு சரவணன் – அகிலாண்டேஸ்வருக்கு சிவக்குமார் பிள்ளை, ஈஸ்வரி சால்வை அணிவித்தனர்.

சிறப்புக்குலுக்கலில் ஆண்களுக்கான பரிசு S.M.விஜய்,பெண்களுக்கானபரிசுகோ.பானுமதிக்கும் முறையே சரவணன், அகிலாண்டேஸ்வரி வழங்கினர்.

கூட்டத்தில் கலந்து கொண்டவர் அனைவருக்கும் இனிப்பு, காரம், காபி வழங்கப்பட்டது.

நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவேறியது.

- V. கண்ணன்,

செயலர்.

Cell : 9894960438

80. இராதாநல்லூர்

சங்க கூட்டம் 14–07–2024 அன்று தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் இல்லத்தில் தலைவர் தலைமையில் சங்க செயலர் RMA. இராஜாமுத்தையா அவர்கள் வரவேற்க கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஜுன் & ஜூலை 2014–ல் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கண்ட சங்க உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

இராதாநல்லூருக்கு அருகில் உள்ள இலையமுது கூட சங்க பொருளாளர் திரு. சிவகடாக்ஷம் பிள்ளை அவர்களுக்கு திருக்கடையூரில் சதாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. அதை ஒட்டி இலையமுது கூட சங்கம் சதாபிஷேக தம்பதியர்களை பாராட்டி சிறப்பு செய்ய 23–6–24 ஞாயிறு மாலை சிறப்பு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து, இராதாநல்லூர் சங்க பொறுப்பாளர்களுக்கு அழைப்பு அனுப்பியதை ஏற்று நமது சங்க தலைவர், செயலர் மற்றும் பொருளாளர் கலந்து கொண்டு சதாபிஷேக தம்பதியர்களை பாராட்டி சிறப்பு செய்தமைக்கு இலையமுது கூட சங்கம் நன்றி தெரிவித்து நமது சங்க தலைவர், செயலர், பொருளர் ஆகியோருக்கு சிறப்பு செய்தமைக்கு இலையமுது கூட சங்கத்திற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

2024 – 25 ஆண்டிற்கான மாநில இணைப்பு தொகை ரூ. 500/– ஐ செலுத்த தலைவர் அவர்களை சங்கம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

சங்க இணைச்செயலர் காதி S.G. சந்தோஷ்குமார் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– தி. முத்துக்குமரசாமி,

தலைவர்.

9443645646

மேலையூர் (பூம்புகார்) :

சங்கக் கூட்டம் 07–07–24 அன்று செயலரின் இல்லத்தில் மூத்த உறுப்பினர் திரு. ஞானப்பிரகாசத்தின் இறைவணக்கத்துடன் தொடங்கியது. தலைவர் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். புதிய பொறுப்பாளர்களைத் தெரிவு செய்ய வேண்டிய அவசியம் பற்றி முன்னாள் பொறுப்பாளர்கள் சொல்லிய நிலையில், தலைவராக திரு. N. பாண்டியன் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவருக்கு முன்னாள் தலைவர் பொன்னாடை அணிவித்தார். தொலைபேசி உரையாடல் மூலம் திரு. சு. வெங்கடேசனிடம் இசைவு பெற்றுப் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

CREW TRUST கல்வி உதவித்தொகை பெற, பெற்றோரிடம் விண்ணப்பம் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. சங்க உறுப்பினர் திருமதி. ஷீலாவின் மகள் அபிநயாவிற்குத் தலைவர் வரதராஜனும், செயலர் பரணீதரனும் சீருடை வழங்கியமைக்கு உறுப்பினர்கள் கரவொலி மூலம் பாராட்டு தெரிவித்தனர்.

80–வயது நிறைவு செய்த உறுப்பினர்களுக்குப் பாராட்டு விழா எடுக்கத் தீர்மானிக்கப்பட்டது. சங்க உறுப்பினர் திரு. S. இராஜேந்திரன், இயற்கைச் சூழலைப் பாதுகாக்கும் வண்ணம் பொதுநல நோக்குடன், தெருக்களில் உறுப்பினர்களின் வீடுகளுக்கு எதிரில் மரக்கன்றுகளை நட்டுப் பராமரிக்கலாம் என்று கூறிய ஆலோசனை உறுப்பினர்களால் கரவொலி மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உறுப்பினர் திரு. S. இராஜேந்திரனின் மருமகள் திருமதி. காயத்ரி சொந்தமாக வீட்டிலேயே 'கேக்' தயாரித்து தொழில் தொடங்கி, அறிமுகப்படுத்த எண்ணி ஆர்வமுடன் உறுப்பினர்களுக்கு 'கேக்' வழங்கினார்கள். அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

செயலர் பரணீதரனுடைய மகள் நேத்ராவின் பிறந்த நாள் 04–07–24 லும், திரு. பரணீதரன் – திருமதி. தனுஜாவின் திருமணநாள் 08–07–24 லும் நிகழ்வதை முன்னிட்டு அவர் வழங்கிய தேனீர் விருந்திற்கு, அவர்களை வாழ்த்தி, உறுப்பினர்கள் நன்றி தெரிவித்தனர்.

சங்க உறுப்பினரும், சீனிவாசா மேனிலைப் பள்ளி ஆசிரியருமாகிய திரு. நடராஜனின் தகப்பனார் இராமச்சந்திரன் பிள்ளை இறைவன் திருவடி சேர்ந்தமைக்கு சங்க உறுப்பினர்கள் மவுன அஞ்சலி செலுத்தினர்.

இறுதியில் பொருளரின் நன்றியுரைக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– தி. ஜெயபாலன், பொருளர்.
9443568722

மூவலூர் மையம்

14–7–2024 அன்று திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை, மாப்படுகை அவர்கள் இல்லத்தில் சங்கத்தின் செயற்குழு கூட்டம் தலைவர் திரு. S. ராஜ்குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் திரு. நடராஜசுந்தரம் அவர்கள் இறைவணக்கம் பாட M. முருகானந்தம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். சென்ற கூட்டத்தின் அறிக்கையினை திரு. G. குருமூர்த்தி செயலாளர் அவர்கள் வாசித்தார்கள். வரவு செலவு கணக்குகளை திரு. மா.வெ. தமிழரசன் பொருளாளர் அவர்கள் வாசித்தார்கள்.

சோழம்பேட்டையை சேர்ந்த உறுப்பினர் சோ. க. ராஜாராமன் அவர்களின் புதல்வி ரா. சுவேதா கடந்த 10–ஆம் வகுப்பு தேர்வில் 496/500 மதிப்பெண் பெற்றதற்கு சங்கத்தின் சார்பாக நினைவு பரிசு, சால்வை வழங்கப்பட்டது. சங்கத்தலைவர் திரு. S. ராஜ்குமார் அவர்களால் நினைவு பரிசாக சன்மானம் ரூ. 500/– மேற்படி மாணவிக்கு வழங்கினார்கள்.

கீழ்கண்ட தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

சங்கத்திற்கு சொந்தமாக ஒரு சிறிய மனை ஒன்று வாங்கி அதில் ஒரு சிறிய கட்டிடம் கட்டவும் தீர்மானிக்கப்பட்டது.

மயிலாடுதுறையில் மூத்த குடி மக்கள் என்றழைக்கப்படும் திரு. T.S. தியாகராச பிள்ளை 99 வயதில் இறைவனடி சேர்ந்தார்கள்.

சங்க பொருளாளர் திரு. மா.வை. தமிழரசன் அவர்களின் மருமகன் திரு. K. வேல்முருகன் அவர்கள் கடந்த 23–2–24 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

இவர்களின் ஆன்மா சாந்தி அடைய ஒரு நிமிடம் உறுப்பினர்கள் மௌன அஞ்சலி செலுத்திய பின் கூட்டம் நிறைவடைந்தது.

G. குருமூர்த்தி.

கும்பகோணம் :

சங்கத்தின் 28–ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும் பொதுக்குழு, கும்பகோணம் மகாமக குளம் கீழ்கரையில் அமைந்துள்ள அருள்மிகு அபிமுகேஸ்வரர் ஆலயம் கல்யாண மண்டபத்தில் காலை 9 மணியளவில் தலைவர் டி.எம். வைத்தியநாதன் அவர்கள் தலைமையில், துணைத்தலைவர் என். சுப்பராயன், வி.ஆர். சாமிநாதன், பி..ரகுநாதன், எம்.சி.எஸ்.ஆர். சம்பந்தம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்தவர்களை திரு. கொண்டாங்குடி பாலகோபால் அவர்கள்

வரவேற்றார்கள். ஆண்டறிக்கையை செயலாளர் விஜயகுமார் அவர்களும் நிதி நிலை அறிக்கையை திரு. ஏ.எஸ். பழனி அவர்களும் சமர்ப்பித்தார்கள். அறிக்கையில் அனைத்தும் ஒரு மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. கல்விச் சுழல் நிதி அறிக்கை, புரவலர் நிதி அறிக்கை மற்றும் பசிப்போர் புசிக்க நிதி அறிக்கை குழு தலைவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. ஆண்டு விழாவில் சிறப்பு அழைப்பாளர்களாக பெண்ணாடத்தைச் சேர்ந்த மகளிர் அணி தலைவி லயன் எஸ். வசந்தா இளங்கோவன் மற்றும் பொருளாளர் திருமதி. சுப்புலட்சுமி வேல்முருகன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். அவர்கள் உலகில் பெண்களின் முன்னேற்றம் பாரம்பரிய முறையில் பொருட்களை தயாரித்ததை பற்றி விளக்கினார்கள். மேலும் அவர்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை கொண்டு ஸ்டால் அமைக்கப்பட்டது. நன்றி உரை துணைச்செயலாளர் எம். சாமிநாதன் அவர்கள் கூறினார்கள். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

டெல்டா மாவட்டங்களில் விவசாயம் முக்கியமானது போதிய அளவு அணைகளில் நீர் இருந்தும், தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடாத கர்நாடகா அரசை கண்டித்தும்.

விவசாயம் செழிக்க தமிழக அரசு உச்சநீதிமன்றத்தை அணுகி காவேரி நீர் பெற்று தர நடவடிக்கை எடுக்க வலியுறுத்துவது என தீர்மானிக்கப்பட்டது. மேலும் வாய்க்கால்கள், ஆறுகள், குளங்கள் இவைகளை உடனடியாக தூர்வாரி நீர்நிலைகளை பராமரிக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்வது எனவும்,

டெல்டா பகுதியில் எதற்கும் பயன்படாத சீமை கருவேல மரங்களை அகற்றி தூய்மைப்படுத்தி பயனுள்ள மரங்களை வளர்க்க தமிழக அரசை கேட்டுக்கொள்வது எனவும்,

நெல்லுக்கான ஆதார விலையை தமிழக அரசு ஜூன் மாதம் முன் தேதியிட்டு வழங்க கேட்டுக்கொள்வது எனவும்,

நாடு முழுவதும் பொருளாதாரத்தில் பின்தங்கிய முற்படுத்தப்பட்ட ஜாதியினருக்கு வழங்கப்பட்டுள்ள 10% இட ஒதுக்கீட்டை தமிழ்நாட்டிலும் சட்டபூர்வமாக வழங்க வலியுறுத்தியும், நீதியரசர் திரு. சந்துரு அவர்களின் அறிக்கையினை அமல்படுத்தகூடாது என்று தமிழக அரசு கேட்டுக்கொள்வது எனவும், வருகின்ற கும்பகோணம் மகாபாரதம் பெருவிழாவை முன்னிட்டு தஞ்சை மயிலாடுதுறை ரயில்வே பாதையை திருவழிப்பாதையாக அமைத்து தர மத்திய மாநில அரசுகளை வலியுறுத்துவது எனவும், கும்பகோணம் விருத்தாச்சலம் புதிய ரயில்வே பாதை அமைத்து தர மத்திய மாநில அரசுகளை கேட்டுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கும்பகோணம், மாதுளம் பேட்டை டி.எஸ். கே. வெங்கட்ராமன் அவர்கள் மனைவி திருமதி. ராஜேஸ்வரி அவர்கள் மறைவிற்கும், மும் மாவட்ட சங்க தலைவர் டி.எஸ். தியாகராஜன் பிள்ளை அவர்கள் மறைவுக்கும், திருப்பனந்தாள் தெய்வத்திரு. சுவாமிநாத பிள்ளை அவர்களின் மனைவியும் TMS. பாரி, TMS. ஜெயராமன், TMS. கண்ணன் அவர்களின் தாயாரும் ஆகிய கமலாம்பாள் 06–06–24 மறைவுக்கும் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் புதிய பொறுப்பாளர்களாக தலைவராக திரு. டி.எம். வைத்தியநாதன் அவர்களும், துணைத்தலைவராகதிரு.எம்.பாலகுரு,எம்.சுப்பராயன், ஜி. ராஜாராமன், பி. ராஜசேகரன், சி. வைத்தியநாதன், எம். சந்திரமோகன் மற்றும் செயலாளராக எஸ். விஜயகுமார், துணைச்செயலாளராக எம். சாமிநாதன், எஸ். ராஜேந்திரன், எம்.ஆர்.கே. பாண்டியன், டி.எஸ். சூரியநாராயணன், பொருளாளர் ஏ.எஸ். பழனி மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் துரை ராஜேந்திரன், மகேஷ்குமார், சிவசண்முகம், தியாகராஜன், குணசீலன், ராஜேஸ்வரன், சடகோபன் ஆகியோர் ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

- S. விஜயகுமார்,
செயலாளர்.

தஞ்சாவூர் :

21–07–2024 அன்று மாலை "கற்பக விநாயக சொற்பொழிவு மஹாலில்" தமிழ் தாய் வாழ்த்துடன் கூட்டம் தொடங்கியது. சங்கத் துணைத்தலைவர் திரு. S. மோகன்குமார் அவர்கள் தலைமை ஏற்க திருமதி. R. லதா இராஜசேகர் வரவேற்புரை நிகழ்த்தினார்.

முதல் நிகழ்வாக 80 வயது நிறைவு செய்த திரு. S. வெங்கடேசன் பிள்ளை திரு. S. நடராஜன் பிள்ளை திரு. R. ஞானசுந்தரம் பிள்ளை மற்றும் S. கணேசன் பிள்ளை ஆகியோருக்கு மரியாதை செய்யப்பட்டது. செயலாளர் திரு. S. மதியழகன் கூட்ட நடவடிக்கைகளைத் தொகுத்து வழங்கினார். உறுப்பினர் சந்திப்பு குறித்தும் கூறினார்கள்.

31–03–2024 முடிய உள்ள சங்க வரவு – செலவு கணக்குகளை திரு. S. மோகன் குமார் அவர்களால் வாசிக்கப்பட்டு ஏற்கப்பட்டது. காமதேனு அறக்கட்டளை மற்றும் Crew மூலம் கல்வி உதவித்தொகை பெற விரும்புவோருக்கு மனு அளிக்கும் முறைபற்றி விளக்கினார். புதிய உறுப்பினர்கள் அறிமுகம் செய்யப்பட்டனர். திரு. S. இராஜசேகர் அவர்கள் சங்க முன்னேற்றம் குறித்து

கருத்துகளை தெளிவுப்படுத்தினார்கள். 2024–ம் ஆண்டில் ''ஆண்டு விழா'' நடத்துவது குறித்து சங்க உறுப்பினர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டது. பலரும் கருத்துகளை ஆர்வமுடன் கூறினார்கள். ஆண்டு விழா குறித்து குழு அமைத்து ஆய்வு செய்து விழா சிறப்பாக கொண்டாடுவது என முடிவு செய்யப்பட்டது. பொருளாளர் திரு. R. சண்முகம் நன்றியுரை கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

S. மதியழகன்,
செயலாளர்.

மதுரை

சங்கத்தின் 75ம் ஆண்டு பவள விழா 21.07.2024 அன்று மிகவும் சீரும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருப்புகழிசைத் தவமணி கமலாதேவி வழித் தோன்றல்களின் "தெய்வதீந்தமிழிசை" கச்சேரியும் மாணவ மாணவிகளுக்கு ஓவியத் போட்டி, கட்டுரைப் போட்டி, மகளிர்களுக்கு ஞாபகத்திறன் போட்டிகளும் நடைபெற்றது.

11 மணி அளவில் திரு. ராமச்சந்திரன் அவர்களின் இறை வணக்கத்துடன் விழா ஆரம்பமானது. சங்கத்தலைவர் Dr. K. சிவசுப்பிரமணியன் வரவேற்புரை நல்கினார். மாநிலத் தலைவர் திரு. K. ராஜசுந்தரம் பிள்ளை தலைமையுரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து மாநில கௌரவத் தலைவர் திரு. கேப்டன் R.S. ஜெகதீசன் அமைப்புச் செயலாளர் திரு. கைலை. சண்முகம், மாநில பொதுச் செயலாளர் திரு. M. பாலசுப்பிரமணியன் மாநில பொருளாளர் திரு. G. ராமநாதன் மற்றும் சங்க நிர்வாகிகள் பலரும் வாழ்த்துரை வழங்கினார்கள்.

மதுரைச் சங்க மதிப்புரு தலைவர் தெய்வத்திரு. இரா. மாரியப்ப பிள்ளை மற்றும் மதிப்புரு ஆலோசகர் திரு. இரா. கணேசன் இருவருக்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

பின்னர் பவள விழா மலர் வெளியிடப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டது. சென்ற ஆண்டு 10–12 வகுப்பு தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுத்தொகையும், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும், மகளிருக்கு விலையில்லா புடவைகளும் அளிக்கப்பட்டது.

காலை 10 மணி முதல் Dr. S.G. பாலமுருகன் அவர்களின் குரு மருத்துவமனையின் இலவச மருத்துவ முகாமும், நீல்ஸ் மருத்துவமனையில் பல் பரிசோதனையும் நடைபெற்றது

மாநில அளவில் அனைத்து நிர்வாகிகளுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

மதுரை சங்க செயலாளர் திரு. C.M. சொக்கலிங்கம் நன்றி கூற விழா இனிதே நிறைவுற்றது. அனைவருக்கும் காலை சிற்றுண்டியும், மதிய விருந்தும் வழங்கப்பட்டது.

பவள விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பித்த அனைத்து கார்குல சொந்தங்களுக்கும் மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம்.

மிக்க நன்றி!

முனைவர் மு. சிவசுப்பிரமணியன்,
தலைவர்.

மாடாகுடி:

சங்க கூட்டம் சங்க தலைவர் திரு. N. முத்துகுமார் பிள்ளை அவர்கள் இல்லத்தில் 28.07.2024 அன்று மாலை நடைபெற்றது. மாநில துணைத்தலைவர் திரு. R.K. ஞானசேகரன் பிள்ளை, மண்டல செயலாளர் திரு. N. முத்துகுமார் பிள்ளை, ஒன்றிய பொருளாளர் திரு. ராஜேந்திரன், ஒன்றிய தலைவர் திரு. மணிகண்டன், நாதன்கோயில், மாடாகுடி, கிளியூர் மற்றும் வலங்கைமான் சங்க பொறுப்பாளர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மண்டல செயலாளர் அவர்களின் தாயார் N. ஆண்டாள் அம்மையார் மற்றும் புத்தூர் S. வேதவல்லி அம்மையாருக்கும் இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

குறைந்தபட்ச தகுதி ஒரு சங்கத்திற்கு பதினைந்து குடும்பங்கள் என்ற வீதம் குறைந்தபட்சம் இருக்க வேண்டும் எனவும், அனைத்து குடும்ப உறுப்பினர்களின் மாத சந்தா தொகை நிர்ணயிப்பது பற்றி கலந்து ஆலோசிக்கப்படும் என்றும், மகளிரணி மற்றும் இளைஞர் அணி அமைத்து செயல்பட வைக்கவும், மாநில சங்கத்தின் வேண்டுகோளின்படி அனைத்து உறுப்பினர்களிடமும் மாத சந்தா ரூ. 1/– (ரூபாய் ஒன்று) வசூலித்து ரசீது கொடுப்பதும் எனவும், பொதுப்பட்டியலில் முற்பட்ட வகுப்பினருக்கு 10% இட ஒதுக்கீடு வழங்க மாநில அரசை கேட்டுக்கொள்வது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.

ர. ரத்னா மணிவண்ணன்
மாடாகுடி மகளிரணி தலைவி
9345266503

ஆடூர் அமரர் **R. கனகசபை** பிள்ளையின் இளைய குமாரர்

கார்குலத்தின் ஆலமரம் அமரர் **R.K.S. பிள்ளை**யின்

ஏழாம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர் **R.K.S. சிவக்குமார் பிள்ளை**

கீ.ஆடூர் சிதம்பரம்

என்றும் தங்கள் நினைவில் வாழும்

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்

நண்பர்கள்

சிதம்பரம்

கார்குல செம்மல் T.S. தியாகராஜன்

மயிலாடுதுறை மக்களால் T.S.T. என்று அன்புடனும் மரியாதையுடனும் அழைக்கப்படுகின்ற திரு. டி.எஸ். தியாகராஜன் அவர்கள் 20–01–1930–ல் மயிலாடுதுறை வட்டம், தம்பிக்குநல்லான் பட்டிணத்தை சார்ந்த முளப்பாக்கம் எம்.எஸ். சாம்பசிவம் பிள்ளை, தங்கத்தாச்சி தம்பதியினருக்கு மகனாக பிறந்தவர். மயிலாடுதுறை நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. முடித்து இராணுவத்தில் ஆறு ஆண்டுகள் பணியாற்றி, குருக்கத்தியில் ஆதாரப் பயிற்சி பெற்று மேலையூர் உதவி பெறும் பள்ளியில் ஒரு மாதமும் தருமை ஆதீனம் நடுநிலைப்பள்ளியில் ஓர் ஆண்டும் ஆசிரியராக பணியாற்றினார். அதனை தொடர்ந்து குருமூர்த்தி நடுநிலைப்பள்ளியில் 35 ஆண்டுகளாக ஆசிரியராகவும், பள்ளியில் 1963 முதல் 2009 வரை பள்ளியின் செயலர் மற்றும் தொடர்பாளராகவும் பணியாற்றினார். 1952–ல் பாங்கல் ருக்மணி அம்மாள் அவர்களை திருமணம் புரிந்து இல்லறத்துடன் நல்லறம் நடத்தி வந்தார். தனது மைத்துனர் மகன் நல்லாசிரியர் லயன் மதியரசன் அவர்களை வளர்ப்பு மகனாக ஏற்றார். தனது மிகச் சிறந்த ஆலோசனைகளாலும் பெருமை மிக்க நடத்தைகளாலும் மயிலாடுதுறை டி.பி.டி.ஆர். தேசிய மேல்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணியாற்றும் வாய்ப்பினை ஏற்படுத்தி தந்தார். வளர்ப்பு மகன் மதியரசனுக்கு தனது சகலர் மகள் விஜயாவை திருமணம் செய்து, பேரன், பேத்தி, கொள்ளுபேரன் ஆகியோரோடு வாழ்ந்து காட்டியவர்

கல்வி பணி :

1963 முதல் 1988 வரை சுமார் 210 ஆசிரியர்கள் அடங்கிய மயிலாடுதுறை ஆசிரியர் சங்க செயலாளராக வெற்றிகரமாக பணியாற்றி கல்வித்துறைக்கு பெருமை சேர்த்தவர். 1974–ல் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் முன்னிலையில் மேதகு ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரியின் திருக்கரங்களால் 22–10–1977–ல் நல்லாசிரியர் விருது பெற்றவர். கல்வி துறையில் ஆசிரியர் தின விழாக்கள், மாவட்ட விளையாட்டு விழாக்களை சிறப்பாக நடத்தினார். அப்போதைய கல்வி துறை இயக்குநர் நெ.து. சுந்தரவடிவேலு அவர்களின் ஆலோசனையின் பேரில் அறிவியல் மாநாடுகள் மற்றும் பள்ளிச் சீரமைப்பு மாநாடுகளுக்கு செயலராக இருந்து பணியாற்றி அரசின் பாராட்டினைப் பெற்றார்.

கார்குல சமுதாயப்பணி :

1967 முதல் 1977 வரை மும்மாவட்ட கார்காத்தார் சங்க செயலராக பணியாற்றிய போது கல்லூரி மாணவர்களுக்கான புத்தக வங்கியினை துவக்கி திறம்பட நடத்தி வந்தார். 1974–ல் நடந்த கார்காத்தார் சங்க மாநில மாநாட்டுச் செயலாளராக சிறப்பான முறையில் பணியாற்றி மாநாட்டினை சமுதாயம் வியக்கும் வகையில் நடத்திக் காட்டியவர். மும்மாவட்ட கார்காத்தார் சங்கத்தின் சார்பாகநடத்தப்பட்ட மாணவர் இல்லத்தின் விடுதி காப்பாளராக 10 ஆண்டுகளாக சேவை செய்தவர். ஆண்டுதோறும் 50–க்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக உழைத்தவர். மும்மாவட்டம் சங்கத்திற்கு நிதியில்லாத நிலையில் ஒரு லட்சத்திற்கும் அதிகமான நிதியை சேமித்து வைத்துள்ளார். 22–09–1988 முதல் 1990 முடிய நகர கார்காத்தார் சங்கத்தின் தலைவராக இருந்து சிறப்பான ஆலோசனைகள் நல்கியவர்.

1963 முதல் 2009 வரை பல கார்குல ஆண், பெண் ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்தார்கள். கார்குல சமுதாயத்தினருக்காக, "திருவேங்கடம் திருமணதொடர்பகம்" ஒன்றை இலவசமாக நடத்தி பல திருமணங்களை நடத்தி வைத்தவர்.

மாநில கார்காத்தார் சங்கத்தின் துணைத்தலைவராக ஆறு ஆண்டுகள் பணியாற்றினார். இன்று மயிலாடுதுறையில் சிறப்புடன் செயல்படும் மெய்கண்டார் தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவதற்கு தனது உழைப்பினை நல்கிய திருமகனார்.

மயிலாடுதுறை மூத்த குடிமக்கள் அவையின் தொடர்ந்து பத்து ஆண்டுகளுக்கு மேலாக தலைவராக பணியாற்றிய காலத்தில் கடுவங்குடி E.S. கணபதிபிள்ளை அவர்களது குமாரர் டாக்டர். ஜி. கனகராஜ் அவர்களிடமிருந்து 7,200 சதுரடி நிலம் இலவசமாக பெற்று அங்கு முதியோர் இல்லம் கட்டுவதற்கு ரூ. 7,00,000/– நிதியினை திரட்டி நிரந்தர வைப்பு நிதியாக வைத்த பெருமை திரு. டி.எஸ்.டி அவர்களையே சாரும். மூத்த குடிமக்கள் அவை சார்பாக காவேரியாற்றின் தூய்மை கருதி வழக்கு தொடர்ந்து மயிலாடுதுறையில் பாதாள சாக்கடை திட்டம் அரசினால் கொண்டுவரப்பட்டது. மயிலாடுதுறையில் உ.வே.சா. பேரவையை துவக்கி, நிறுவனத் தலைவராக இருந்து பல ஆண்டுகள் தமிழ்பணி ஆற்றிய பெருமை உடையவர்.

மயிலாடுதுறை T.G.N. நகராட்சி மேல்நிலைப் பள்ளியின் பெற்றோர் ஆசிரியர் கழக துணைத்தலைவராக இறுதி வரை பணியாற்றினார்.

தமிழ்நாடு ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்க தலைவராக பணியாற்றி அரசிடமிருந்து நிலுவை தொகை பணபயணை பல ஆசிரியர்களுக்கு கல்வி துறையிடமிருந்து பெற்று தருவதில் தம்மை முழு மூச்சுடன் ஈடுப்படுத்தி கொண்டார்.

மயிலாடுதுறை கல்வி மாவட்ட உதவி பெறும் பள்ளி நிர்வாகிகள் சங்க தலைவராக பணியாற்றிய காலத்தில் உதவி பெறும் பள்ளிகளுக்கு அரசிடமிருந்து பராமரிப்பு தொகையினை முறையாக பெற்று தந்தார்.

மாயூரம் கூட்டுறவு நகர வங்கியின் இயக்குநராகவும், துணைத்தலைவராகவும் பணியாற்றி உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கியதுடன் தனி நபர் கடன் பெறும் முறைகளில் சீர்திருத்தங்களை கொண்டு வந்தார்.

1963–ல் மயிலாடுதுறை வட்டம் தான் பிறந்த ஊரான முளப்பாக்கத்தில் ஓராசிரியர் பள்ளி ஒன்றினை நிறுவுவதற்காக அரசிடம் கோரிக்கை வைத்து அதில் வெற்றியும் கொண்டார். இன்று அப்பள்ளி எட்டு வகுப்புகள் கொண்ட பஞ்சாயத்து நடுநிலைப்பள்ளியாக நிமிர்ந்து நிற்கிறது

மயிலாடுதுறை பெரியார் அரசு பொது மருத்துவமனையின் ஆலோசனைக் குழு உறுப்பினராக செயலாற்றியவர். சாலையோர ஏழைகளுக்கு ஆண்டுதோறும் குளிர் காலத்தில் போர்வைகளை வழங்கி உதவி செய்து வந்தார்.

மயிலாடுதுறை நகரம் மற்றும் சுற்று வட்டார பள்ளிகள், கல்லூரிகள், சேவை சங்கங்கள், திருக்கோவில்கள் போன்றவற்றிற்கு புரவலர் நிதியாகவும் வைப்பு நிதியாகவும் பொருட்களாகவும் மனமுவந்து நன்கொடைகள் அளித்துள்ளார் அவற்றின் மொத்த மதிப்பு ரூபாய் பத்து இலட்சத்திற்கும் அதிகமாகவே இருக்கிறது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இச்சேவைகளுக்கு எல்லாம் முத்தாய்ப்பு வைப்பது போல் பல கார்குல மணமக்களுக்கு ஏற்பு திருமணங்கள் நன்கொடையாளர்கள் உதவியுடன் நிகழ்த்தி சாதனை புரிந்தவர். T.S. தியாகராஜன் அவர்களின் மூத்த சகோதரர் தெய்வத்திரு. T.S. கோவிந்தராஜன், சென்னை சங்கத்தில் நம் இன வளர்ச்சிக்காக பாடுபட்டவர். வயது மூப்பு காரணமாக கடந்த ஓராண்டுக்கும் மேலாக வீட்டிலேயே ஓய்வில் இருந்த அவர் 07–07–2024 அதிகாலை 4.00 மணியளவில் இயற்கை எய்தினார்.

காலம் தவறாமை, கடின உழைப்பு, சொல்வதை செய்தல், நீதிக்கும் நேர்மைக்கும் மட்டும் அச்சமின்றி குரல் கொடுத்தல், ஆகிய இவரது அடிப்படை கொள்கைகளை தனது இறுதி காலம் வரை முழு மூச்சாய் பின்பற்றிய தகைமையாளர் திரு. டி.எஸ். தியாகராஜன் அவர்களாவார்.

"மனிதனுக்கு செய்யும் உதவியே இறைவனுக்கு செய்யும் சேவையாகும்"என்பதே இவரது குறிக்கோளாகும். வளர்க அவரது புகழ்!

என்னை இறைவன் நன்கு படைத்தனன்!

கலைவாணர் அரங்கில்
கலைமிகு வண்ண மேடை!
கன்னித் தமிழ் மணக்கும்
கவின்மிகு இளம் மாலை!
அமைச்சர்கள் புடைசூழ
எழிலார்ந்த காட்சி!
தன்னந்தனியே தமிழ்த்தாய்
மேடை ஏற்றினாள்!
பொன்னும் மணியும்
தோற்றுப் போனது
புகழ்மிகு தமிழின்
அழைப்பில்!
முதலமைச்சர் கரங்களிலிருந்து
'தமிழறிஞர்'! விருது!
பணி ஓய்விற்குப் பிறகு
பைந்தமிழ் தந்த பாராட்டு!
இரண்டாம் அத்தியாயமாக
இலக்கிய வாழ்வு!
"என்னை நன்றாக
இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத்
தமிழ் செய்யுமாறு" என்ற
"திருமூலரின்"
வரிகளாக
கல்லூரிப் பாடமாய்
எனது கவிதை!
முனைவர் பட்ட ஆய்விற்கு
என் கவிதைத் தொகுப்பு!
நூறாவது கூட்டத்தை நெருங்கும்
எங்கள் "பைந்தமிழியக்கம்"!
கவியரங்க மேடைகளில்
பங்கேற்பு!
மாத இதழ்களில்
பங்களிப்பு!
முகநூல், புலனத்தில்
அணிவகுப்பு!
உறவும் நட்பும் பொழியும்
விமர்சனத் தமிழ்!
தாய்மண் மேடையில்
தமிழ் தந்த இருக்கை!
ஊரார் பங்களிப்பில்
உள்ளூர் விருந்து!
தினமணி மாலைமலர்
நாளேடுகளின் புகழாரம்!
இன்னொரு வீதி
செய்வதாக வே
நெஞ்சம் இனிக்கிறது!
கண்கள் பனிக்கின்றன!

– மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்,
9578286891

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
20.01.1930

மறைவு :
07.07.2024

அமரர் T.S. தியாகராஜன்

1. மாநில கார்காத்த சங்க மேனாள் துணைத் தலைவர்,
2. மயிலாடுதுறை நகர கார்கார்த்த சங்க மேனாள் தலைவர்,
3. மாயூரம் கூட்டுறவு நகர வங்கியின் மேனாள் நிர்வாகக்குழு துணைத் தலைவர்
4. மயிலாடுதுறை மூத்தக்குடிமக்களவை மேனாள் தலைவர்,
5. மும்மாவட்ட கார்காத்தார் சங்கம் தலைவர்,
6. தமிழ்நாடு ஓய்வுப் பெற்ற ஆசிரியர்கள் சங்க கௌரவ தலைவர்

இதய தெய்வத்திற்கு இரங்கல் பா

மலர்ந்தது :
28–11–1949

உதிர்ந்தது :
25–06–2024

தெய்வத்திருமதி **G. சரஸ்வதி,** B.Sc.,

கண்தான வள்ளல்

பண்பின் பிறப்பிடமே பாசத்தின் ஒளிவிளக்கே
அன்பின் திருஉருவே அடக்கத்தின் மரு உருவே
கோவிந்தராஜன் குடும்பத்தின் குல விளக்கே
சிவனின் அருளால் சிவக்குமாரை ஈன்றவளே
அழகான யோக பிரியாவை மருமகளாக அடைந்தவளே
ஆசையுடன் உன்னை அரவணைக்கும்
மகள், மருமகளை கொண்டவளே
பாசமிகு பேர பிள்ளைகளை, கொஞ்சி மகிழ்ந்தவளே
எழிலான வாழ்வு தன்னை எழுபத்தி ஐந்து ஆண்டுகள் ஏற்றவளே
உற்றார் உறவினர்களை சீராட்டி மகிழ்ந்தவளே
அனைவரின் அன்புக்கும் அணையிட்டு சென்று விட்டாயே
உன் திருவடியை பின்பற்றி நாங்கள் வாழ்ந்திட
வழி செய்ய வேண்டுகிறோம்.

இங்ஙனம்

Er. S. கோவிந்தராஜன், B.E.,

Er. G. சிவக்குமார், M.S.,
S. யோகப்பிரியா, M.Sc.,
செல்வி. **S. வர்ஷா,** B.Sc.,
செல்வன் **S. விஷால்**

Er. G. மீனா, B.E.,
Er. V.K. ராஜேந்திரன், M.Tech.,
செல்வி. **R. ரம்யா,** MPH
செல்வன். **R. ராகுல்,** B.S.,

இதய தெய்வத்திற்கு இரங்கல் பா

மலர்ந்தது :
24.09.1954

உதிர்ந்தது :
21.05.2024

தெய்வத்திருமதி **S. லட்சுமி,** B.A.,

கண்தான வள்ளல்

இன்முகத்துடன் கூடிய இல்லத்தரசியே
அன்பு கணவனை உயிர் உள்ள வரை காத்தவளே
இனிய இரு புதல்வர்களின் அன்புத்தாயே
மருமகள்களை மகளைப்போல் அரவணைத்தவளே
பேரப்பிள்ளைகளின் பேரன்பிற்கு உரியவளே
உற்றார் உறவினர்களிடம் அன்புடன் உறவாடியவளே
எழுபது ஆண்டுகள் ஏற்றமிகு வாழ்வுதனை வாழ்ந்தவளே
அமைதியின் திருவுருவே புன்னகை அரசியே
அறுசுவை அமுதினை அருமையாய் சமைத்து
அனைவருக்கும் உபசரித்த அன்னபூரணியே
கொடை உள்ளம் கொண்ட லட்சுமியே
வாழ்ந்தது போதும் என்று இறைவனடி சேர்ந்தாயோ
என்றென்றும் எங்களால் உன்னை மறக்க இயலாதே
வானின்று எங்களை வாழ்த்தி மகிழ்ந்திடுவாய்

இங்ஙனம்

ம.அ. சீனுவாசன், ஓய்வு பெற்ற தலைமையாசிரியர்

Er. S. பிரவின்குமார்
Dr. P. ரம்யா
செல்வன். **P. தீபக்**

Er. S. சரவணகுமார்
Er. S. சுவாதிகா
செல்வன். **S. சித்தார்த்**

நெ.7, திரிபுரசுந்தரி நகர்,
தென்பாதி, சீர்காழி. செல் : 8220809333

கண்ணீர் அஞ்சலி

கு. லட்சுமி அம்மாள்

1927 - 2024

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, நெடுவாசல், தெய்வத்திரு. **கு. குஞ்சிதபாதம் பிள்ளை** அவர்களின் மனைவியும் எங்களது தாயாருமான திருமதி. **கு. லட்சுமி அம்மாள்** அவர்கள் 08-07-2024 திங்கட்கிழமை காலை 11.15 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்

மகன்கள் & மருமகள்கள்

K. ராஜேந்திரன்
(B.M. Barani Printers)

K. பரமசிவம்
(Postal Dept. Retd.)

R. வசந்தா
புதுச்சேரி

P. ஞானாம்பிகை
நெடுவாசல்

மகள்கள் & மருமகன்கள்

R. பன்னீர்செல்வம்
தெய்வத்திரு **P. ராஜேஸ்வரி**
திருச்சி

தெய்வத்திரு. **V. கணேசன்**
G. சகுந்தலா
கும்பகோணம்

மற்றும்

பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், பேத்திகள்

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
7–7–1936

மறைவு :
20–6–2024

முனைவர். திருமதி. **வேதவல்லி**

திருவாரூர் மாவட்டம் வேலங்குடி தெய்வத்திருவாளர்கள். இரா. சடையப்ப பிள்ளை – சௌந்தரநாயகி அவர்களின் மகளும், தெய்வத்திரு. கு. சிவப்பிரகாசம் அவர்களின் மனைவியும், எங்களது சகோதரியுமான முனைவர். திருமதி. **வேதவல்லி** அவர்கள் 20–6–24 வியாழக்கிழமை காலை 9.15 மணியளவில் சிவலோகப்பதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் தங்கள் நினைவில் வாழும்

மகன்கள் - மருமகள்கள்

சி. அருண்குமார்
திருமதி. சாந்தி
சி. முத்துக்குமார் (Late)
திருமதி. ஷர்மிளா

சகோதரர்கள்

கேப்டன் R.S. ஜெகதீசன்
திருமதி. கௌரி
திரு. S.T. சம்பந்தம்
திருமதி. Dr. சாந்தா (Late)
திரு. R.S. ராமலிங்கம்
திருமதி. Dr. ஜீவரத்தினம் (Late)

மற்றும் பேரன், பேத்திகள்

அ. சுனில் புவனேஷ்
திருமதி. ரம்யா
மு. வேதபிரகாஷினி
மு. மினுமுரீ

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
10.11.1950

மறைவு :
27.06.2024

திரு. **சு. சண்முகம் பிள்ளை**, M.A.,B.Ed.,

தலைமை ஆசிரியர் (ஓய்வு)

நல்லாசிரியர் விருது மற்றும் தேசிய விருது பெற்ற மாமனிதர்

புவனகிரி வட்டம் மேல்வலையமாதேவி குனவாலுட தெய்வதிருவாளர்கள் M.V.M. சுப்பிரமணியம் பிள்ளை (நாட்டாமை) ஜானகி அம்மாள் இவர்களின் இரண்டாவது மகனும், எங்களுக்கு வழிகாட்டி நல்வழிப்படுத்திய எங்களது தந்தையாருமான வாத்தியார் பிள்ளை என்கிற

திரு. **சு. சண்முகம் பிள்ளை** அவர்கள்

27.6.2024 வியாழக்கிழமை காலை 11.30 மணி அளவில் வளையமாதேவி எங்களது இல்லத்தில் சிவலோக பதவி அடைந்தார் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்து கொள்கிறோம். எங்களது துயரத்தில் பங்குகொண்டு ஆறுதல் கூறிய நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் தங்கள் நினைவில் வாழும்

மனைவி

ச. சுசிலா (தலைமை ஆசிரியை) (ஓய்வு)

மகன்: **ச. கார்த்திகேயன்** M.Sc.,M.A.,B.Ed. (தலைமை ஆசிரியர்)

மருமகள்: **கா. அபிநயா** B.Sc., M.A., B.Ed. (இடைநிலை ஆசிரியர்)

பேரப்பிள்ளைகள்: **கா. கவின்**, **கா. ஹன்சிகா**

தம்பி: **சு. கல்யாணசுந்தரம்**

பரம்பறை அறங்காவலர் (மூக்குத்தி அம்மன்)

கண்ணீர் அஞ்சலி

தோற்றம் :
15.08.1937

மறைவு :
01.08.2024

N. மங்களம் பிள்ளை

காட்டுமன்னார் கோவில் வட்டம் வீராணநல்லூர் கிராமம், வெள்ளாழத் தெரு, தெய்வத்திரு. நடேசன் பிள்ளை – கோகிலம் இவர்களின் மகனும், தெய்வத்திரு. குஞ்சிதபாதம் பிள்ளை – சரஸ்வதி இவர்களின் மருமகனும் திருமதி சேது அம்மாள் அவர்களின் கணவரும் எங்களது தந்தையாருமாகிய **N. மங்களம் பிள்ளை** அவர்கள் 01.08.2024 வியாழக்கிழமை இரவு 11.30 மணியளவில் இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம். எங்களது துயரத்தில் பங்கேற்று ஆறுதல் கூறிய உற்றார், உறவினர்கள், கார்குல உறவுகள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

M.S. ஆனந்த்
N. ராஜவல்லி
A.R. தன்வந்த்

G.நிரஞ்சனா
P. கணேஷ்

M. ஸ்ரீதர்
V. புஷ்பலதா
S.P. ஆதித்யா

Posted at Pathrikachanel, Egmore
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH(C) / 405 /2022 - 2024 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/22-24
Date of Publication : 15th of Every Month
15th / 16th August 2024

CHOZHA HOTELS

Hotel Kanakabhishegam
First Hotel From The Temple

One of the Recent feedbacks in Google reviews....

We are truly Blessed by ABIRAMI AMMAN to receive such wonderful comments from our Guests. What more could we ask for ?.

" Our Family stay at Hotel Kanakabhishegam, located at No.6 Sannathi Street, in Thirukadaiyur,Tamil Nadu For my sister's 60th wedding anniversary and it was absolutely delightful! From themoment the hotel initiated the Arathi after the marriage which made us feel like home . I arrived at 16th July 2023, I was greeted warmly by the friendly staffs Mrs. Thiruparasundari and Mrs. Nivetha who made us feel right at home. The room was impeccably clean andcozy, with all the amenities I needed for a comfortable stay with a reasonable price. The locationis fantastic, nestled in a quiet neighborhood yet still close to Temple. where you can get a templeGopuram view from the balcony..I highly recommend Hotel Kanakabhishegam to anyone looking for a peaceful and welcoming place to stay. Thank you to the wonderful team & front desk Person Mr.Jeeva for making my visit so memorable—I will definitely be back!" The food at Hotel Kanakabhishegam is simply outstanding! During our all Guest & Relatives stay, I had the pleasure of enjoying delicious Break fast & Kalyana Virunthu meals prepared with fresh, local ingredients that truly showcased the chef's skill and creativity. Each dish was a delightful blend of flavors and textures, and there was always a great variety to choose from. The dining experience itself was also exceptional. The ambiance was cozy and inviting, perfect for enjoying a meal with friends or simply unwinding after a day of exploring. The restaurant Manager Mr.Balaji & Mr.Manikandan & team staff Mr. kailasapillai were attentive and friendly, ensuring that every meal was a memorable occasion. I would highly recommend Hotel Kanakabhishegam not only for its comfortable accommodations but also for its outstanding culinary offerings. It's a true gem for anyone who appreciates great food served with warmth and care." It was very glad to meet The Gentleman Mr. Prakash the Hotel MD at the time of our leaving he was very kind and generous....." By Bala.

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

Published by : K. SHANMUGAM, on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 1/7, Gopal Street, Saidapet Road, Vadapalani, Chennai - 600 026. **Editor : S. ANBALAGAN**